155

# அபராதி

1-2-0



O-,3MKN, A
N53
104338

வது நவீனம்

# அபராதி

இரண்டாம் பதிப்பு

69-வது

நாவல்

ரூ. 1—2.

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்

# தூண்டுகோல்

விளக்கிற்கு ஒரு தூண்டுகோல் எத்தனை அவச்யமோ அதுபோல் மனித வாழ்க்கையிலும் சகல அம்சத்திற்கும் ஒரு தூண்டுகோல் போன்ற பெரியவர்களின் துணையும் வார்த்தையும் அத்யாவச்யமல்லவா!

உள்ளிருக்கும் விஷயங்களை ஊக்கி வெளிக்கிளப்பும் தூண்டுகோலாய் அமைந்த, எனது தாயாருக்குச் சமமான ஓர் அம்மாள் சமீபத்தில் என்னைச் சந்தித்தபோது அவர் "உலகரீதியில் வாழ்க்கையின் சித்திரங்களை அததன் சிறப்புக் கேற்ற வர்ண ஜாலங்களைத் தீட்டி எத்தனையோ புத்தகங்களை எழுதிவிட்டாய். ஆனால்.....(எனக்கும் அந்தம்மாளுக்கும் தெரிந்த சில பெண்கள்,......இப்பொழுதும் உயிர்வாழ்ந்து கொண்டு தானும் ஒரு மனுஷி என்று வெட்கமில்லாது உலாவும் வயிற்றெரிச்சலைக் கூறி) இந்த விஷயங்களைமட்டும் நீ ஏன் இன்னும் எழுதவில்லை?" என்றார்கள். "எழுதினால் பலன் இருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்றேன். "ஏன் பலனில்லாமல்? அவர்களே இந்தப் புத்தகத்தைப் படித்தால் தாம் செய்த மகத்தான குற்றம் தெரியாமலா இருக்கும்? இன்னும் அவர்களைப் போன்ற பெண்கள்—கணவன் இருப்பவர்களும்...கணவன் இறந்தவர்களும்—படித்தால் கட்டாயம் சற்று நெறியுடன்தான் இருப்பார்கள். எழுத்தின் வன்மையை நீ அறியவில்லையா?...பழைய காலத்திய சரித்திரம், புராணம் ...முதலிய கதைகளின்மீது தானே நாம் நடக்கிறோம்...அதே போல் இம்மாதிரி கதைகள் சாதாரண மனிதர்களுக்கு என்றென்றும் உபயோகமாயிருக்கும் என்பதுதான் என் துணிபு. ஆகையால் நீ அவச்யம் எழுது" என்று உற்சாகமளித்தார்கள். அதன் பிறகே உண்மையான பல சம்பவங்களை ஆதாரமாகக் கொண்டு இக்கதையாகிய கற்பனைக் கட்டடத்தை எழுப்பியிருக்கிறேன்.

அந்தப் பெரியம்மாளுக்கு என் வணக்கம்...

104338

வை. மு. கோதைநாயகி.

43105

# அபராதி

“உலகம் போகிற போக்கில்தானே நாமும் போக வேண்டும்? உடம்புக்கு வந்தால் வைத்யம் செய்தாகவேண்டிய கடமையைச் செய்துவிடுவோம்; பிறகு பிழைப்பது அவன் கையிலிருக்கிறது. இதற்காக வைத்தியம் செய்துகொள்ள மாட்டேன் என்றால் முடியுமாம்மா! உன் குழந்தைகளுக்காக நீ உன் உடம்பை இனி ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமேயன்றி அச்ரத்தையாக விடக்கூடாது. மஞ்சுளா! இதோ பாரு. ஜுரமாகப் படுத்து இன்று நான்கு நாட்களாகி விட்டன. கஷாயத்திற்கும் கை வைத்தியத்திற்கும் அசைவதாகக் காணவில்லை. உன் கணவனுக்கு வந்த எமன் டைபாயிடாகவே உனக்குமிருக்குமோ! என்று பயமாயிருக்கிறது. ஆகையால் நான் டாக்டர் சேகருக்குச் சொல்லியனுப்பியிருக்கிறேன். வீணாக முரண்டிக்கொள்ளாதே!” என்று சுமார் 50 வயதுடைய பெரியவர் படுத்திருக்கும் தன் பேத்தியிடம் கூறினார்.

கட்டிலில் கண்ணை மூடியவாறு படுத்துள்ள யுவதிக்கு 20 வயதிருந்தால் அதிகம். அவளுக்கு அளவற்ற அழகைக் கொடுத்த கடவுள் அதிருஷ்டத்தைத்தான் கொடுக்க மறந்துவிட்டார். மிகமிகச் சிறுவயதில் முதற்கடவுளாகிய தாய் தந்தையரை இழந்தாள். தாயற்றக் குழந்தையான மஞ்சுளாவை தாயாரைப் பெற்ற பாட்டனார் வெகு அன்புடன் வளர்த்து விவாகத்தையும் செய்துவைத்தார்.

தனது துயரத்தை மஞ்சுளாவின்மூலம் மறந்து தன் மகளைப்போலவே பார்த்துவந்தார். கடவுளும் துயரத்தை மறக்கச்செய்ய ஆனந்தத்தைக் கொடுப்பதுபோல் மஞ்சுளாவுக்கு வெகு அழகான வரனையும் கொடுத்து அவளுடைய மிகச் சிறு பிராயமாகிய 15 வயதில் ஒரு ஆண் குழந்தையையும், 18 வயதில் ஒரு பெண் குழந்தையையும் கொடுத்துக் கிழவரின் மனமகிழ்ச்சியைத் தூண்டிவிட்டார்.

ஆனால், விதி என்பது ஒருபுறம் தனது கையில் திராசை வைத்துக்கொண்டு அவரவர்களின் பாப புண்ணியங்களை எடைபோட்டுக்கொண்டே இருக்கும் மர்மத்தை மனிதர்களால் அறியக்கூடுமா?...அதை அறியாமலிருக்கும் குருட்டு வாழ்க்கை நடத்தும்போதே கர்வமும் நாம் என்கிற ஆணவமும், நமக்காகக்குள்ளே இத்தனை செல்வம்.....சந்தானம்... சம்பத்து...கௌரவம்...என்றெல்லாம் உலகம் தலைகவிழ்ந்து விடுகிறது.

கிழவர்மட்டும் அவ்விதிக்கு விலக்காக இருக்கமுடியுமா? தன் மகள் மறைந்துவிட்டாலும் பேத்தியால் துக்கம் அடியோடு மறைந்து கொள்பேத்தி, பேரனுடன் குலாவும் பாக்யமும் மகிழ்ச்சியும் கிடைத்தது தன் அதிர்ஷ்டந்தான், இதுவே போதும் என்று மனம் துள்ளினார். பின்னால் வரப்போகும் பயங்கரத்தை யாரறியமுடியும்?

திடீரென்று சந்தோஷக் கோட்டையை இடித்துத் தவிடு பொடியாக்கித் தரைமட்டமாக்கிவிட்டதுபோல் 19 வயதுக்குள்ளே மஞ்சுளாவின் தலையெழுத்தை மாற்றி அவளை விதவை என்கிற பயங்கர ப்ரளயத்தில் வீழ்த்திவிட்டது. டைபாயிடு ஜுரத்தில் கண்ணை மூடிய மஞ்சுளாவின் கணவன், கிழவரின் வாழ்க்கையில் மகத்தான எரிமலையைத் தள்ளிவிட்டுப் போய் விட்டான்.

கிழவரின் உயிர் ஏதோ உடலில் ஊசலாடிக்கொண்டிருந்ததே யன்றி அவருடைய சகல ஆணவமும் அடங்கிவிட்டது. இன்னும் 20 வயதுகூட நிரம்பப் பெறாத இச்சின்னஞ்சிறு குழவி தன் காலத்திற்குப் பிறகு குழந்தைகளுடன் எவ்வாறு ஜீவிக்கமுடியும்...என்கிற நினைவுதான் இரவு பகல் அவரைச் சித்திரவதை செய்துவந்தது.

டைபாயிடு, என்பதை நினைத்தாலே கிழவரை அக்கினி ஆற்றில் தூக்கிப்போடுவதுபோல் தோன்றும். கிழவருக்குச் சொற்ப நிலம் புலன்கள்தான் ஆஸ்தி. அதுதான் ஜீவனத்திற்கு மூலாதாரம். பாடுபட சக்தியில்லாததால் சோவாசி கொடுத்ததுதான் பலன். சாப்பாட்டிற்கே சரிக்கட்டமுடியாத நிலைமையும் வந்துவிடுமோ? இந்த மூன்று ஆத்மாக்களையும் எப்படி ரக்ஷிப்பது என்கிற கவலையால் கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டார். மஞ்சுளா ஜுரம் என்று படுத்ததும் கிழவரின் வயிற்றில் நெருப்பை அள்ளிக்கொட்டியது

போல் ஒரு அதிர்ச்சி எதனாலோ உண்டாகியது. இந்தப் பாவிப் பெண்ணும் வாயைப் பிளந்துவிட்டால் இந்த இரண்டுகுருத்து களை வைத்துக்கொண்டு இன்னும் என்ன பரிபவப்படவேண்டுமோ! என்கிற ஒரு கலக்கம் எதனாலோ அவர் மனத்தில் அபசகுனம்போல் பட்டது.

மஞ்சுளா டாக்டரிடம் மருந்து வாங்கிக்கொள்ள முதலில் மறுத்துவந்ததால் கிழவர் தன் கைமருந்துகளே கொடுத்து வந்தார். நாட்கள் நாலாகியும் ஜுரம் குறையவே இல்லை. இருக்கும் குறிகளைப்பார்த்தால் அவள் கணவனுக்கு இருந்தது போலவே தோன்றியதால் கிழவரின் புண்பட்டஉள்ளம் பின்னும் துள்ளித்துடித்தது. ஏற்கெனவே உள்ள அவருடைய கவலையும் போராட்டமும் பலமாக ஊர்ஜிதமாகி விட்டதால் இனி எப்படியும் டாக்டரையழைத்துக் காட்டாமலிருக்கக் கூடாது என்கிற தீர்மானத்திற்குவந்து அவளைக் கேட்காமலேயே டாக்டருக்குச் சொல்லியனுப்பினார்.

பிறகுதான் நாம் முதலில் கூறியபடி பேத்தியிடம் விஷயத்தைச் சொல்லியதும் மஞ்சுளா அவளையறியாது விசும்பி விசும்பி அழத்தொடங்கினாள். "ஐயோ! ஏன் தாதா என்னைக் கேட்காமல் இப்படிச் செய்தீர்கள்? இந்தப் பாழாய்ப்போன கட்டைக்கு வைத்தியம் வேறு செய்து இன்னும் காப்பாற்ற வேண்டுமா? சனியன் தொலையட்டுமே!...என்று சும்மா இருக்காமல் ஏன் தாதா இம்மாதிரி சோதனை செய்கிறீர்கள்? அந்த டாக்டர் முகத்தில் எப்படி விழிப்பது?... அவருக்கு வைத்தியம் செய்த அதே மகானுபாவர்தானே தாதா...என்று இவள் அழும்போது வாசலில் கார் வந்து நின்ற ஓசைகேட்டதும் கிழவர் எழுந்து ஓடினார். மஞ்சுளா போர்வையை இழுத்து போர்த்திக் கொண்டு குப்புறப் படுத்தாள். அவள் மனத்தில் செய்யும் போராட்டத்தைப் பகவான்தான் அறிய முடியும்.

---

## 2

டாக்டரைப் பார்த்த உடனேயே கிழவருக்கு அவரை அறியாது திடீரென்று துக்கம் துக்கமாக வந்து தன் சவுக்கத்தால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பிப் புலம்பிவிட்டார். வந்த டாக்டர், வீட்டையும் கிழவரையும் பார்த்தவுடனே...சென்ற வருஷம்தான் வைத்யம் செய்ய வந்த

விடுதான் என்றும் அந்த நோயாளி தேறுதுபோய்விட்டதும் கிழவர் அழுவதற்குக் காரணமும் நன்றாகப் புரிந்து விட்டதால் சற்று மனத்தடுமாற்றத்துடன் தியங்கினார்.

பின்பு கிழவரைப்பார்த்து...“உம்...விதி செய்யும் தாண்டவத்திற்கு யார் என்ன செய்யமுடியும் தாதா! ஏதோ! போனது போய்விட்டது. இனி அழுது லாபமென்ன? நான் தான் முதல்முதல் பார்த்த அன்றே அது தேறுது என்று சொல்லிவிட்டேனே...இப்போதுயாருக்கு தாதா உடம்பு?”... என்று அவரே விசாரித்தார்.

கிழவர் சமாளித்துக்கொண்டு ‘‘என் பேத்தி மஞ்சுளாவுக்கே வந்துவிட்டது டாக்டர்’...இரண்டு குழந்தைகளையும் என்னையும் தெருவில் விட்டுவிட்டுப் போய்விடுவாளோ!...என் னிதயத்தில் மகத்தான பயமும் திகிலும்புகுந்துவாட்டுகின்றன டாக்டர்!...அவளுக்கிருக்கும் துக்கத்தில் வைத்யமே செய்து கொள்ளமாட்டேன் என்கிறாள். நானாக பலவந்தம் செய்து அவளுக்குத் தெரியாமலேயே உங்களை வரவழைத்தேன்... உள்ளே வாருங்கள்’’ என்று கண் கலங்கியபடியே அழைத்து வந்தார்.

மஞ்சுளா குப்புறப் படுத்துப் புலம்புவதைக் கண்டு டாக்டரின் மனது இளகியது...அவள் கணவனுக்குத் தான் வைத்தியம் செய்ய வந்தபோதெல்லாம் அவள், லக்ஷ்மீகரம் குன்றாது குளித்து அழகாகக் குங்குமப்பொட்டும் தலையில் புஷ்பமும் ப்ரகாசிக்கக் கணவனருகிலேயே இருந்து சிசுருஷை செய்ததும், ‘டாக்டர்! அது செய்யலாமா? இது கொடுக்கலாமா?’ என்று தன்னை சுருசுருப்பாய்க் கேட்டதும் கணவனிடமுள்ள அன்பைக் கொட்டியளப்பது போன்ற உணர்ச்சியுடன் அவள் நடந்துகொண்ட மாதிரியும், திடீரென்று கண் முன் தோன்றியதும் சற்றுநேரம் இமை இசைக்காமல் நின்றார். இதற்குள் கிழவர் பேத்தியின் அருகில் சென்று “அம்மா! மஞ்சுளா! ஏனம்மா புலம்புகிறாய்?...இனி உன்னை நீ பார்த்துக் கொள்ளவேண்டுமேயன்றி பழைய விஷயத்திற்கு அழுது லாபமில்லை. உலகமறியாத உன் குழந்தைகளுக்காக நீ கட்டாயம் இன்னும் நூறு வருஷங்கள் கூட உயிருடன் இருந்து, தகப்பனும் நீ தாயும் நீ என்று பாடுபட்டு அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அதோ பார் டாக்டர் சேகர் வந்திருக்கிறார்...திரும்பம்மா!’’ என்று மிக்க அன்புடன் கூறினார்.

"அம்மணி! இதோ பாருங்கள். உம்...இனி அழுதால் பயனென்ன!...உங்களை இந்தமாதிரிவேஷத்தில் பார்க்க மனது துடிக்கிறது. என் செய்வது? எல்லாம் காலக்கொடுமையின் கூற்று" என்று தானே முன்கூட்டிப்பேசினார். சில விநாடி வரைல் அடக்கமாட்டாமல் புலம்பிப் புலம்பிச் சோர்ந்தும் போய் மெல்ல முகத்தைத் துடைத்துக்கொண்டு திரும்பிப் படுத்தவாறு..."உம்...இப்பாவியைக்கூடப் பிழைக்கவைக்க வேண்டுமா! கிழவர்தான் அஜ்ஞானத்தில் உங்களை அழைத்தால் நீங்கள் ஏன் வந்தீர்கள்?...எனக்கு மருந்தே வேண்டாம்"...என்று பிடிவாதம் செய்தாள்.

கிழவரும் டாக்டரும் சமாதானம் கூறிய பின், டாக்டர் பரீக்ஷித்தார். டாக்டர் முகத்தில் களை மாறியதைக்கண்ட கிழவர்...."டாக்டர்! என்ன ஜுரம்...நான் நினைத்தபடி டைபாயிடுதானு?...அதே எமன் வந்துவிட்டதா!"...என்று பதட்டத்துடன் கேட்டார்.

டாக்டர்:—இல்லை...டைபாயிடு இல்லை, டபிள் நிமோனியா இது. பக்கத்தில் நர்ஸோ அல்லது வேறு யாரேனும் கனிகரப் பட்டவாளோ உட்கார்ந்து ஒத்தடம் கொடுக்க வேண்டும். ஆண்டிப்ளஜெஸ்டின் போடவேண்டியிருக்கும்; ஜுரம் அதிகமாகவிருப்பதால் ஐஸ் வைக்கவேண்டும். உமக்கு அம்மாதிரி செய்யக்கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா!

இதைக் கேட்டதும் கிழவருக்கு இடி விழுந்தது போன்ற அதிர்ச்சி உண்டாகி அப்படியே அசைவற்று விட்டார். இதுபரியந்தம் அடக்கி வைத்திருந்த கண்ணீர் பொங்கிவந்துவிட்டது. கிழவர் தழுதழுத்த குரலில்..."எனக்குஅவள்தான்கதி; அவளுக்கு நான்தான் கதி. வேறு திக்கில்லையே, டாக்டர்!".... என்று கதறினார்.

டாக்:—இதென்ன தாதா! இப்படி அதைரியப்படலாமா! மனிதர்களைப்பிடிப்பதற்காகவே பகவான் வியாதிகளைப்படைத்திருக்கிறார். மனிதன் தனக்கு பகவான் கொடுத்த அறிவை அறிந்து அதன்படி சகலவிதமான சீலஒழுக்கதுடனும்நடந்து கொண்டு கூடுமான வரையில் வ்யாதியைத் தடுத்துக்கொள்ள முயல்கிறான். எந்த விதமான சவுகரியமுமின்றி மனோவேதனையால் நொந்து விட்டால், மெலிந்தவர்களைத்தான் வ்யாதி சடக்கென்று பிடிக்கிறது. நீங்கள் பயப்படவேண்டாம். சரியானபடி கவனித்தால் நன்றாகக் குணமாகிவிடும்...ஒன்று செய்யுங்கள்.

ஆஸ்பத்திரியில் கொண்டு விட்டுவிடுங்கள்; வெகு ஜாக்ரதை யாகப் பார்த்து சிகிச்சை செய்வார்கள்; வீட்டில் வைத்துக் கொண்டு சரியானபடி கவனித்துச்செய்யாவிடில் பலமாக ஆய்விடும். ஒரு பயமுமில்லை. யோசனையே வேண்டாம். உடனே கொண்டுவிடுங்கள். இதோ சீட்டு எழுதித்தருகிறேன். நானும் கவனித்துக்கொள்கிறேன். என்னம்மா! ஆஸ்பத் திரிக்கு வந்துவிடு; பத்து தினத்தில் குணமாகி வீட்டிற்கு வந்துவிடலாம். என்ன யோசனை?......சரி...சரி....நான் வரு கிறேன். தாதா......இப்போதே அழைத்துப் போங்கள்" என்றார். கிழவருக்கு ஒன்றுமே தோன்றாது குழம்பியது.

---

3

டைபாயிடு இல்லை என்றது ஒருபக்கம் சந்தோஷம்; எனினும் தன் மனைவிக்கு நிமோனியாதான் வந்து, கொண்டு போய்விட்டது என்கிற நினைவு இத்தனை வருஷங்களுக்குப் பிறகு இப்போது சடக்கென்று நினைவிற்கு வந்து கிழவரைப் பல வருஷங்களுக்குப் பின்னால் இழுத்துச்சென்று அந்த பரி தாபகரமான சம்பவங்களை நினைப்பூட்டின. தன்மகளைப் பரதேசி யாய் விட்டுச் சென்றது போதாதென்று மகளும் ஒரு பரதேசியைக் காலில் கட்டிச்சென்றாள். அதுவும் போதா தென்று இவள் இரண்டு குழந்தைகளைக் காலில் கட்டிவிட்டுப் பறந்துவிடப் போகிறாள். அப்படி ஏதாவது சம்பவம் நேரு மாயின் குளத்திலோ, கிணற்றிலோ விழுந்துதான் என் ப்ராணனை மாய்த்துக்கொள்ள வேண்டுமேயன்றி உயிருடன் உலாவினால் ஊரார் கல்லாலடித்துச் சிரித்து "மகாபாவி எல்லோரையும் விழுங்கிவிட்டு இவன்மட்டும் தீர்க்காயுஸா யிருக்கிறான்" என்று ஏளனம் செய்வார்கள். என் கல்நெஞ்சம் பொறுத்தாலும் உலகம் பொறுக்காது......

என்று ஏதேதோ யோசனையி லாழ்ந்திருக்கையில் குழந்தைகள் ஒன்றோடொன்று சண்டைபோட்டுக் கொண்டு அழுவதைக்கேட்ட மஞ்சுளா, "தாதா!...குழந்தைகளை இப் படிக் கொண்டுவாருங்கள். நான் ஒரு கட்டை இங்கிருக்கும் போதே சண்டையிட்டுக்கொண்டு புலம்பும் குழந்தைகளை நீங்கள் தனியாக எப்படி தாதா வைத்துக்கொண்டுசமாளிக்க முடியும்? ஆகையால் கடவுள் விட்ட வழியாகட்டும்; நான் ஆஸ்

பத்திரிக்குப் போகமாட்டேன். வீணுக என்னை வற்புறுத்த வேண்டாம்'' என்று சற்று அழுத்தமான குரலிலேயே கூறிப் பின் சின்ன குழந்தையைத் தூக்கி மடியில் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள்.

கிழவருக்கு எப்படியும் பதில் சொல்ல முடியவில்லை. குழந்தைகளை வைத்துக்கொண்டு தான் என்ன செய்வது என்கிற கவலையும் பயமும் அவரைபாதித்தன. கடவுள்விட்டவழியாகட்டும் என்றுபேசாமலிருந்துவிட்டார். அன்று செல்ல மறுநாள் உடம்பு பின்னும் அதிகமாகி முதுகு, மார்பு முதலியவற்றில் வலியும் கண்டுவிட்டது.

அன்று பூராவும் ஆஸ்பத்திரிக்குப் போகாததால் டாக்டர் 'ஏன் வரவில்லை?' என்று தானுகத் தேடிக்கொண்டு வந்துவிட்டார். இதைக்கண்ட கிழவரும்மஞ்சுளாவும் மிக்கஆச்சரியமடைந்ததோடு தமது திக்கற்ற தன்மையை விளக்கிக் கூறினுர்கள்.

இதைக்கேட்ட டாக்டர் மிக்கவிசனமடைந்து'' அடாடா! இம்மாதிரி நிலைமை என்று என்னிடம் நேற்றே சொல்லியிருந்தால் என் மனைவியை சகாயத்திற்கு அனுப்பியிருப்பேனே! ஆபத்தில் உபகாரம் செய்வதுபோன்ற உத்தமம் வேறு என்ன இருக்கிறது சார்! என் மனைவியும் மகாகெட்டிக்காரி.நன்ருகப் படித்தவள். என்னுடன் ஒத்துழைக்கும் பொருட்டு அவளும் டாக்டருக்கே படிக்க மிகவும் ஆசைப்பட்டாள். அத்தனை பெரிய பதவியும் பொறுப்பும் வந்துவிட்டால் தன் குடும்பத்தைக் கவனிக்க நேரமில்லாது போய்விடும் என்பதனுல்அவளை நர்ஸ் பரீக்ஷையில் மட்டும் தேற்றிவிட்டேன். இப்போது அவளால் நடக்கும் உபகாரம் சொல்லமுடியாது. வீட்டிலும் வெகு நன்ருகப் பார்த்துக்கொள்கிருள். நானும் பெரிய சம்சாரி.7 குழந்தைகளுக்கு நாங்கள் அதிகாரிகள். வேலையாட்கள் பலபேர் இருந்தும் என்மனைவியின் மேல்பார்வையில் குடும்பத்தில் மிகவும்சாந்தியும் அமைதியும் குடிகொண்டிருக்கின்றன. அவளைப்பற்றி நான் பேசும்போது ஒரு தனித்த பெருமையையும் சந்தோஷத்தையும் அடைகிறேன்.''

என்று கூறியவாறு தன் கார் ட்ரைவரைக் கூப்பிட்டு ''வீட்டிற்குப் போய் அம்மாளை அழைத்துவா!'' என்ருர். டாக்டர் தொழிலே மிக்க பரோபகாரமானதும், பிறருடைய பிணியைத் தீர்த்து அவர்களுக்கு உழைக்கவேதான் ஜென்மமெடுத்

திருப்பதுமாகவிருந்தும், அந்தப் புனிதத் தன்மையைச் சில டாக்டர்கள் அறிவதே இல்லை. தான் ஏதோ நோயாளிகளிடம் வியாபாரம் செய்வதற்கே தொழில் வைத்திருப்பதாகவும் எண்ணி பணம்! பணம்! என்று பறந்து தன் பெயரையும் கெடுத்துக்கொள்ளுகிறார்கள்.

சிலர் தன் தொழிலின் புனிதத்தன்மையை அறிந்து கூடுமானவரையில் ஒழுங்காக நடக்கிறார்கள். எங்கோ ஒரு சிலர்தான் பணத்தைப் பாராமல் தன் கடமையில் கண்ணுயிருந்து உழைக்கிறார்கள். அதைவிட இந்த டாக்டரின் போக்கு மிகவும் அதிசயிக்கத்தக்க முறையிலிருப்பதைக் கண்ட கிழவர் வியப்புற்று பேசத்தெரியாது நின்றார்.

மஞ்சுளாவுக்கும் பேசவே தெரியவில்லை. தனக்கும் கணவன் உயிருடனிருந்தால் தானும் எத்தனையோ உயர்வாய், ஒற்றுமையாய்க் குடித்தனம்செய்திருக்கலாமே! அந்த பாக்யம் அற்றுவிட்டதே என்று விசனித்தாள். இதற்குள் கார் வந்து நின்றதும், மிகவும் எளிய முறையில் படாடோபமற்ற நாகரீகத்துடன்கூடிய ஒரு மாது சிரித்த முகத்துடன் வந்து..... "டாக்டர்! அழைத்துவரச் சொன்னீர்களாமே...என்னசமாச்சாரம்...என்னம்மா உனக்கு உடம்பு?"...என்று ஒரு கண்ணால் மஞ்சுளாவையும் பார்த்து விசாரித்தாள்.

டாக்:—உனக்கு வேலையில்லாமல் உன்னை அழைப்பேனா! இந்தம்மாளுக்கு டபிள் நிமோனியா வந்திருக்கிறது. இந்தக் கிழவரைத் தவிர வேறு திக்கே இல்லையாம். குழந்தைகளை விட்டு ஆஸ்பத்திரிக்குப் போகமாட்டேன் என்கிறாள். இன்று உயிர் இருக்கிறது; நாளை அதற்கும் பேராபத்து வந்துவிட்டால் அப்போது என்ன செய்வது? சென்ற வருஷந்தான் இவள் கணவர் டைபாயிடில் இறந்துவிட்டார். அந்த விசனத்தில் தன்னை மிகவும் நிரஸ்கரித்துப் பேசுகிறாள், இது சகஜந்தானே! பாவம்! இவள் வ்யாதியை வளர்த்தால் குழந்தைகளுக்கு முதலுக்கே மோசமாகிவிடும்; ஆகையால் நீ குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு இவளை ஆஸ்பத்ரிக்கு அனுப்புகிறாயா! அன்றி இங்கேயே வந்து உதவி செய்கிறாயா! அதற்காகத்தான் கூப்பிட்டேன்" என்றார்.

இதைக்கேட்ட அந்தம்மாள் "டாக்டர்! டபிள் நிமோனியா என்றால் ஆஸ்பத்திரியின் உதவிதான் தேவை. வீட்டில் நான் வந்து பார்ப்பது போதாது. குழந்தைகளை நான் வெகு

ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்கிறேன். அவளை நீங்கள் ஆஸ்பத்திரிக்கே அனுப்புங்கள்......என்னும்மா'......குழந்தைகளைப்பற்றி நீசற்றும் கவலைப்படாதே. நானும் குழந்தைகளைப் பெற்ற தாய்தான். தினம் உன் குழந்தைகளை உன்னிடம் கொண்டு காட்டுகிறேன். நான் ஜாக்ரதையாக வைத்துக் கொள்வேன். நீ சந்தேகமோ, சங்கடமோ படாது போய் உடம்பைக் குணப்படுத்திக்கொண்டு வாம்மா!

தாதா! நீங்களும் கண் கலங்காது தைரியமாய் அழைத்துப் போங்கள். பயமொன்றுமில்லை. எனக்குக்கூட நான்காம் வருஷம் பலமாக டபிள் நிமோனியா வந்திருந்தது. அதனுல் எவ்வித கவலையும் கொள்ளவேண்டாம்'' என்று தைரியம் கூறியவாறு மஞ்சுளாவின் கையிலிருந்து குழந்தையை வாங்கப்போனுள்.

மஞ்சுளா பயந்துபோய் குழந்தையைக் கொடுக்க மனமின்றி விடாமல் கட்டியணைத்து முத்தமுட்டுக் கலங்கினுள். டாக்டரின் மனைவியாகிய சாந்தாதேவி குழந்தையை மெல்ல வாங்கி அவரிடம் கொடுத்து மஞ்சுளாவைத் தேற்றி அவளுடைய சிக்குண்டு கிடக்கும் கூந்தலை வாரிப் பின்னப் போனுள். மஞ்சுளா ஓரேயடியாய் அழுதுகொண்டே......''ஐயோ! இப்பாவிக்குத் தலை பின்னல் வேறயா...டாக்டர் மருந்து ஒன்று போதாதா! சிங்காரம் வேறு செய்ய வேண்டுமா! அம்மணீ! வேண்டாம்...வேண்டாம்'' என்று பிடிவாதம் செய்தாள்.

சாந்தாதேவி எத்தனையோ சமாதானம் சொல்லிப்பின் தலையைச் சிடுக்கெடுத்து சீவி பின்னலிட்டு முகத்தை சுத்தம் செய்து வேறு உடையணிவித்துத் தானே கூடவிருந்து ஆஸ்பத்திரியில் கொண்டுவிட்டுப் பின் தைரிய மொழிகளைக்கூறி விட்டுக் குழந்தைகளுடன் வீட்டிற்கு வந்தாள். மஞ்சுளாவுக்கு உலகமே மூழ்கிஇருளாகிவிட்டதுபோல் தோன்றியது.

## 4

சாந்தாதேவி குழந்தைகளை வைத்துக்கொண்டு அன்பாக வளர்ப்பதையும், தினமும் தாயாரைப் பார்த்துவிட்டு குழந்தைகள் அந்தம்மாளுடன் சமத்தாகவீடுதிரும்புவதையும்கண்ட மஞ்சுளாவுக்கு ஆச்சரியமும், அந்த டாக்டர் தம்பதிகளிடத்

தில் அளவு மீறிய அன்பும் பொங்கின. தன்னுடைய சூனிய மான இருண்ட வாழ்க்கையில் ஒருபுறம் தான் பிழைக்காமல் இறந்துவிடக் கூடாதா என்று தோன்றுகிறது.

ஒருபுறம் குழந்தைகளின் கமல முகத்தின் ஜாஜ்வல்யமான பிம்பத்தை நினைக்கும்போது அதற்காகப் பிழைக்கவேண்டும் போலும் தோன்றுகிறது. மனிதர் நினைப்பதில் என்ன இருக்கிறது? கடவுளின் சித்தம் எப்படியோ! என்று தனக்குத் தானே நினைப்பாள்.

ஆஸ்பத்திரிக்கு வந்த புதிதில் பாலு, பழம், ரொட்டி முதலியவைகளைச் சாப்பிடமாட்டேன் என்று பிடிவாதம் செய்தாள். டாக்டரும் நர்ஸ்களும் கண்டித்துச் சாப்பிடச் செய்தார்கள். தான் விதவையாகையால் தனக்கு இவைகள் அருகதையல்ல என்று மனப்பூர்வமாக எண்ணினாள்.

இவளுடைய சீலமும், வைராக்ய லக்ஷணமும் டாக்டர் தம்பதிகளை ப்ரமிக்கச்செய்து அவளிடம் அலாதியான ப்ரியமும் மதிப்பும் உண்டாக்கின. "என்னவிருந்தாலும் கேவலம் 20 வயதுகூட நிரம்பாதிருக்கையில் சகலமான ஆசைகளையும் வெறுத்து வைராக்யப் பதுமையாக விளங்குவது அபூர்வத்தி லும் அபூர்வமல்லவா சாந்தா!"...என்று வியப்புடன் கேட்டார் டாக்டர் சேகர்.

சாந்தா:—ஆமாம்; எனக்குக்கூட மிக்க வியப்பாயும் அதிசயமாயுங்கூட இருக்கிறது. என்னவோ பாவம்!...... தீராத விதி யமைந்துவிட்டது. அந்த கிழத்தின் காலம் ஆய் விட்டால் இவள் கதி என்னவாவது? இந்த மாயா உலகத்தில் நிர்க்கதியாய் இரண்டு குழந்தைகளுடன் வாயிலும் வித்தை இன்றி கையிலும் வேலையின்றி இருந்தால் பிழைப்புக்கு வழி எப்படி டாக்டர்?

சேகர்:—இரண்டுநாளாய் அதையே நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அவள் கணவன் வீட்டாரின் உதவி கிடைக்குமா? அந்தத் தகவல் உனக்குத் தெரியுமா?

சாந்தா:—கிழவரிடம் நேற்று பேச்சுப் பராக்கில் கேட் டேன். இவளுடைய கணவன் மூத்த மனைவியின் மகனாம். இளைய தாயாரிடம் படாத சிறுமைகள்பட்டு அடைந்த துன்பம் சொல்லிமுடியாதாம். அவன் பிறந்த இடத்தைச் சிறைவாஸத் திற்கு ஒப்பாக நினைத்து வருந்தினானாம். கல்யாணமாகியதும் அந்த சிறையைவிட்டு விடுதலையாகிய சந்தோஷத்தைப் பூரண

மாக அடைவதற்குள் ஒரே விடுதலை பெற்றுவிட்டானும். தகப்பனுர் இடையாதாம்; இளையாள் இனியா ஒத்தாசை செய்யப்போகிருள்! அதெல்லாம் பகற்கனவுதான்! சொத்தும் அதிகம் இடையாதாம். இருப்பதையும் இளையாள் கணவனிருக்கும்போதே விற்றுப் பணமாக்கித் தன் வயப்படுத்திக்கொண்டாளாம். "என் கட்டை இருக்கும்வரையில் கஞ்சிக்குப் பஞ்சமில்லை. பிறகு உள்ளதை வைத்துக்கொண்டு உங்கள் போன்ற பெரியவர்களின் துணையில் காலத்தைக் கடத்த வேண்டும்" என்று கண்ணீர் விட்டார். அனுதைகளைப்பார்த்தால் நம் மனது கலங்குகிறது. "அத்தனை பேருக்கும் உபகாரம் செய்து இன்பமடையமாட்டோமா" என்று ஆவல் துடிக்கிறது. நாமும் பெரிய சம்சாரி. என்ன செய்யலாம்?

சேகர்:—சாந்தி! ஏதோ நம்மாலானவரையில் த்ரவ்யசகாயம், வாக்கு சகாயம், சரீர சகாயம் முதலியவற்றைச் செய்து தான் வருகிறோம். பகவான் அந்த விஷயத்தில் நமக்கு என்றும் இப்படியே கிருபை செய்யவேண்டும். இந்த பெண்ணுக்கு எந்த வகையிலும் திக்கு இல்லை. பணமும் இல்லை. ஆகையால் இவளை நன்ருகப் படிக்கவைத்து உன்னைப்போல் லிக் நர்ஸ், ஆகியவைகளில் தேர்ச்சிபெறச் செய்துவிட்டால் நமக்கும் உபகாரமாகயிருக்கும், அவளுக்கும் பலனளிக்கும். என்ன சொல்கிருய்?...அந்த கிழவரிடம் நானே ப்ரஸ்தாபித்து மெல்ல உறை கல்லில் உறைக்கிறேன். நீயும் அந்தப் பெண்ணிடமே சரியான தூபம் போடு. பிறகு அவள் தலைவிதிப்படி நடக்கட்டும்.

இதையே சாந்தியும் சரி என்று ஒப்புக்கொண்டாள். அன்று மாலை சாந்தி குழந்தைகளை அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனுள். அப்போது மஞ்சுளாவின் பக்கத்துக் கட்டிலில் படுத்திருக்கும் ஒரு அம்மாளும் மஞ்சுளாவும் பேசிக்கொண்டிருப்பதைத் தூரவிருந்து கவனித்தாள்.

பக்கத்து படுக்கையிலுள்ள அம்மாள் மெலிந்த குரலில் "உம். இனி நீ எத்தனைதான் விசனப்பட்டாலும் அழிந்த வாழ்வு உயிர் பெற்றெழப்போகிறதா! நீ இப்படி இருந்தால் உன் குழந்தைகளைக் காக்கும் வழிதான் என்ன இருக்கிறது? நான் சொல்லுகிறபடி கேளு. உன்னுடைய மலைபோன்ற துரதிர்ஷ்ட அந்தகாரத்திலும் ஒரு மின்வெட்டு வெளிச்சம்போல் அந்த மகா புண்ணியாத்துமாக்களான டாக்டர் தம்பதிகளின் உறவு சிநேகம் உனக்குக் கிடைத்திருக்கிறது. அந்த பாக்யம்

கூட உன்னுடையதாக இருக்காது; உன் குழந்தைகளின் அதிர்ஷ்டமாகத்தான் இருக்கவேண்டும். ஆகையால் கிடைத்தற்கரியதான அவருடைய ஸ்னேகத்தின் சக்தியறியாது நிராகரித்தோ, உபயோகப்படுத்திக்கொள்ளாமலோ இருந்துவிடாதே. அந்த தம்பதிகளின் காலில்விழுந்து பிடித்துக்கொள்ளு. உலகில் அவர்கள் உபகாரம் செய்திருப்பது சொல்லிமுடியாது. நீயுந்தான் 9-வது வரையில் படித்திருப்பதாகச் சொல்கிறாய். ஒரு நர்ஸ் பரீக்ஷைக்கு அம்மாத்திரம் படிப்பு போதும்; அவர் மனம் வைத்தால் கைதூக்கி விடுவார். உன் தாதாவின் துணையும் ஆதரவும் சாச்வதமென்று நம்பாதே. டாக்டர் மனைவியை நீ தாய்போல் பற்றிக்கொள்ளு. என்... அழுகை...என்ன யோசனை...

என்று சொல்லும்போது சாந்தாதேவி குழந்தைகளுடன் அங்கு வந்தார்கள். தாயுள்ளத்தின் உத்வேகத்தை அளவிட்டுக் கூற முடியுமா! அவ்வளவு ஜுரவேகத்திலும் குழந்தைகளின் குரலமுதைச் செவியாறப் பருகிய உடனே புத்திரவாத்ஸல்யக் கனல் ஜ்வாலை விட்டெரியத் தொடங்கியதும் அலறிப்புடைத்துக்கொண்டுஎழுந்து இரு குழந்தைகளையும் சேர்த்து அணைத்துப் பல முத்தங்களிட்டாள். ஆனந்த பாஷ்பம் கண்ணால் வழிந்தது.

சாந்:—மஞ்சுளா! உடம்பு தேவலையா! உன் குழந்தைகள் என்ன சமத்து தெரியுமா! மகாபுத்திசாலிகள்......வருங் காலத்தில் இவர்கள் மகாமேதைகளாக விருப்பார்களென்று தோன்றுகிறது. இந்த இருவரையும் பார்த்து டாக்டர் பரம சந்தோஷமடைவதோடு இவர்களை டாக்டர் தொழிலிலேயே பழக்கி விடவேண்டும் என்றும் கூறுகிறார்.

என்று கூறி முடிக்குமுன் பக்கத்துப் படுக்கையிலுள்ள அம்மாள் இதையே ஒரு சந்தர்ப்பமாக எண்ணி...''தாயே! தங்களைப்பற்றித் தங்களெதிரிலேயே புகழ்வது கொல்லத் தெருவில் ஊசிவிற்பது போலத்தானாகும். இவள் குழந்தைகளை டாக்டராக்குவதற்குமுன் அவர்களுக்குப் பசிக்காது உணவும், புத்திமங்காது கல்வியமுதமும் ஊட்டிவளர இவளுக்கோர் வழிசெய்து விடுங்கள். இத்தனை நேரம் இதையேதான் இவளுடன் பேசிக்கொண்டிருந்தேன். இவள்யாரோ. நான் யாரோ! இவளுடைய பரிதாபகரமான வாழ்க்கையின் கோரம் என்வயிற்றைக் கலக்குகிறது. யாராயிருந்தால் என்ன பாவம்!......இத்

தலை நேரம் நர்ஸினிடம் வம்பு கொடுத்துத் தலைபின்னிக் கொள்ளப் பாடாய்ப்படுத்தினுள்; பால்குடிக்க வேளைக்குவேளை படுத்துகிருள். விதிசெய்யும் வேலைக்கு இனி என்னசொல்வது!' என்ருள்.

' அம்மா! நீங்கள் சொல்வதுபோலவே இவளுக்கு ஏதாவதொரு வழிசெய்யவேண்டுமென்று எனக்கும் டாக்டருக்கும் மனம் துடிக்கிறது. இவள் ஆனுலும் முரண்டு செய்கிருளே என்றுதான் பார்க்கிறேன். இக்காலத்தின் போக்கும் உலகம் நிமிடத்திற்கு நிமிடம் மாறிமாறித் தோன்றும் பயங்கரமும் வாழ்க்கை என்கிற பாதையை அடைத்து முள்வேலியும், கல்வேலியும் இட்டுக் கெடுக்க விதியுடன், மனிதர்களும் காத்திருக்கிருர்கள் என்பதையும் இவள் அறியவில்லை பாவம்! அந்த பயங்கரப் படுகுழிகளின் கோரத்தை அறிந்தால் இந்த முரண்டு போய்விடும். தான் ஒரு கட்டையாய் இருந்தாலே இந்த வம்பு உலகத்திலும் மாயப்ரபஞ்சத்திலும் வாழ்க்கை நடத்தி நீந்திக்கரையேறுவது கஷ்டம். இரு குழந்தைகளின் தாயான இவளுக்குக் கடமையும் பொறுப்பும் வேறு நிராசு நிறையாகக் கடவுள் கட்டாயமாய் விதித்துவிட்டான். ஏதோ உடம்பு குணமாகித் தேறட்டும். பார்க்கலாம் என்றிருக்கிருேம்''

இவைகளைக்கேட்ட மஞ்சுளா ஏதோ ஆவேசம் வந்தவளைப்போல் மிக்க பரபரப்புடன் கட்டிலிலிருந்து இறங்கி சாந்தாதேவியின் காலைப்பிடித்துக்கொண்டு ''தாயே! அஜ்ஞான அந்தகாரத்தில் தத்தளித்த என் குருட்டுக்கண்களைத் தாங்கள் திறந்துவிட்டீர்கள். என் குழந்தைகளுக்காக என் கடமையை உணர்ந்தேன். இனி எனக்குச் சாக இஷ்டமே இல்லை. அம்மணி! நான் சாகமாட்டேன்...சாகவேமாட்டேன். குழந்தைகளுக்காக நான் நூறு வருஷம் ஜீவித்திருக்க வேண்டும். என்னை எமனிடமிருந்து டாக்டரைமீட்டுவிடச் சொல்லுங்கள். டாக்டர் சொல்படியும் நர்ஸ்கள் சொல்படியும் இனி முரண்டுகொள்ளாது கேட்கிறேன். உடம்பு சீக்கிரம் குணமாகியதும் என்னைப் பரோபகாரத் தொழிலாகிய நர்ஸ் தொழிலில் பழக்கிவிடுங்கள்.

நான் இதுபரியந்தம் எண்ணியிருந்தது முற்றும் சுத்த முட்டாள்தனம் என்பதையும், குழந்தைகளின் தந்தை விட்டுச் சென்ற கடமைகளையும் தாயாகிய நானே செய்து முடிக்க

பாத்யப்பட்டவள் என்பதையும் உணர்ந்தேன். இனி நீங்களே தஞ்சம். நான் உங்கள் அடிமை''......என்று தன்னை மறந்து கத்திவிட்டாள்.

இதற்குள் அவளைச் சமாதானப்படுத்தி சாந்தாதேவியும் நர்ஸுமாகத் தூக்கிப் படுக்கையில் விட்டு ஆச்வாசப்படுத்தி ''மஞ்சுளா! பயப்படாதே. நீ செத்துப்போகவே மாட்டாய். என் உடலில் உயிர் உள்ளவரையில் உன்னை என் சொந்த சகோதரிபோல் பாவித்து என்னாலான உதவியைச் செய்கிறேன். உடம்பைத் தேற்றிக்கொண்டு வீட்டிற்கு வருவதைப் பாரு''...என்று சாந்தா சமாதானம் செய்தாள்.

## 5

கடவுளின் மாயையை எங்ஙனம் அறியக்கூடவில்லையோ, காற்றின் வேகத்தை எவ்வாறு காணமுடியவில்லையோ அவ்வாறு காலமும் வெகு வெகு வேகமாக உருண்டு ஓடி மறைவதும் ஒரு விசித்திரமல்லவா! இப்போதுதான் பிறந்தது போன்ற குழந்தை, வெகு விரைவில் தகப்பனாகிவிடுவதைக் காண அவன் பெற்றோர்களே வியப்பதுதான் உலக இயல்பு.

அதேபோல் காலம் போவதே தெரியாமல் இரண்டு வருஷம் ஒரு நிமிடம்போல் உருண்டோடிவிட்டது. அன்று ஆஸ்பத்திரிக்குப் போவதற்கு மொண்டித்தனம் செய்த அதே மஞ்சுளா இன்று நர்ஸ் மஞ்சுளாவாக ஆகி, ஆஸ்பத்திரியில் வேலை கற்றுக்கொண்டு இனி தனியாக வேலை செய்யலாம் என்கிற பட்டத்துடன் வெளியே வந்தாள்.

ஆனால் இன்றும் அவள் தன்னடக்கத்தையும் தனது விதவைக் கோலத்தையும் மாற்றவில்லை. தூய வெள்ளைப்புடவையும், மூக்குக்கண்ணாடியும் தலை முடிச்சுந்தான். பின்னல் கூட இல்லை வெகுசாதாரண மனுஷியாய்த்தானிருக்கிறாள்.

கையில் நற்சாக்ஷிப்பத்திரத்துடன் தலைகுனிந்தபடி டாக்டர்சேகர் முன்பு நின்று, பத்திரத்தை அவரிடம் கொடுத்துச் சேவித்தாள். அதே சமயம் சாந்தாதேவியும் அங்கு வந்தாள். ''ஓகோ! மஞ்சுளாவா... வாம்மா'' என்று சந்தோஷத்துடன் அழைத்தாள்.

மஞ்சுளா அந்தம்மாளையும் வணங்கிப் பின் ''உங்களிருவரின் தயவால் பரீக்ஷை முடிந்து நற்சாக்ஷிப் பத்திரத்துடன்

வந்திருக்கிறேன். இனியும் உங்கள் தயவால்தான் பிழைக்க வேண்டும்'' என்ருள்.

சேக:—மஞ்சுளா! இன்று உன்னைப் பார்க்க மெத்த சந்தோஷமாயிருக்கிறது. நீ உன் கடமையையும் உரிமையையும் எங்கே கைவிட்டு விடுவாயோ என்றுதான் பயந்தேன். நீ ஆஸ்பத்திரியில் வெகு நல்ல பெயரெடுத்திருப்பதையும் அறிந்து நானும் சந்தோஷப்படுகிறேன்...சரி...பரீக்ஷையாகிவிட்டது. நீ எங்காவது ஆஸ்பத்திரியிலேயே வேலை செய்ய விரும்புகிருயா, அன்றி தனித்துத் தொழில் நடத்துகிருயா? எதில் உனக்கு விருப்பம்?...

மஞ்:—என் விருப்பம் எதற்கு டாக்டர்? தாங்கள் எது உசிதமென்று செய்யச் சொன்னுலும் அப்படியே செய்கிறேன்.

சாந்:—அதிருக்கட்டும்மா. உன் மனத்திற்குப் பிடித்தமானதை யுரைத்தால் அதன்படி நாங்கள் செய்துவைக்கிரேரும். உன் இஷ்டம்,உன் சவுகரியம்எல்லாம் வேண்டுமல்லவா?

மஞ்:—தாயே! ஆஸ்பத்திரியிலிருப்பதில்கிர்ப்பந்தமும் ஊர் மாற்றலும் இருக்குமல்லவா? ஒவ்வொரு வருஷம் ஒவ்வொரு இடத்தில் போட்டால் குழந்தைகளின் படிப்புக்கும் தாதாவின் போஷணைக்கும் இடையூறு நேருமல்லவா? அதோடு இரவு நர்ஸ்வேலையில் வீடு திண்டாடிவிடும். சம்பளமும்குறைவுதான். உங்கள் தயவில் தனித் தொழிலே வைத்தால் மாதம் 5, 6 கேஸ்கள் முதலில் வந்தாலும் ஏதோ ஒருவாறு என்குடும்பத்தை நடத்தலாம் என்று தோன்றுகிறது...

சேகர்:—பேஷ்; சாந்தி! பார்த்தாயா! உள்ளாழமான மனுஷி என்பதும், தன் கடமை இன்னதென்று தெரிந்து கொண்டதும் எப்படிப் புலனுகிறதுபாரு...ஒன்றும்தெரியாது போலிருப்பவர்கள் சிலரை நம்பக்கூடாது என்று நீ அடிக்கடி சொல்வாயே! அதை இந்தம்மாளிடமே காணலாம்.

சபாஷ்! மஞ்சுளா! இன்றுமுதல் நீ என் சாந்தியின் அஸிஸ்டெண்டு. ஒரு போர்டு எழுதி, நல்ல நாள் பார்த்து உன் வீட்டுவாசலில் மாட்டிவிடுகிறேன். சாந்தியும் நீயும் தேனும் பாலும் போலவிருந்து வெகு மேன்மையாக ஒத்துழையுங்கள். சாந்திக்கு இனி அதிக கஷ்டமே இருக்காது. இல்லையா!... உன் வீடு தேடியும் கேஸ்கள் வரும். முதலில் அனுபவம் வாய்ந்த சாந்தியின் உதவிபெற்று பிறகு நீயே நடத்து.

உனக்கு ஒரே ஒரு வார்த்தை- தொழிலில் நல்லபெயரெடுக்கவேண்டுமானால் முக்கியமானது பொறுமைதான் முதலில் வேண்டும். பொறுமையை நீ வகித்தால் அது உனக்கு வெகு விரைவில் பெருமையை கீர்த்தியைக்கொடுத்துவிடும்.மற்றஎல்லாத்துறைகளையும்விட இத்துறையிலிருப்பவர்களுக்குத்தான் பொறுமையும் பதட்டமற்ற சாந்த குணமும் இனிப்பாகப் பேசும் பிறவிக்குணம் போன்ற நயமும் அத்யாவச்யமானவை.

கேஸில் அக்கரையுடன் உழைத்து கைராசிக்காரி என்கிற சிறப்பைச் சம்பாதிக்கவேண்டும். மஞ்சுளா! இதோ பார்: ஒருசமயம், நர்ஸ்கள் யூனியனின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தின்போது, டாக்டர், ஸ்ரீமதி எசோதாதேவி நர்ஸ்களுக்கு அதி முக்யமான விஷயங்களைப்பற்றி வெகுவெகு அத்புதமாய் ப்ரஸங்கம் செய்தார்கள். அந்த விஷயத்தை அப்படியே நான் பத்திரிகையிலிருந்து கத்திரித்து வைத்திருக்கிறேன். அதைப் படித்துப்பார்த்து அதன்படியே உன்தொழிலின் கடமையில் கண்ணாயிரு'' என்று ஒருபழைய பத்திரிகைத் துண்டைக் கொடுத்தார். *

மஞ்சுளா வெகு சந்தோஷத்துடன் அதைப் படித்தாள். ''டாக்டர்! நான் உங்களிருவருடைய நிழல், நீங்கள் எப்படி நடந்தால் அப்படியே இந்த நிழல் அசையப்போகிறது. திக்கற்றவள், அனாதை என்று தெருவில்நிற்கும் சமயம்இத்தகைய பேராதரவையும் பிழைக்கும் வழியையும் காட்டிக் காப்பாற்றிய உங்கள் பேருதவியைநான் என்றென்றும்மறக்கமாட்டேன். இது நிச்சயம்''...என்றாள்.

டெலிபோன் மணி அலறியதும் சாந்தாதேவி ஓடி ரிஸீவ் செய்தாள். அடுத்தக்ஷணமே சிரித்தபடி ஓடிவந்து ''டாக்டர் என்னவிருந்தாலும் மஞ்சுளாவுக்கு ஒரு திவலையாவது அதிர்ஷ்டம் இருக்கத்தான் செய்கிறது. ஸ்ரீ. மாசிலாமணி முதலியார் வீட்டில் அவர் சம்சாரத்திற்கு ப்ரஸவநோய் ஆரம்பமாகிவிட்டதாம். உடனே வரும்படி போன் வந்திருக்கிறது. இந்த கேஸை மஞ்சுளாவுக்கு நாம் முதலில் கொடுக்கும் பரிசாக அளிக்கலாம் என்று நினைக்கிறேன். நானே கூட அழைத்துச்

---

* (குறிப்பு:—மாயப்ரபஞ்சம் என்கிற சிறந்த நாவலைப் படித்தால் நர்ஸ்களின் வாழ்க்கைப் படகு செல்லும் அழகை அறியலாம்.)

சென்று இவளை அவர்களுக்கு அறிமுகம் செய்துவிட்டு வருகிறேன்...எங்கே......நீ புதிதாக வாங்கிய உன் சாமான் பெட்டியையே எடுத்துக்கொண்டு கிளம்பு. இதுவே உனக்கு நல்ல சகுனமாகத் தோன்றுகிறது"...என்று உற்சாகத்துடன் கூறி மஞ்சுளாவை அழைத்துக்கொண்டு கிளம்பினாள்.

---

## 6

"தாதா! இந்த அபாக்யக் கட்டையின் விஷயத்தில் பகவான் அதிர்ஷ்டம் என்கிற பதத்தைக் கொடுக்காவிடினும் குழந்தைகளுக்கு நிறையக் கொடுத்திருக்கிறார் என்றே தோன்றுகிறது. இன்றுதான் எனக்குத் தொழில் நடத்தும் உத்திரவு சீட்டு பெற்றுக்கொண்டு டாக்டரிடம் காட்டச் சென்றேன். அதேசமயம் ஒரு கேஸ் வந்தது. அந்த தர்மதேவதை என்னையே அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்துக் கேஸை என்னிடமே ஒப்படைத்து வந்தார்கள்.

அந்தம்மாளுக்கு இது ஆருவது ப்ரஸவமாம். முதல் ஐந்தும் பெண்களாம். ஆண்குழந்தையே பிறக்காது வெகு வெறுப்பு உண்டாகியது. ஆறுவது பிள்ளை ஆனை கட்டி வாழும் என்கிற பழமொழிப்படிக்கு ஆண் குழந்தை நல்ல வளர்ச்சியுடன் அழகாகப் பிறந்ததைக் கண்டதும் அவர்கள் எல்லோரும் ஆனந்தத்தில் துள்ளிக்குதித்தார்கள்.

"நீ நல்ல கைராசிக்காரி. உனக்கும் இதுமுதல் கேஸ் என்று அம்மாள் அறிமுகம் செய்தார்கள். எங்களுக்கும் இது முதல் பிள்ளைக்குழந்தையாகப் பிறந்தது. ஆகையால் உனக்கு முதல் வருமானமே உயர்ந்ததாகப் பகவான் கொடுத்தார்" என்று கூறி நான் கனவில்கூட எதிர்பாராத விதம் 50 ரூபாயைத் தட்டில் வைத்துத் தாம்பூலத்துடன் கொடுத்ததும் ப்ரமித்துவிட்டேன். அவைகளைக் கொண்டுபோய் அப்படியே சாந்தாதேவியின் திருவடிகளில் வைத்து நமஸ்கரித்தேன். தம்பதிகள் மனப்பூர்வமாக ஆசீர்வதித்து அந்தத் தொகையை எனக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். இதோ! இந்தாருங்கள்" என்று தாதாவின் கையில் குதூகலத்துடன் கொடுத்தாள்.

கிழவரின் ஆனந்தம் துக்கம் இரண்டும் உச்சத்தை எட்டின. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு "குழந்தாய்! உன்தொழிலில் நீமேன்மேலும்வெற்றிபெறவேண்டும்...உனக்கு இத்தகைய மகத்தான மார்க்கத்தைக் காட்டி உதவிய டாக்டர் தம்பதிகளை நீ என்றென்றும் தெய்வங்களாக மதித்து நடக்கவேண்டும். இதைத்தவிர நான் உனக்குச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? அவர்கள் மனங்கோணாது நடந்து உன் குழந்தைகளைக் காப்பாற்று" என்றார்.

மஞ்சுளா அந்த பணத்தில் முதல்முதல் என்னசெய்வது? ஏதாவதொரு நினைவுச் சின்னமாகச் செய்தால் தேவலையே என்று தோன்றியதால் யோசித்தாள். தன் தாய், தந்தை, கணவன் ஆகியவர்களின் படங்களைப் பெரிதாக எழுதி அதை கடுக்கூடத்தில் மாட்டி அதற்கு தினமும்நமஸ்காரம்செய்துத் தன் காலத்தைக் கடத்துவது என்ற முடிவுக்குவந்தாள். அதுவே அவளுக்குப் பேரானந்தத்தை யளித்தது.

அந்த எண்ணத்தை 15 நாட்களுக்குள் முடித்து சாதித்துக்கொண்டாள். தினம் அதிகாலையில் எழுந்து ஆரோக்யமாக நீராடிப் பின் பகவானுக்குப் பூஜைசெய்துவிட்டு மூன்று படங்களையும் நமஸ்கரித்துப் பின்னர் குழந்தைகளைக்கவனித்து அவர்களுக்குக் காலையாகாரம் ஊட்டி, குளிப்பாட்டி உடை அணிவித்து விளையாட அனுப்பிவிட்டுத் தானே சமையலைச் செய்து 8 மணிக்குள் சகலத்தையும் முடித்து டாக்டர் வீட்டிற்கு வந்து அவருக்கு உதவியாக நர்ஸ் வேலை செய்வாள். பகல் 12 மணிக்கு வீட்டிற்குவந்து குழந்தைகளுக்கும் தாதாவுக்கும் போஜனம் செய்வித்துப் பின்தான் சாப்பிடுவாள். பகல் 4 மணிக்கு மீண்டும் அங்குப் போவாள். இரவு எட்டுமணிக்கு வருவாள். இதற்கிடையில் கேஸ்கள்வந்தால், வீட்டில் கிழவர் சகலமும் பார்த்துக்கொண்டு அவளை அனுப்புவார்.

முதல் ஆறு மாதங்களில் மொத்தம் 25 ப்ரஸவ கேஸ்களும், 15 அபார்ஷன் கேஸ்கள், 25 சிக் நர்ஸ் கேஸ்களும் தான் மஞ்சுளாவுக்குக் கிடைத்தன. இவைகளில் அவளுக்குக் கிடைத்த நல்ல பெயரும் புகழும் விருவிரென்று பரவின. முக்யமாக மாசிலாமணியைச் சேர்ந்த சகலரும் அவளை வெகுகெட்டியாகப் பிடித்துக்கொண்டார்கள்.

காலை, மாலை, இரவு என்கிற வேளை சமயமில்லாது கேஸ்களுக்குப் போகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டதாலும்

கையில் காசு நடமாட்டமும் சற்று கனமாகவே இருந்ததாலும் வீட்டுவேலைகளுக்கு ஒரு கிழவியை அமர்த்திக்கொண்டாள். அப்போதும் தன் குழந்தைகளின் போஷணையைத் தானே கவனிப்பதோடு அவர்களுக்குத் தானே ஓய்ந்தநேரத்தில்கல்வி போதிக்கவும் தொடங்கினாள்.

---

## 7

எத்தகையோருக்கும் எந்தத் துறையிலும் புகழும் கீர்த்தியும் வளரத்தொடங்கினால் அதுமுதல் அவர்களுக்கு வேலைத் தொந்திரவும், ஓயாத உழைப்பும் கூடவே உண்டாகிவிடுகின்றன. அந்த நிலைமையில் சிலர் தன் கால்களை நன்றாக ஊன்றி நின்று கர்வம் என்கிற கனம் தலைக்கு ஏறாதபடி வெகு நல்ல முறையில் பணிவுடன் நடந்துகொண்டு அழியாப் புகழைச் சம்பாதித்துக்கொள்கிறார்கள்.

சிலரோ, தலைக் கனம் பாரமாகிய உடனே கவிழ்ந்தும் விடுகிறார்கள். இதே உதாரணத்தைத்தான் மஞ்சுளாவுக்கு டாக்டர் தம்பதிகளும் கிழவரும் அடிக்கடி நினைப்பூட்டுவார்கள். கையில் காசு நடமாட்டத்தினால் மஞ்சுளா கர்வமே அடையாது தான் நோயாளிகளின் அடிமை என்ற நினைப்புடன் வேலைசெய்துவந்தாள்.

குழந்தைகளுக்கு இப்போது பள்ளிக்கூடம் சேர்க்கும் வயதாகியதால் இருவரையும் ஒன்றாகவே சேர்த்தாள். தாயின் நினைப்பில் அந்த ஒப்புயர்வற்ற, ப்ரதிபலன் கருதாத மழையைப்போன்ற புத்திர வாத்ஸல்யத்தின் அணைகடந்த வெள்ளத்தில் அவள் மனக் கொந்தளிப்பு காலவெள்ளத்தையும் கடந்து வெகு வெகு முன்னேக்கிச் சென்றது.

தன் மக்கள் இருவரும் வெகு விரைவில் படித்து நல்ல கைதேர்ந்த டாக்டர் தொழிலை மேற்கொண்டு ஒற்றுமையாக நடத்தி நற்புகழும் கீர்த்தியும் சம்பாதிக்கும்போது...... அடடா! எவ்வளவு ஆனந்தம்...“ஒரு பாலிய இளம் விதவை ...உலகம் என்றும், காதல் என்றும் ஒன்றுமே அறியாத ஒரு பச்சைக் குழந்தைக்குச் சமமான விதவை... தன் முயற்சியால், உழைப்பால், தாயுள்ளத்தின் தவசக்தியால், தன் மக்களை இத்தகைய உயர்ந்தமுறையில் கொண்டுவந்தாள்.”

என்று உலகம் அப்போது போற்றும்...நான் அப்போது கிழவியாயிருந்து களிப்புக் கடலில் மூழ்குவேன்.........என் றெல்லாம் கற்பனையுலகில் கட்டவிழ்த்துவிட்டக் காளைக்கன்று போல் அவள் இளம் இதயம் துள்ளிப் பறந்தது. ஆனந்த அலைகள் இதயக்கடலில் கொந்தளித்துமேலோங்கிக்குதித்தன.

அதை அவள் தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் பக்கம் பக்கமாக வரைந்துகொண்டாள். அவளுடைய நல்ல கை ராசித்தனத்தையும், அடக்கம், பணிவு முதலானவற்றையும் கண்டு டாக்டர் தம்பதிகள் மிகமிக சந்தோஷத்துடன் அவ ளிடம் பின்னும் பன்மடங்கு அன்பு செலுத்தினார்கள்.

அதன்மூலம் பலகேஸ்கள் மஞ்சுளாவுக்குக் கொடுத்து வந்தார்கள். மஞ்சுளா அந்தச் சிறிய ஒண்டிக்குடித்தனத்தை விட்டு சிறிய தனி வீட்டில் வசிக்கத் தொடங்கி தனக்கென ஒரு ரிக்ஷாவும் வாங்கி ஆளையும் நியமித்துக் கொண்டாள். தாதாவின் தளர்ந்த சரீரமும் அளிந்த புண் ணுன மனமும் பேத்தியின் உயர்வால் சற்று ரணம் மாறி சரீரமும் கட்டுப்பட்டுக் காணப்பட்டது.

ஆகார வசதிகளிலும் உடை வசதிகளிலும் குழந்தை களுக்குத் தன் சக்திக்கு மீறியே அளித்து மகிழ்ந்தாள். செலவு போக பாங்கியில் 2000 ரூபாய் இவளுடைய பணம் என்று சேர்ந்திருப்பதைக் கண்டு அவளே உள்ளம்பூரித்தாள். இதில் பிள்ளைக்கு ஓராயிரம். பெண்ணுக்கு ஓராயிரம். இப்படியே எத்தனைசேர்ந்தாலும் சமபாதியாகத்தான் செலவு செய்வேன், என்று தனக்குத்தானே பெருமிதமடைவாள். தினசரிக் குறிப்புகளில் அதற்குமோர் முக்ய ஸ்தானம் கிடைத்தது.

இன்று மஞ்சுளா தொழிலுக்கு வந்து ஐந்து வருஷங்கள் பூர்த்தியாவதை எடுத்துக் காட்டுவதுபோல் மாசிலாமணி முதலியாரின் குமாரனுக்கு ஐந்தாவது வயது ஆண்டுநிறைவு அழைப்பு மஞ்சுளாவுக்கு வந்தது. “நான் தொழில் ஆரம்பித்து 5 ஆண்டுகள் நிறைவது இன்றுதானே......... அடாடா!...அன்று சின்னஞ்சிறு குழந்தையாக இருந்த என் கண்மணிகள் இன்று எவ்வளவு உயர்ந்துவிட்டார்கள்!..... அன்று சாகப் போகிறமாதிரி இருந்த நானும் என் தாதாவும் இன்று எத்தனை ஆரோக்யமாய் யானைமாதிரி ஆகிவிட்டோம் ...வருடம் உருண்டோடுவதன் வேகம் காற்றைவிடக்கடியதாக

விருக்கிறதே!... இதற்குள்ளாகவா இந்தக் கட்டையை மணந்த மகானுபாவன் மறைந்து 8 வருஷங்கள் ஓடி மறைந்து விட்டன என்ற வியப்பே அவளை ப்ரமிக்கச் செய்தது.

இன்பமும் துன்பமும் இணைபிரியாத நண்பர்களல்லவா! அன்று துன்பக்கேணியில் கரைகாணுது துடித்த அவள் இன்று இன்பச்சாயலில் தன்னையே சிறிது மறந்தாள்.

அடிக்கடி கேஸ்கள் ஏராளமாய் வருவதால் டாக்டர் வீட்டிற்கு தினம் வருவதற்குக்கூட முடியாமல் போய் விட்டது. எனினும் பரதிராத்திரியானுலும் ஒரு தரமாவது போய் அந்தப் புனித தம்பதிகளைப் பார்க்காதிருக்கவே மாட்டாள். அப்படி யிருந்தால் அவளுக்குத் தூக்கமே பிடிக்காதுபோய் தவிப்பாள்.

ப்ரஸவ கேஸ்களும் அது சம்மந்தமான இதர கேஸ் களுமே ஏராளமாய் வரத்தொடங்கியதால் ஸிக் நர்ஸாகப் போவது சற்று குறைந்து விட்டது. அதோடு, ஸிக் நர்ஸ் வேலையில் இரவு கண் விழிப்பும் உழைப்பும்தான் அதிகம்; அதனுல் உடல் நலத்திற்குப்பழுது ஏற்பட்டதால், டாக்டராக அனுப்பும் இடங்களுக்கு மட்டும் ஸிக்நர்ஸாக வேலைசெய் தாள். எந்த இடத்திலும் இவளுக்கு நல்ல பெயரே கிடைத்த தால் மற்ற தொழில் நர்ஸ்கள் சிலருக்கு இவள்மீது பொரு மைத்தீயும் மூண்டது. ஆனுல் இவளுடைய பணிவுக்கு முன்பு அவைகள் என்ன செய்யமுடியும்?...

---

## 8

கார் வந்து நின்ற ஓசையைக் கேட்ட மஞ்சுளா பக வானுக்குப் பூஜைசெய்து கொண்டிருப்பதையும் விட்டு விட்டு டாக்டர் கார்தான் வந்திருப்பதாக எண்ணி ஓட்ட மாக ஓடிவந்தாள். ஒரு நடுத்தர வயதுடைய அம்மாள் வந்து இறங்கி, "நீங்கள்தான் நர்ஸ் மஞ்சுளாவோ?" என்றுள்.

மஞ்:—ஆமாம்...என்ன சமாச்சாரம்?...

அம்மாள்:—சமாச்சாரமில்லாமல் உங்களைத் தேடிக் கொண்டு வருவோமா! எங்கள் வீட்டிற்கு இதுவரையில் நர்ஸ் சௌபாக்யந்தான் வழக்கம்; இப்போது அந்தம்மாள் வயதாகிவிட்டதென்று தன் மகளிடம்போய்விட்டார்கள். நான் பிறகு யாரை அமர்த்தலாம் என்று விசாரித்ததில் உங்களைத்

தான் எல்லோரும் சொன்னார்கள். என் தம்பி அகமுடையாளுக்கு இதுதான் மாஸம். உங்களை முன்கூட்டி ஏற்பாடு செய்வதற்காக, இன்று நல்லநாளாக இருப்பதால் வந்தேன். என்கூட இப்போதே வாருங்கள். இன்றுமுதல், தினம் ஒரு வேளை வந்து பார்த்துப் போங்கள். எங்களுக்கு லேடி டாக்டர் ஸ்ரீமதி ரமாதேவிதான் வழக்கம். அவசியமானால் அவர்களையும் அழைக்கலாம்........இப்போது வாருங்கள்'' என்றாள்.

மஞ்சுளாவும், அபசகுனம்போல் மறுபேச்சின்றி உடன் கிளம்பிச் சென்றாள். நல்ல உயர்ந்த முறையில் நாகரிகமாய் உள்ள பங்களாவின் வாசலில் வண்டி நின்றது. முன் பக்கத்தில் வெகு அழகான ஹாலில் கர்ப்பிணி ஒரு சோபாவில் உட்கார்ந்திருந்தாள்.

அவளுடைய முன் குழந்தைகள் இரண்டும் இரண்டு பொம்மைக் குதிரைகள் மீது ஆரோஹணித்து விளையாடிக் கொண்டிருந்தன; கணவன் அவளுக்கு எதிர்ப்புறத்து சோபாவில் உட்கார்ந்து பத்திரிகை பார்த்துக்கொண்டிருந்தான். அந்தம்மாள் காரிலிருந்து இறங்கியதும், லக்ஷ்மீ! இந்தம்மாள்தான் நர்ஸ் மஞ்சுளா. இன்று நல்ல நாளாகையால் இன்றே அழைத்து வரும்படி அப்பா சொன்னார்; அதனால் அழைத்து வந்தேன்''...வாருங்கள்! என்று மஞ்சுளாவை யழைத்து உட்கார வைத்தபின்...''சங்கர்! நாங்கள் ஏதோ பேசுவோம்; நீ சற்று எழுந்துபோயேன்''...என்று தம்பிக்கு உத்திரவிட அவன் உடனே போய்விட்டான்.

''மாசிலாமணிமுதலியார் வீட்டில் உங்களை ப்ரமாதமாகப் புகழக்கேட்டுச் சந்தோஷமடைந்தோம். நல்ல பெயரும் கைராசியும் அமைவதுதான் கஷ்டம். எங்கள் வீட்டிலும் முன் இரண்டும் ஆண்குழந்தைகளாகவே பிறந்து விட்டன. இம்முறை பெண்ணாகப்பிறந்து மஞ்சுளா என்கிற உங்கள் பெயரையே வைக்கவேண்டும்'' என்று மெஷின்போல் பெரியம்மாள் கூறினாள்.

மஞ்:—நம்மால் என்ன இருக்கிறதம்மா! சகல சராசரங்களையும் கட்டியாளும் சர்வேசனின் சித்தப்படியே எல்லாம் நல்லதாகவே நடக்கும். போனவருஷம் ஒரு தெலுங்கர் வீட்டில்கூட இப்படித்தான் சொன்னார்கள், பெண்தான் பிறந்தது. மகா பாவத்தைச்செய்துள்ள என்பெயரை வைக்க

வேண்டாம். என் தலைவியான சாந்தாதேவியின் பெயரை வையுங்கள்.' என்று கூறி நானே சாந்தா என்று பெயரிட்டேன். உங்களுக்கும் அதையேதான் சொல்கிறேன். என் வாழ்க்கைப்பாதையில் வெளிச்சத்தை உண்டாக்கிய அந்த உத்தமியின் பெயரையே வையுங்கள். அவர்களைப்போல் சகல அம்சத்திலும் விளங்கட்டும்—என்றாள்.

காப்பி டிப்பன் கொண்டுவந்து கொடுத்தார்கள். மரியாதைக்குக் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு உடம்பு விஷயமாக கர்ப்பிணியுடன் பேசும்போது அவளுடைய மூத்தபிள்ளை ஓடிவந்து தாயாரின் கால்களைக் கட்டிக்கொண்டு "ஏம்மா: தங்கச்சி பாப்பா வரும் வருன்னு அத்தையும் பாட்டியும் தெனம் சொல்றாளே......எப்பம்மா தங்கச்சிபாப்பாவரும்?"... என்றது.

இதைக்கேட்டதும் லக்ஷ்மி கடகடவென்று சிரித்துவிட்டுப் "போடா அசட்டுப் பையா!"...என்று அவனை ஒதுக்கிவிட்டாள். இதற்குள் மஞ்சுளா குழந்தையைத்தான் இழுத்து அணைத்துக்கொண்டு லக்ஷ்மியின் முகத்தையும் உடம்பையும் உற்றுநோக்கிப் பின்பு "தம்பி! அடுத்த வாரம் கட்டாயம் உனக்குத் தங்கச்சியோ! தம்பியோ...வந்துவிடும், நானே உனக்குக்காட்டுகிறேன்...என்ன சரிதானா?" என்று கொஞ்சலாகக் கேட்டாள்...

குழந்:—தம்பிதான் அதோ இயுக்கானே! எங்க மணிக்கு தங்கச்சி இயிக்காப்பலே னேக்கும் தங்கச்சிதான் ஓணம்...... இப்பதான் காட்டேன் பாக்கலாம்"—என்றான்.

எல்லோரும் அடக்கமாட்டாது சிரித்தார்கள். தங்கை பிறப்பதற்குமுன் இத்தனை எதிர்பார்ப்பும், ஆசையும், பிறந்த பிறகு சண்டையும் பூசலும்! இதுதானே உலகவினோதம்... ஆனால்என் தம்பி என்னுடன் அன்றும் சரி, இன்றும் சரி, சண்டை என்பதே செய்தறியமாட்டேன்! இதற்கு முக்யகாரணம் என் தம்பியின் க்ருகலக்ஷ்மியின் அன்புதான்...என்றாள்!

லக்ஷ்மி:—போங்கோக்கா: இப்படி தோத்திரம் செய்ய வேண்டாமென்று நான் எத்தனை தரம் சொல்வது? இந்த வீட்டில் பிறந்தது நீங்களா! நானா? ஒண்டவந்தப் பிடாரி ஊர்ப் பிடாரியை ஓட்டியதுபோல் சில புண்யவதிகள் அபூர்வப் பிறவிகளாகப்பிறந்து நாத்தனார்களைக் கண்ணிலும் காணவிடாது வயிறெரியச் செய்து தாம் மட்டும் வாழ எண்ணுகிறார்களே!

அப்படி நானும் இல்லை என்று உங்களுக்குக் குறையாயிருக்கிறதா என்ன...போதும்! போதும் ...குடியில் பிறந்த பெண்கள் மனம் குளிர்ந்தால்தான் குடிவிளங்கும். எனக்கந்த த்ரோகம் வேண்டாம்...

மஞ்:—வாஸ்தவம், இம்மாதிரி நினைப்பதுதான் உத்தமம். தான் குடும்பத்திற்கு வந்துவிட்ட பிறகு மாமியாரும் நாத்தனார்களும் அடியோடு ஒழிந்துவிட வேண்டுமென்று செய்து காட்டும் உத்தமிகளை நானும் எத்தனையோ இடங்களில் பார்த்திருக்கிறேன். அதில் என்ன லாபம்? ஊர்சிரித்து உலகம் தூற்றி அப்பெண்களின் மனம் நொந்து அந்த சாபத்திற்கு ஆளாவதுதான்மிச்சம்... அடாடா!...பேச்சுப்பராக்கில் மணிபோனதே தெரியவில்லையே!...சரி...மெத்த சந்தோஷம். உங்கள் சிநேகம் கிடைத்தது என் பாக்யம். நான் உங்கள் விருப்பப்படி தினம் ஒரு முறை வருகிறேன். கடவுள் கிருபையால் சகலமும் ஜெயமாக வேண்டும்—என்று கூறிக் கிளம்பினாள்.

லக்ஷ்மி:—சந்தோஷம்...உங்களுக்கு எந்தவேளை காரை அனுப்புவது என்று தெரிந்தால் தினம் அனுப்புகிறோம்...

மஞ்:—அதெப்படி சொல்லமுடியும்? இதேமாதத்தில் பிரஸவிக்கக்கூடிய என்னுடைய பேஷண்டுகள் 5, 6 பேர்கள் இருக்கிறார்கள்; நான் வீட்டிற்குப் போவதற்குள்ளேயே ஆள்வந்திருந்தாலும் இருக்கலாம். ஆகையால் காலைமுதல் இரவுக்குள் எனக்கு எப்போது ஒழிவோ, அப்போது வருகிறேன். அடுத்த வாரத்திற்குள் நடக்கும் என்று தோன்றவில்லை. ஆனால் நான் என்ன கடவுளா! மழை பெய்வதும் மக்கள் பெறுவதும் மகாதேவனுக்குக்கூடத் தெரியாது என்பது பழமொழி. அம்மாதிரி இருக்க நான் எதைச் சொல்லமுடியும்? அதற்குள் ஒருகால் ஏதாவதுவிசேஷமிருந்தால்தெரிவியுங்கள். ...நான் வருகிறேன்...தம்பீ! நான் வரட்டுமா நீயும் என்னோடு வருகிறாயா! என்பாப்பாவுடன் விளையாடலாம்'' என்றாள்.

பையன் சிரித்தவாறு ''உன் பாப்பா எனக்கு வேண்டாம்! என் தங்கச்சி பாப்பாதான் எனக்கு வேண்டும்.'' என்றான். சிரித்தபடியே மஞ்சுளா விடைபெற்றுச் சென்றாள். அந்தப் புண்யாத்துமாக்களாகிய டாக்டர் தம்பதிகளின் அன்பினால்தானே நமக்கு இத்தகைய மனிதர்களின் நட்பு கிடைக்கிறது என்று அவள் மனம் எண்ணிப் பூரித்தது.

மஞ்சுளாவுக்குள்ள சகலமான வேலைக்கும் மத்தியில் லக்ஷ்மியை தினம் போய்ப் பார்த்துவந்தாள். லக்ஷ்மியின் அன்பும் நல்ல குணமும் அவளுடைய நாத்தனாரின் பெருந் தன்மையும் மஞ்சுளாவை வசீகரித்து அவளையறியாத ஆழ்ந்த பற்றுதலை யுண்டாக்கின.

"லக்ஷ்மியின் குழந்தை கேட்கும்படி ஒரு பெண் குழந்தையைத் தான் அவனுக்கு எப்போது காட்டப்போகி றோம்?" என்ற ஆவலே அதிகமாகத் துடித்தது. கண்களை இமைகள் பாரா உஷார்! என்று கூறிக்காப்பதுபோல் மஞ் சுவை டாக்டர் தம்பதிகள் வெகு அக்கரையுடன் காத்து வருவதால் அவள் முற்றிலும் புதிய மனுஷியாகவே காணப் பட்டாள்.

விடியற்காலை 5 மணிக்கு முன்பே இவள் வீட்டுவாசலில் கார் ஹாரனடித்தது. கிழவர் உடனே கதவைத் திறந்து விளக்கையும் போட்டார். காரில் அன்று வந்த அதே அம் மாள் வெகு பரபரப்புடன் காணப்பட்டு "மஞ்சுளா! மஞ் சுளா!" என்று கூப்பிட்டாள்.

இதற்குள் மஞ்சுளா முகத்தைக் கழுவிக்கொண்டு ஸ்வாமி படத்தையும் தன் முன்னறி தெய்வங்களின், கணவனின் படங்களையும் முறையே வணங்கிப் பின் தனக்கு ஜெயத்தைக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டு "இதோ வந்துவிட்டேன்" என்று சாமான்பெட்டிகளுடன் கிளம்பினாள்.

கிளம்பும்போதே மணி 5 அடித்த சுபசகுனத்தைக் கண்டு மகிழ்ந்தவாறு இருவரும் காரில் ஏறினார்கள். "ஜெயத் துடன் திரும்பிவாம்மா!" என்று கிழவர் ஆசி கூறினார். வண்டியும் கிளம்பியது. காலை ஏழுமணிக்கெல்லாம் சூரிய உதயத்தின் ப்ரகாசம்போலும் அழகு தெய்வம் போன்றும் பெண் குழந்தை பிறந்ததைக் கண்டவுடனே மஞ்சுவின் சந்தோஷம் கூறத்திறமில்லை. "அம்பிப்பயல் எழுந்தானா! அவ னைக் கூப்பிடுங்கள். அவனுக்குத் தான் முதலில் அவன் தங் கச்சி சாந்தாதேவியைக் காட்டுவேன்" என்று தானே இன்ன குழந்தை என்பதை முன் கூட்டி விளம்பரப்படுத்தி சிறு குழந்தையைப்போல் குதித்தாள்.

இதைக்கேட்ட வெளியிலிருக்கும் எல்லோரும் 'பெண் குழந்தையா!... இன்று வெள்ளிக்கிழமை..... உத்திர நக்ஷத்

திரம். இரண்டும் ஸ்ரீமகாலக்ஷமிக்கே உரித்தான நாளாகை யால் சாக்ஷாத் லக்ஷமியே பிறந்துவிட்டாள். தாயார் பெய ரும் லக்ஷமியானதால் இவள் பெயர் சாந்த லக்ஷ்மி என்று ஆர்ப்பரித்தார்கள்.

மஞ்சுளா வெகு குதூகலத்துடனும் பெருமிதமான உத்ஸாகத்துடனும் குழந்தையை சுத்தம்செய்து சொக்காய் போட்டுப் பின் வெளியில் கொண்டுவந்து "தம்பீ! கல்கண்டு கொண்டுவா........தங்கச்சிக்கு நகை செய்வதற்குப் பவுன் கொண்டுவந்து அவள் கையில் கொடு" என்று அன்போடு கூறினுள்.

தம்பியின் சந்தோஷத்தை அளவிட்டே சொல்லமுடி யாது. குழந்தையின் தாதா பாட்டி முதல் வேலைக்காரர் வரையில் வந்து பார்த்தார்கள். வெட்கத்தினுல் தகப்பனுர் மட்டும் வரவில்லை. அம்பிப்பயல் சும்மாவிட்டானு! ஓட்ட மாக ஓடிச் சென்று "அப்பா! மஞ்சுளாமாமி எனக்கு ஒரு அழகான தங்கச்சி பாப்பாவே கொண்டுவந்திருக்காப்பா! நாங்க எல்லோரும் பாத்தோம், நீயும் வாப்பா!" என்று கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து அறைப்பக்கம் நிறுத்திப் பின் "மாமீ! தங்கச்சியை கொண்டுவா! எங்கப்பா பாக்கணும்...என்றுன்.

மஞ்சு மீண்டும் கொண்டுவந்து காட்டினுள், சங்கரின் சகோதரி "சங்கர்! வைர செட்டு நகைகளுக்கு இப்போதே ஆர்டர் கொடுத்துவிடு" என்று திட்டம் போட்டாள். மஞ்சு ஒரு வாரமாக இங்குவந்தும் சங்கரைப் பார்த்ததில்லை. குழந்தையைக் காட்டும்போதுதான் அவனைப்பார்த்தாள், மன்மதாகாரமாயும், ஆஜானுபாகுவாயும், அழகு வெள்ளம் போலும் இருப்பதை அவள் கையிலிருந்த குழந்தை அப் படியே ப்ரதிபலிப்பதுபோல் அசல் தகப்பனுர் சாயலாகவே உரித்துக்கொண்டிருப்பதை யறிந்தாள்.

குழந்தையையும் தகப்பனுரையும் மாறிமாறிப் பார்த் தாள். தாயைப் போல் பிள்ளையும் தகப்பனைப்போல் பெண் ணும் இருந்தால் மிக்க அதிர்ஷ்டசாலிகளாக இருப்பார்கள் என்று தனக்குப் பெண் பிறந்தபோது தன் கணவனையே உரித்திருப்பதைக் கண்டு வீட்டில் சொல்லியது நினைவிற்கு வந்தது.

அந்த க்ஷணமே பழையகாலத்திய காக்ஷிகள் கண்முன்பு திரைப் படம்போல் தோன்றியதால் தான் கையில் குழந்தையுடன் இருப்பதையே மறந்தவள்போல் காணப்பட்டாள். இவளது உள்ளக்கிளர்ச்சியை அறியாத வீட்டுக்காரர்கள் "பாவம்! களைப்பு மேலிடுவதுபோலிருக்கிறது" என்று எண்ணி இட்டிலி காப்பி, பழங்கள் முதலியவைகளைக் கொண்டு கொடுத்து பலவந்தமாகச் சாப்பிடச்செய்தார்கள்.

காப்பியை மட்டும் குடித்துவிட்டுப் பிறகு தன் வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டாள். தட்டு நிறைய வெத்திலை பாக்கு கற்கண்டு முதலியவைகளை லக்ஷ்மியின் நாத்தனுர் காரில் கொண்டுவைத்தாள்.

மஞ்சு:—அத்தையம்மா! மருமாளுக்கு காப்பிடுவதற்கு இன்றே ஆர்டர் கொடுங்கள். இப்போது சந்தோஷந்தானே! ஆனுல் ஒன்று... ஆத்திற்கு பெண் பிறந்துவிட்டால் அத்தை அசல் தான் என்கிற பழமொழியை எண்ணிக் கவலைப் படாதீர்கள்—என்று கூறிச் சிரித்தாள்.

அத்தை:—எனக்குக் கவலையே இல்லை. நான் பிறந்த போது என் அத்தைகள் இல்லையா? இப்போதும் அவர்கள் தான் வீட்டுக்கு முதல் பெண்களாக விளங்குகிருர்கள். என் தகப்பனுர் தன் தங்கைகளுக்கு மரியாதை செய்த பிறகு தான் எனக்குச் செய்வார்! எங்க அம்பிப்பயலுக்குப் பெண் பிறந்தாலும்கூட எங்கள் அத்தைதான் வீட்டுக்கு அதிகாரியாயிருப்பாள் என்ருள்.

இதற்குள் அம்பிப்பயல் ஓட்டமாக ஓடிச்சென்று ஒரு கொத்து ரோஜாமலரைக்கொண்டுவந்து "மாமீ! இந்தா! நீ வெச்சுக்கோ! இதை ஓங்காத்துலே பாப்பா இருக்குன்னயே அதுக்குக் குடு" என்று கூறியவாறு மஞ்சுவின் தலையை இழுத்து வைக்க வந்தான்.

மஞ்சுளாவின் கண்கள் மளமளவென்று நீரைக்கக்கின. புஷ்பத்தை வாங்கி அப்படியே கையில் வைத்துக்கொண்டு... "நான் வருகிறேன். சந்தோஷம்... மாலை 5 மணிக்கு மறுபடி வருவேன்" என்று கூறிச் சென்ருள். அத்தையம்மாள் அம்பிப் பயலை மிரட்டி... "சீச்சி...படவா! அவ தலையில் பூவை வைக்கப் போனயே. அசடு, அப்படி இனிமேல் செய்யாதே. செய்தால் ஸ்வாமி கண்ணைக் குத்தி விடுவார்! தெரிந்ததோ!" என்ருள்.

# 10

“என்னும்மா! அவர்க ளிஷ்டப்படியே பெண்குழந்தை தானே பிறந்தது? எனக்கு ஜோஸியம் தெரிந்துவிட்டது பாரு” என்றார் கிழவர். மஞ்சுளாவின் கலங்கிய மனது சந்தோஷத்தையும் பொலிவையும் இழந்திருப்பதை கிழவர் கவனிக்கவில்லை. மஞ்சு தட்டில் கொண்டுவந்ததை வழக்கம் போல் கிழவரின் கையில் கொடுத்துப்பின் “உங்கள் ஜோஸியத்தின்படி பெண்தான் பிறந்தது தாதா!......குழந்தைகள் எங்கே...காலை ஆகாரம் புசித்தார்களா! ப்ரைவேட் வாத்தியார் வந்தாரா!” என்றாள்.

தட்டிலுள்ள மலைப்பழத்தைத் தின்றவாறு கிழவர் “சகலமும் முறையே நடக்கிறது. கவலையே படாதே. நீ முதலில் ஸ்நானம் செய்து ஏதாவது ஆகாரம் எடுத்துக் கொள்ளு. பாக்யலக்ஷ்மி வீட்டிலிருந்து உன்னைத் தேடினார்கள். வந்ததும் வரச் சொல்வதாகச் சொல்லியனுப்பினேன்...என்றார்.

மஞ்சுளா ஸ்நானம் செய்து சிறிது ஆகாரம் எடுத்துக் கொண்டு பிறகு பாக்யலக்ஷ்மியின் வீட்டிற்குச் சென்றாள். அது சாதாரண அபார்ஷன் கேஸாகையால் சீக்கிரமே திரும்பி அன்று மாலை லக்ஷ்மியின் வீட்டிற்குச் சென்றாள். அம்பிப்பயல் வீதியிலேயே நின்றிருந்தவன் மஞ்சுவைக்கண்டதும் “மாமீ! இனுமே உனக்குப் பூவைக்க வரமாட்டேன். ஸ்வாமி என் கண்ணை குத்திடுவார்னு எங்க அத்தை என்னை மொட்டினா!...என்று முன் கூட்டியே காலை சம்பவத்தை நினைப்பூட்டியதும் மஞ்சுவுக்கு திக்கென்று தூக்கிப் போட்டது.

பதில் பேசாமல் உள்ளே சென்றாள். லக்ஷ்மியும் குழந்தையும் வெகுஅமைதியாகப் படுத்திருந்தார்கள். சற்றுநேரம்குழந்தையுடன் கொஞ்சினாள். வேலையை முடித்துக்கொண்டுவெளியே வந்தாள்...லக்ஷ்மியின் மாமனார்...“ ஏம்மா! உடம்பு ஒன்றுமில்லையே! டாக்டரின் உதவி ஒன்றும் வேண்டாமே என்றார்

மஞ்:—இதுவரையில் ஒன்றுமே இல்லை. டெம்பரேச்சர் நார்மலிலிருக்கிறது. பல்ஸூம் நன்றாக இருக்கிறது என்றாள்

அப்போதுதான் ஆபீஸிலிருந்து கம்பீரமாக புல்ஸூட்டுடன் வரும் சங்கர் இங்கு தகப்பனாரும் நர்ஸூம் பேசுவதைக் கண்டு...“உடம்பு சவுக்யந்தானே...ஜூரம்ஒன்றுமில்லையே?” என்றான்.

மஞ்:—ஒன்றுமில்லை. கடவுள் கிருபையால் எல்லாம் சரியாயிருக்கிறது.

சங்கர்:—மெத்த சந்தோஷம். மாசிலாமணி முதலியார் இன்று ஆபீஸில் உங்களைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார். உங்களிடம் அவருக்குள்ள மதிப்பும், ப்ரீதியும் சொல்ல முடியாது.

மஞ்:—எல்லாம் கடவுளின் அனுக்ரகம். நல்லவர்களின் மனத்திற்கு நன்மையாகவே தோன்றுகிறது...நான்வருகிறேன் என்று கிளம்பினாள்.

"என்ன விசித்திரம்!...என்ன ஆச்சரியம்! லக்ஷ்மியின் வீட்டில் குழந்தைக்குக் காப்படிக்கும் கல்யாண வைபவம் தடபுடல்படுகிறது. மேளக்காரன் ஊதித்தள்ளுகிறான். இதற்குள் ஏழுநாட்களாகிவிட்டன.

இதுவரை 14 முறைகள் இங்கு வந்திருக்கிறேன். ஆனால், ஆனால் ஒவ்வொருதரம் வரும்போதும் ஒவ்வொரு புதிய புதுமையையல்லவா காண்கிறேன்... இதென்னக்கொடுமை?...என் கால்கள் இந்தக் கட்டடத்திற்குள் அடி எடுத்து வைக்கும் போதே என் கண்களும் மனமும் என் அந்த பிம்பத்தைத் தேடியலைகின்றன? சீச்சீ! என்னையே நான்நம்பமுடியவில்லையே, என் மனமே என்னை ஏமாற்றுகிறதே!"...என்று எண்ணியபடியே உள்ளே சென்றாள்.

சங்கர் சிறு குழந்தைக்குச் செய்த வளையல்கள், கொலுசு, மோதிரம் முதலியவற்றைக் கொண்டுவந்து "நர்ஸம்மா... இதோ பார்த்தீர்களா! பாப்பாவின் நகைகள், லக்ஷ்மிக்குக் காட்டுங்கள்" என்றுவலுவில்கூப்பிட்டு அவள்கையில் கொடுத்துவிட்டு வாசற்படியருகிலேயே நின்றான்.

சந்திரனை மேகம் மறைப்பதுபோல் மஞ்சுவின் மதியை கலக்கமாகிய மேகம் மறைத்துச் சற்றுக் குழப்பியது. லக்ஷ்மியிடம் நகைகளைக் காட்டிவிட்டு அதிகநேரம் அங்கு நிற்காமல் இங்கேவந்து நின்றாள்...நகைகளை முன்வைத்து சங்கரைப் பார்க்கும் பார்வையையும்...அவன் இவளை விழுங்குவதுபோல் பார்ப்பதையும் தடைகட்டவே முடியாதுபோனதால் மஞ்சு சடக்கென்று உள்ளே போனாள்.

அவள் மனமாற்றத்தின் போக்கை அவளால் சகிக்கவே முடியவில்லை. இந்த எண்ணம், இந்த தோற்றம்!...அநீதி, அக்ரமம்.... என்பதை அறியாமலில்லை. அறிந்து கண்டிக்கிறாள்.

மனத்தைத் தண்டிக்கிருள். கடவுளின் முன்பு வேண்டிக் கண்ணீர்விடுகிருள்... ஊஹூம்... அவளைப்பிடித்த ஏழரைநாட்டுச் சனியன் விட்டகல்வதாகவே காணவில்லை!

''கனவில்கூடக் கருதாத இந்தச் சண்டாள எண்ணம் எப்படி என்னிதயக் கோட்டையில் புகுந்தது?''...என்று அவளே வியக்கிருள். இவளுடைய விஷ விதையை ஆழமாக ஊன்றி அதற்கு எருவிட்டு நீர் ஊற்றி வளர்ப்பதேபோல் லக்ஷ்மிக்குக் கடுமையான ஜ்வரம் வந்ததால் 10 நாட்களுடன் கிற்கவேண்டியவள் அதற்கு மேலும் வரும்படியான கட்டாயம் உண்டாகி இவளை கதிகலங்கச் செய்தது.

## 11

க்ஷயரோகப் புழுவைப்போல் மஞ்சுளாவின் இதயத்துள் உருக்கும் ஒரு பயங்கரக் கொடிய புழுவின் துளைப்பை அவளைப்படைத்த பரந்தாமன்கூட அறிவானே மாட்டானே! ஏன்! ''இத்தனை சீலவதியாய்...நெருப்புக்குச் சமானமான த்யாகச் சுடரோ! தன்னலமற்ற தாயபிம்பமோ!'' என்று உலகமே அதிசயிக்கத்தக்க முறையில் பகவான் அவளுக்குக் கொடுத்திருந்த நல்லறிவு, பரோபகாரம், த்யாகம், கடமை... என்கிற செல்வங்களை நொடிப்பொழுதில் கைத்தவறவிட்டுத் தான் மகத்தான த்யாகி என்கிற பதத்தை இழந்து மகத்தான அபராதி என்கிற ஒரு தரித்திர கவசத்தையணிந்து, கண்ணிருந்தும் குருடியாகப் போகிருள் என்று பகவான் தான் எதிர்பார்த்திருக்க முடியுமா!

ஒரு தனிகன் தன்னிடம் யாசித்த யாசகனை உண்மை யாசகன் என்று எண்ணி அவன் சொல்வதை நம்பி தானத்தைக் கொடுக்கிருன். அந்த யாசகன் கையில் பொருள் வந்ததைப் பார்த்த உடனே புத்தியை மேகம்போல் மாயை மறைக்க, அவன் எண்ணங்களே மாறிப்போய் அதே தனத்திஞல் அவன் மதுபானமும் மங்கையர் மோகமும், கொலையும் செய்து இன்புற்ருல் அது தனிகன் கொடுத்த தனத்தின் மீதா குற்றம்?...

மஞ்சுளாவின் கதியும் அதேபோலத் தான் முடிந்தது என்பதை இன்னும் அந்தப் புனிதமான டாக்டர் தம்பதிகள் அறியவில்லை.

லக்ஷ்மியின் நோயைக் குணப்படுத்த ஸ்ரீமான் சேகரும் ப்ரபல லேடி டாக்டரான ரமாதேவியும் அமர்த்தப்பட்டார்கள். ப்ரஸவித்த உடம்பில் நோய் பிடிப்பது வெகு சுலபம். பிடித்துக்கொண்டால் விடுவதுதான் மகா கஷ்டம். சந்திர க்ரகணம் பிடிப்பது சுலபம், விடுவது கஷ்டம் என்று சொல்வார்களல்லவா! அதற்காவது விடுகிறது என்கிற நிச்சயம் இருக்கிறது. மனிதர்களைப் பிடிக்கும் க்ரகணத்திற்கு அந்த நிச்சயமேது? டாக்டர் சேகர் மஞ்சுவையே இங்கு இரவு பகலாக இருந்து வேலை செய்யும்படி ஏற்பாடு செய்துவிட்டதால் அவளால் தடுக்கவும் முடியாது போய்விட்டது. இம்மாதிரி சந்தர்ப்பங்கள் நல்லதாயின் மேன் மேலும் அமைந்து நன்மையைச் செய்கின்றன; கெட்டதாயின் தடுக்க முடியாத ப்ராரப்தங்கள் ஒன்றுகூடிப் பாதாளத்தில் அழுத்திவிடவும் செய்கின்றன.

தனக்கு இந்தகைய பேருதவி செய்துக் கண் திறக்க வைத்த டாக்டரின் வார்த்தையைத் தட்டிவிட்டுத் தான் ஏதோ சாக்குச் சொல்லித் தப்பிக்கலாமா—என்று முதலில் எண்ணினாள். ஆனால்—இதயத்தில் விஷத்தேள் கொட்டி விநாடிக்கு விநாடி விண் விண் என்று தெறித்து உபத்திரவம் செய்கிறதே! அதை எப்படிச் சகிப்பது?

லக்ஷ்மியின் வீட்டிற்கு முதல் முதல் தான் வந்த அன்று இருந்த நிலைமையும்—இப்போது சரியாக ஒருமாதம்—31 நாட்கள்—உருண்ட பிறகு தன் நிலைமையும் அவளையே குழப்பிச் சித்திரவதை செய்கிறது...பாவம்...பதித்ரோகம்...மக்களுக்குச் சத்ருத்தனம்...பெண் இனத்திற்கே தீராத இழுக்கு...எல்லாந்தான் இதய ஏட்டில் பளிச் பளிச்சென்று மின்னுகின்றன. ஆனால்—ஆனால் என்ன...அந்த விஷம் நிறைந்த காதல் நோய் அவளை விடவே இல்லை...

லக்ஷ்மிக்குத் தலையில் ஐஸ் வைத்தபடியே கண்கள் அறைக் கதவுப் பக்கம் துளாவுகின்றன. அறை வாசற்படியில் சங்கர் வந்து நின்று—"என்ன நர்ஸ்!...ஜுரம் இறங்கியதா?—பல்ஸ் எப்படி இருக்கிறது? ஆகாரம் சென்றதா!" என்று கேட்கும்போதே நான்கு விழிகளும் ஒன்றோடொன்று அவைகளின் பாஷைகளில் பேசி பெருத்தத் தீக்கனலை எழுப்புகின்றன,

சாக்ஷாத் ஸ்ரீ மகாலக்ஷ்மியைப் போலவே சங்கருக்கு மனைவி வாய்த்திருந்தும் அவன் அவளை ஓர் க்ரகலக்ஷ்மி, தன் நிழல் என்று மதியாமல் ஏதோ மனைவி...வீடுவாசல் என்கிற மேல்பூச்சான போக்கில்...மிதமான புட்டிப் பழக்கம்... அதற்குத் தாளம்போடும் வேசிப் பழக்கம் முதலியவைகளை மைனர்களின் கோஷ்டியில் சேர்ந்து ஆதி முதலே மேல் கொண்டொழுகும் புண்யசீலனாகையால் மஞ்சுளா வந்த முதல் நாளே அவள் மீது கண் வலை வீசிவிட்டான்.

அதோடு தினந்தோறும் பார்த்துப் பேசி அவள் உள்ளத்தையும் கள்ளத்தனமாக அறிந்துகொண்டதால் எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றி—அதிலும் மண்ணெண்ணெயையே ஊற்றி அந்தக் கொடிய கனலை வளர்த்துவந்தான். அவனுடைய கண்வலையால் கட்டுண்ட காரிகையின் இதயமாகிய எஞ்சின், கற்பு...கடமை என்கிற தளைகளாகிய தண்டவாளத்தைவிட்டு ஐம்புலன்களாகிய ரயிலை இழுத்துக்கொண்டு அதபாதாளத்தில் இறங்கிவிட்டது.

அவளுடைய பலவீனத்தை நன்கறிந்த சங்கர் தன்மனைவியின் அத்தனை உடம்பிலும் அதைப் பற்றிய கவலை அதிகமில்லாமல் மஞ்சுளாவிடம் பேசுவதற்காக மனைவியை விசாரிப்பது போல் நிமிடத்திற்கு நூறுதரம் வந்து இவளை முற்றிலும் பித்தம் பிடிக்கச் செய்துவிட்டான். மஞ்சுளாவின் மனக்கலக்கத்தை அளவிட முடியவில்லை. நிமிடத்திற்கு நிமிடம், ''இது அடுக்குமா இது நியாயமா ..இது தெய்வகுற்றமல்லவா? ஒரு விதவை...அதிலும் 27 வயதுவரையில் மிக்க பவித்திரமான வாழ்க்கைப் பாதையில் சென்று அமோகமாகப் பெயர் எடுத்த ஒரு இளம் சிறுமியின் உள்ளத்தில் திடீரென்று இத்தகைய புசல் காற்றடித்து கற்பு,பொற்பு,கடமை,பெண்மை...முதலிய சகலத்தையும் நாசம் செய்து த்வம்சமாக்கிவிடுவது தர்மமா?

என்றெல்லாம் இராப்பகல் ஏங்கித் துடித்தாள். மனத்தை இன்னும் தளரவிடாதபடி எவ்வளவோ கட்டு திட்டம் செய்து அடக்கத்தான் முயன்றாள்...ஆனால்......விதி...விதி என்கிற எரிமலை அவள் கட்டு திட்டங்களின் தலைமீது நசுக்கி சங்கரின் பிம்பத்தையும் அதே விகார எண்ணத்தையும் தலை தூக்கச் செய்துவிட்டது.

லக்ஷ்மிக்கு சீக்கிரமாவது குணமாகவேண்டும். அல்லது ஒழியவேண்டும். இரண்டுமில்லை. இவள் இதயத்தில் தீ வளர்

வதற்கு அனுகூலமாய் லக்ஷ்மியின் நோயும் நீடித்து மஞ்சுளாவைச் சங்கிலியிட்டுப் போட்டுக் கட்டிவிட்டது.

வீட்டிற்கு வரும் ஒரு நிமிஷத்தில் முதல் சம்பாத்யத்தில் செய்த மூன்று படங்களையும் பரிதாபகரமாகப் பார்த்து "எனக்கு வந்துள்ள ஆபத்தைத் தீர்க்கமாட்டீர்களா! என்று இறைஞ்சுவது போல் பார்ப்பாள். இவளுடைய சாபக்கேட்டின் எதிரொலிபோல் அப்படங்களில் இவள் ஸ்தாபித்த பிம்பங்கள் எப்படியோ மறைந்து சங்கரின் உருவம்தான் விதவிதமாக கண்ணில் பட்டு கதிகலக்கும்.

தன் குழந்தைகளின் முகத்தைப் பார்த்தாலும் சங்கரின் உருவம். கிழவர் கூடவா...இதென்ன இந்திர ஜாலம்! என்று தத்தளிப்பாள். தடுக்க எண்ணும் மனமே சகலத்தையும் மறந்து பறிகொடுத்துத் துடிப்பதை அவளால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. இது ஏதோ சோதனைக் காலந்தான். தன் வாழ்க்கை எத்தகைய பயங்கர பூகம்பத்தில் கொண்டு விடுமோ! என்கிற நினைப்பும் இல்லாமலில்லை.

கண் இருக்கும்போதே......இது நெருப்பு......இது அதல பாதாளம்...இது ஆழமறியாதக் கடல்...இதில் எந்த வகையில் விழுந்தாலும் மீளமுடியாத நிலைமை உடனே வந்துவிடும் என்பதை நன்ருக அறிந்தும், குருடனைப்போல் விழுந்தால் அதன் பலனைத்தானே காட்டும்......நான் மனத்தினுல்கூட நினைக்கக்கூடாததை ..செய்கையால்...சீச்சீ !.......இதென்ன விஷக்கடி வேதனை...இந்த பச்சைக் குழந்தைகளுக்கு த்ரோகம் நினைப்பதா தாயுள்ளத்தின் தவச் சிறப்பாகும்?...அக்கினி சாட்சியாகக் கைப்பிடித்தவனின் திவசம் செய்வதையும் துறந்து விபரீதத்தில் புகுவதா ஒரு உத்தம ஜாதிப் பெண்ணுக்கு தர்மமாகும்......ஐயோ! நினைக்கும்போதே தேகம் நடுங்குகிறதே...

இத்தனை பயங்கரமும் தெரிந்திருக்கையில் பாழும் மனம் விஷத்தைக் குடித்து இன்புறுவதற்கே துடிதுடிக்கின்றதே... என் செய்வேன்? இத்தனை நாட்களாய் நான் இந்தக்கொடிய பயங்கரத்திலிருந்துப்பிழைக்க எத்தனை ப்ரம்ம ப்ரயத்தனம் செய்தாலும் என் விதி அதைத் தடுக்கவிட மாட்டேன் என்கிறதே...ஹா...சங்கர்......என்கிற சப்தத்தை நினைக்கும் போதே...ஊம்...என் இதயத்தில் எங்குமில்லாத குளிர்ச்சி

உண்டாகி என்னைப் பின்னும் பித்தம் தலைக்கேறச் செய்கின்றதே......

இன்று குழந்தைகளாயிருப்பவர்கள் நாளை பெரியவர்களாக ஆகமாட்டார்களா? அவர்களுக்கு அறிவு வந்தபிறகு இந்தப் பாவியைப்பற்றி என்ன நினைப்பார்கள்?...ஏன்?...... அவர்களை விட்டுவிட்டு நாம் மட்டும் சங்கருடன் தனித்து ஓடிவிட்டால்...மனத்தால் கெட்டுவிட்டதோடு நில்லாது இந்தப் பாழ்மனம் முற்றிலும் சாவதற்கே துள்ளி யலைகிறதே...என்ன செய்வேன்...என்று குழம்புகிறாள்......குழந்தைகளின் முகத்தைப் பார்க்கிறாள்...விதி என்கிற சங்கிலி இவளை பலமாகப் பிடித்துப் பிணைத்து வலிய இழுக்கும்போது நல்லறிவுக்கும் நெறியான வழியில் செல்வதற்கும் இடம் கொடுக்குமா?...... எத்தனையோ ப்ரயாஸைப்பட்டு மனத்தை முறித்துக்கொண்டு ...சீச்சீ இனி நான் அந்த வீட்டிற்கே போகப் போவதில்லை. டாக்டர் கேட்டால் உண்மையை அம்மகானுபாவனிடத்தில் உடைத்துக் கூறி என் ஆபத்தை நிவர்த்திக்க வேண்டுகிறேன் ...என்கிற வைராக்யத்தை ஒரு திவலை வாரவழைத்துக்கொண்டு அன்று லக்ஷ்மியின் வீட்டிற்குப் போகாது நின்றாள்.

சரீரம் அங்கு போகவில்லையேயன்றி மனது பூராவும் அங்குதான் தாண்டவமாடுகிறது சங்கர் இத்தனை நேரம் அங்கு பேசும் சமயம்...தானே காப்பி கொண்டு கொடுக்கும் வேளை இது...தோட்டத்தில் சந்திக்கும் நேரம் இது... அமிருதப்ரவாகம்போல் பேச்சை அள்ளி இறைக்கும் வேளை இது......என்ற த்யானத்தின் மத்தியில் சரீரத்தை மட்டும் கட்டுப்படுத்தி அங்கு செல்லாது நின்றாள்...

மணி நகர்வது யுகம்போவதுபோல் தோன்றியது...... இரவு அடியோடு இமை இசைக்கவில்லை. அவளுடைய வைராக்யத்தைச் சிதைத்துத் தள்ளும் உளியைப்போல சங்கரின் கார் ஹாரன் அந்த கொட்டும் மழையிலும் கேட்டவுடனே அந்தப் பாழும் மனத்திலிருந்த கடுகளவு வைராக்யமும் எப்படித்தான் பறந்ததோ! அவளே அறியவில்லை... "சங்கர்...சங்கர்!" ...என்று பெருமிதமான மகிழ்ச்சியுடன் தனக்குள் தானே கூறிக்கொண்டு வீதிக்கு ஓடினாள்.

# 12

சேகருக்கும் ரமாவுக்கும் நோயாளியிடம் அதிருப்தியே உண்டாகத் தொடங்கியது. அன்று மழை ஜோவென்று கொட்டுகிறது. லக்ஷ்மியின் நிலைமையும் கவலைக்கிடமாயிருக்கிறது. வீடுசென்ற மஞ்சுளா வராததால் 'உடனே அழைத்து வந்து, ஒத்தடம் கொடுத்து தைலங்கள் போட்டுத் தேய்க்க வேண்டும்' என்று டாக்டர்கள் சொன்னார்கள்.

ட்ரைவர் வெளியே போயிருந்ததால் சங்கர், சமயம் வாய்க்குமா! என்று காத்திருந்த திருடன் துடிதுடித்து ஓடுவதுபோல் நடித்துக் காரை எடுத்துக் கொண்டு ஓடினான். சாறல் அடிக்காமல் நாற்புறமும் திரைச்சீலை மூடியிருந்த காருக்குள் மஞ்சுளா அமர்ந்ததும் கார் பறந்தது. ஆனால் அதிக தூரம் பறக்கவில்லை. அடைமழையானதால் தெருவில் நடமாட்டமும் அதிகமில்லை.

'திருடன் திருடுவதற்குச் சமயத்தை அறியமாட்டானா!' என்பது நிதர்சனமாகி விட்டதுபோல் சங்கர் சற்றும் பயமோ, கூச்சமோ, மனைவியின் பரிதாபமோ ஒன்றையும் மதியாமல் மஞ்சுளாவின் கரங்களை அவளே எதிர்பாராமல் பிடித்துக்கொண்டு......''மஞ்சு! இனி இதை ஒளிக்கவோ, மறைக்கவோ முடியாது. மாதங்கள் மூன்றாகிவிட்டன. உன் துடிப்பை நானறிந்ததுபோல் நீகூட அறியமாட்டாய்.

நான் நேற்றுதான் ஜோஸியரிடம் கேட்டதில் 'லக்ஷ்மிக்கு இனி குணம் என்பதே கிடையாது; இன்னும் சில நாளைக்குள்ளேயே மறைந்துவிடுவாள். நீ ஒரு அழகியைக் காதலித்திருக்கிறாய். அவள் விதவை...ஆனாலும் நீ அவளை மணந்துகொள்ளப்போகிறாய்'...என்று தேங்காய் உடைத்ததுபோல்சொல்லி விட்டார். எனக்கே ஆச்சரியமாயிருந்தது. ஆகையால் நாம் இனி யாருக்கும் பயப்படவேண்டாம். ஏதோ, அவள் வந்த காரியம் முடிந்ததால் அவள் போகிறாள். காதலறியாத கல்யாணமென்கிற பந்தலில்...சிறையில் நீயும் தவித்தாய். அதன் விதிப்பயனால் நீயும் தாயாகிவிட்டாய். நானும் அப்படியே தவித்துத் தகப்பனாகிவிட்டேன். எனக்கு ஏராளமான செல்வமிருப்பதால் குறைவின்றி இன்பமாக வாழலாம். காதலை அறிந்து உணர்ந்து அனுபவிக்கும் பருவம் நம்மிருவருக்கும் இப்போதுதான் வந்திருக்கிறது. இது தேக தத்துவ சாஸ்திரத்தில் உள்ள பாடந்தான். நானும் உன்னைத் தனித்துச்

சந்திக்க மிகவும் துடித்தேன். இன்றுதான்சமயம் வாய்த்தது; நீ இனிமேல் கவலையே படாதே. மறுமணம் செய்துகொண்டு இன்பமாக இருக்கலாம். உன்னை என்றென்றும் என் இதய ராணியாக எண்ணி வருகிறேன். கவலைப்படாதே" என்று மோகவெறியில் கடகடவென்று மெஷின்போலக் கூறி அவள் கலங்கிய உள்ளத்தை நன்ருகக் கலக்கி அதீத நிலைமையை... அதீத உணர்ச்சியை......உண்டாக்கி அவளை ஓர்பதுமைபோல் பேசாத உயிர்ச்சித்திரம்போலாக்கிவிட்டான்.

ஆனால் பெருமூச்சு துரத்துவதையும் இதயம் வேகமாக அடிப்பதையும் அவளால் தடுக்கமுடியவே இல்லை. சற்றுமுன் தான் நினைத்த வேதாந்தக்கட்டடம் இருந்த இடம் தெரியாமல் படுசூரணமாகி அவ்விடத்தில் 'பறிகோடுத்துவிடு' என்கிற தீவிரமான பயங்கரக் கட்டடம் எழும்பத்தொடங்கியது... "சங்கர்!" என்ருள்......ஆனால் நீண்ட மவுனம்......அதற்கும் சற்று பொறுத்து...சங்கர்...எனக்குப் பேசவே தெரியவில்லை. நாம் இருவருமே ஒரு வகையில் பெற்ருேராகிய பீடத்தில் அமர்ந்தவர்கள். அதிலும் மகத்தான பாவத்தைச்செய்து சகலத்திற்கும் அருகதையற்ற இப்பாவிக்கு இத்தகைய விஷயத்தைக்கனவில்கூட நினைப்பதற்கு யோக்யதை அற்றிருந்தும் இம்மாதிரி ஒரு...

என்று பேசுவதைத் தடுத்து சங்கர்... "போதும் உன் வேதாந்தம்...மஞ்சு! அந்தக் கட்டுப்பெட்டிப் பேச்சுக்களை இனி எடுக்காதே...நாசமாய்ப்போன சாஸ்திரத்தைத் தூக்கிக் குப்பையிலே போடு...உன் புத்தியறியாத நிலையில் உன்னைத் தாயாக்கிய பாதகம் அதைச் செய்தவர்களைச் சார்ந்ததேயன்றி உனக்கொன்றுமில்லை...மஞ்சு...அந்தப் பழயஉளுத்துப் போன சுவரில் உன் வாழ்க்கை இன்பச் சித்திரங்களை எழுத முடியாது...காலத்திற்கேற்றபடி புதிய நாகரீகச் சுவரைக் கிளப்பியாயிற்று. அதையும் இடித்து விடாதே...

மஞ்:—வாஸ்தவம்...அச்சுவர் தானுகவே இடிந்து தலை மீது விழுந்து இப்பாவியை நசுக்கிவிட்டால்?...

சங்:—உன் வார்த்தையின் கருத்தை அறிந்தேன்...மஞ்சு! இந்த சங்கரை அப்படிப்பட்டவன்என்று எண்ணுதே...உன்னை என் ஆயுள் உள்ள வரையில் கைவிடவே மாட்டேன். உன் குழந்தைகளும் நீயும் பதமாக வாழும் முறையில் நான் எதை வேண்டுமாயினும் செய்வதற்குச் சித்தமாயிருக்கிறேன்... ஒரு

போதும் உன்னைக் கைவிடவேமாட்டேன். மஞ்சு...என்னை நம்பு இனி அரைக்ஷணங்கூட நான் உன்னைப் பிரிந்திருக்கவே முடியாது...

மஞ்:—சங்கர்!...நேர்பாதையைக் கடந்து.....வரும்... பாவியை என்றென்றும்...என்று முடிப்பதற்குள், சங்கர் ஆவேசம் தாங்காது "மஞ்சு!...சந்தேகமோ சங்கடமோ இனி எதுவும் வேண்டாம்...நான் உன் அடிமை...உன் தாசன்...உன் உயிர்...உன் சொத்து"...என்று மோகவெறியால் தடபுடலாகக்கூறி அவளை அவளே எதிர்பார்க்காத விதமாய்ச் சேர்த்து அணைத்துக்கொண்டான்.

அந்த ஸ்பர்சத்தின் ஆனந்தத்தை...அந்த அமுதவார்த்தைகளின் களிவெறியை...இதயத்தில் கொந்தளிக்கும் புசல் காற்றின் சூறாவளியை...அவளால் விலக்கமுடியாது மதி இழந்து...மனந்துணிந்து...பெண் தன்மை என்கிற கட்டுத்தளையை முறித்தெறிந்து அந்த மாயா பிம்பத்தின் ஆலிங்கனத்தில் ஐக்யமாகிவிட்டாள்—என்றால் இனி என்னவேண்டும்?

இதை விதியின் விளையாட்டென்பதா! கால வெள்ளத்தின் கடும் சாபமென்பதா! மஞ்சுளாவின் அப்போதிய மனத்தில் என்ன தோன்றியது?...புயல் காற்றில் அகப்பட்டுத் தவிக்கும் மரக்கலத்திற்கு ஒரு துறைமுகம் வெகு சமீபத்திலேயே கிடைத்துவிட்டது போன்ற ஓர் ஆறுதல் தோன்றியது! தனது லக்ஷ்யம் ஈடேறியதாகக்கூட ஒரு கணம் நினைப்பு உண்டாகியது!

இத்தனை உணர்ச்சி வெள்ளத்தில் புரளும் அவள் வாய் பேசவே இல்லை. கண்களால்மட்டும் அவனை விழுங்கி ஏப்பமிட்டாள். அவளுடைய தாயுள்ளம், பரிசுத்தம் எப்படியோ ஒரு க்ஷணத்தில் பறந்தே போய்விட்டது. 'ஒரு பெண் செய்யக்கூடிய...நினைக்கக்கூடிய...செய்கையா இது!" என்பதுவும் அவள்வரையில் மறந்தது. பயங்கரமோ, கொடியகலவரமோ ஒன்றுமே அப்போது தோன்றவில்லை....

இச்சம்பவத்திற்குப் பிறகும் ஒரு மாதமாகியது. லக்ஷ்மி அதே நிலைமையிலிருக்கிறாள்; எனினும் மஞ்சுளாவின் மாறுதலும் சங்கரின் கள்ளத்தனமும், பார்வை, சிரிப்பு, செய்கை முதலிய விஷமத்தனங்களின் மாசும் இவ்விருவரையும் தவிர பிறருக்கும் ஒருவாறு தெரியவாரம்பித்தன. அதை முதல்முதல்

கண்டு சந்தேகித்தவள் முதல்முதல் மஞ்சுளாவைக் காரில் ஏற்றி அழைத்துவந்த அதே அம்மாள் தான்.

அவள் வயிறு எரிந்து தன் தம்பியிடம் உண்டாகிய கடுங் கோபம் சொல்லிலடங்காது. ''லக்ஷ்மியின் வாழ்க்கைக்கு உலைவைக்க இந்த மூதேவியை நான் ஏன் அழைத்து வந்தேன்? இப்போது இந்த ரஸாபாஸத்தை வெளிக் கிளப்பினுல் மன அதிர்ச்சி உண்டாகிவிடுமோ?'' என்கிற பயத்தினுல் பொறு மையை வகித்தாள். எனினும் இவ்விருவர்களையும் பார்க்கும் பார்வையும், நடத்தும் மாதிரியும் திடீரென்று வேறுவிதமாகி விட்டது.

அம்மட்டோடும் நிற்காமல் எப்படியாவது இந்த நர்ஸ் வேலைக்கு வேறொருத்தியை அமர்த்தி இவளை விரட்டிவிட வேண்டுமென்கிற அதீதமான எண்ணம் அந்தம்மாளின் இதய த்தை முற்றுகையிட்டுக்கொண்டது. அதற்கே சமயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

---

## 13

''சாந்தி! சாந்தி! இங்கு வா !'' என்று சேகர் தன் மனை வியை அழைத்தார். சாந்தியும் பலகாரம், காப்பி சகிதம் வந்து அமர்ந்தாள்.

''நாடகமேடையில் நடக்கும் நாடகத்திற்கு ஒருவனே, ஒருத்தியே பல வேஷங்கள் போட்டு நடிப்பதைப் பார்த்து வெறும் வேஷம் என்று நினைக்காமல் உண்மையைப்போல் பார்க்கிறோம். நேற்று அருந்ததி வேஷமணிந்த அதே நடிகை இன்று தாசியாக வேஷம் தரித்துவருகிறுள்.........நேற்று நியாயாதிபதியாய் நடித்த அவன் இன்று கொலைகாரனுக நடிக்கிறுன்''...

என்று டாக்டர் பேசும் புதிர் வார்த்தைகளின் அர்த்தம் தெரியாத சாந்தாதேவி சிரித்துக்கொண்டே...''என்ன டாக் டர்! திடீரென்று புதிர் போட்டுவிளையாடக் கிளம்பிவிட்டீர்கள். உலகமே ஒரு நாடகமேடை என்பதுதானே வேதாந்தத்தின் ஸாரம். அந்தந்த நாடகபாத்திரமாக நடித்தவுடனே அவன் வெற்று மனிதனுகி விடுவதை சரீரத்திற்கும் ஆத் மாவுக்குமுள்ள சம்மந்தத்தை விளக்குகிறுர்கள். நீங்கள்

எதற்காக திடீரென்று நாடகத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள்? என்றாள்.

டாக்:—எதற்காகச் சொல்கிறேனா! நாம் பாடுபட்டதெல்லாம் விழலுக்கிறைத்த நீராகிவிட்டதை எண்ணி மனம் புண்ணாகிவிட்டதால் சொல்கிறேன். நேற்று அருந்ததி வேஷம் போட்டவள் இன்று தாசி வேஷத்தை வாழ்க்கையிலேயே உண்மையாகப் போடுவாளேயானால் அதை என்னவென்று சொல்வது? நெருப்பை ஈ மொய்த்ததென்றால் நீ நம்புவாயா?

சாந்:—எனக்கொன்றுமே புரியவில்லையே! நெருப்பை ஈ மொய்ப்பதாவது? நெருப்புக்குப் பதில் அதில் வெல்லம் இருக்கலாம்... நீங்கள் யாரைப்பற்றிச் சொல்கிறீர்கள்?...

டாக்:—யாரைப்பற்றிச் சொல்கிறேன் என்பதை இதோ காட்டுகிறேன். இப்படி ஜன்னலில் நின்று எதிர்வீட்டைப் பார்த்துக்கொண்டிரு. அங்கிருந்து யார் வருகிறார்கள் என்று பாரு... உனக்கே புரியும்.

வெகு உன்னிப்பாக சாந்தாதேவி அதே வீட்டைப் பார்த்துக்கொண்டு நின்றாள். சிறிது நேரத்திற்கெல்லாம் மஞ்சுளா அவ்வீட்டிலிருந்து வெளியேவந்தாள். இதுபரியந்தம் வெறும் கோடாலிமுடிச்சாக இருந்த அவள் கூந்தல் இன்று வெகு ஷோக்கான பிச்சோடாவுடன் காணப்பட்டதோடு கோணவகிடும் நூதனமாக ப்ரகாசித்தது.

சாதாரண வெறும் வெள்ளைப் புடவை தவிர வேறு கட்டிவிராத அவள் இடுப்பில் வெகு மேன்மையாய் ப்ரிண்டு செய்த ஒரு ஷோக்குச்சேலை அலங்கரித்தது. வெறும் ஜம்பர் போட்டிருந்த அவள் உடம்பில் கப்பும், காலரும் குச்சும் பறந்த ஸில்க்கு ஜாக்கெட் காட்சியளித்தது. சாந்தாதேவியால் இதை நம்பவேமுடியவில்லை...'என்ன! என்ன! போகிறது மஞ்சுளாவா!... இருக்காது... அவளைப்போன்று சாயலுள்ளவளாக... இல்லையே... அவளேதான்... டாக்டர்! இதென்ன உண்மை காட்சியா... இந்த பால் எப்போது திரிந்துவிட்டது?' என்று அடக்கமுடியாத வியப்புடன் கேட்டாள்.

டாக்:—எப்போதும், எதையுமே நான் அவசரப்பட்டுச் சொல்லிவிடுபவனல்ல என்பது உனக்குத் தெரியும். திவான் பகதூர் ஸேதுராம் வீட்டில் அவர் நாட்டுப்பெண் மிகவும்காயலாக இருப்பதும் நான் வைத்தியம் செய்வதும் உனக்குத் தெரியுமல்லவா! நான்தான் இவளை முதலில் நர்ஸாக அமர்த்திக்

கொள்ளச் சொன்னேன். அங்கு சென்ற இந்தப் புண்யவதி நர்ஸ்தொழிலைமட்டும் செய்யாமல் திவான்பகதூரின் குமாரன் மீது....சேச்சே! ...சொல்லக்கூடப் பிடிக்கவில்லை. ஐயோ பாவம்! அந்த பெண்கூட இனி பிழைக்கமாட்டாள். மனைவி தன்னுடைய உயிர்போன்றவளாயிற்றே—அவள்தானே தனது இன்பக்களஞ்சியம்—என்பதை மறந்து அந்த மகானுபாவன் தறிதலையாயிருக்கிறானும்—நான் இந்த வெட்கக்கேட்டை முத லிலறியவில்லை. பிறகு வெகு கூர்மையாகக் கவனித்து அறிந்து கொண்டேன். விவகாரம் முற்றிவருகிறது. அவர்கள் வீட் டில் இந்த ஊழல் புராணத்தைத் தெரிந்துகொண்டுவிட்டனர்.

சங்கரின் சகோதரி இன்று காலையில்என்னைத் தனியாகச் சந்தித்துத் தான் விஷயமறிந்ததாகவோ, எனக்கு விஷயம் தெரியுமென்றோ ஒன்றையுமே காட்டிக்கொள்ளாமல்‘‘டாக்டர்! லக்ஷ்மியின் படுக்கை விரித்து மாதக்கணக்கு ஏறிக்கொண்டே வருகின்றது. அதோடு அந்த நர்ஸ் எந்த வேளையில் காலை வைத்தாளோ, அதுமுதல் பீடை பிடித்துவிட்டதுபோல் எனக்கொரு எண்ணம் மனத்தில் தோன்றிக்கொண்டே இருக் கிறது. ஆகையால் அவளை தயவுசெய்து மாற்றிவிட்டு வேறு நர்ஸ் அமர்த்தினால் தேவலை என்று நினைக்கிறேன். உங்களைக் கேட்காது செய்யக்கூடாதென்றதனால் கேட்கிறேன்’’...

என்று வெட்ட வெளிச்சமாய்ச் சொல்லிவிட்டாள். இதைக் கேட்கும்போதே எனக்கும் காரணம் தெரிந்து விட்டது. நானே இவளை நிறுத்திவிட எண்ணினேன். அந் தம்மாளும் சொல்லியதால் என் முகத்தில் சொல்லவறியாத அசட்டுக் களை தாண்டவமாடி யிருக்கவேண்டும். இல்லா விட்டால் அந்தம்மாள் மேலும் தொடர்ந்து...‘டாக்டர்!...தினம் விடிந்து எழுந்தால் இந்த விதவையின் முகத்தில் விழிப்பது லக்ஷ்மிக்கும் எனக்கும் வெறுப்பாக இருக்கிறது’’ என்றும் கூறினார்கள்.

அந்தம்மாள் சொல்லியது தெரியாமல் திவான் பகதூர் வேறு வந்து, ‘‘என் டாக்டர்! இன்னமும் நர்ஸ் வேண்டுமா! என் பெண்ணே சகலமும் கவனித்துக்கொள்ளட்டுமே....... வேண்டுமானால் வேறு நர்ஸ் வைத்தால் என்ன.’’ என்றார்.

‘‘தாராளமாகவைத்துக்கொள்ளுங்கள். எனக்கு ஆக்ஷே பனையே இல்லை’’ என்று நான் சொல்லிவிட்டு வரும் வழியில்

ரெடிமேட் ஸில்க்குக்கடையில் சங்கரும் இவளும் இருப்பதைப் பார்த்தும் பார்க்காததுபோல் வந்துவிட்டேன்.

சாந்தி! என் மனது என்னை என்னவோ சித்திரவதை செய்கிறது. என்ன செய்வது? ஒருகாலத்தில் தன் குழந்தைகளை விட்டு ஆஸ்பத்திரிக்குச் செல்ல மறுத்த அதே மஞ்சுளா—தலைவாரிப் பின்னிக்கொள்ளமாட்டேன் என்று பிடிவாதம் செய்த அதே மனுஷி—ஆஸ்பத்திரியில், பாலும், பழமும் சாப்பிடமாட்டேன் என்று கண்கலங்கிய அதே மனுஷி—இன்று இருக்கும் நிலைமையைப்பார்த்தால் என் இதயம் துடிக்கிறது. இப்படிப் பாழாய்ப்போகப்போகிற நாற்றக் குப்பைக்கு நாம் நல்ல மணத்தைச்சூட்டினோமே என்று வருந்துகிறேன்'' என்று விசனித்தார்.

சாந்தா:—என்னால் நம்பவே முடியவில்லை டாக்டர்! அந்த வீட்டில் இரவு பகல் வேலை; அதனால்தான் இங்கு வரவில்லை என்று நான் நிச்சயமாய் நம்பி இருந்தேன். நானும் அவளைப் பார்க்க முடியவில்லை. ஆனால் அவளுடைய தாதா 15 நாட்களுக்குமுன்பு ஒருநாள் இங்கு வந்திருந்தார். அவர் பேச்சில் இதுகாறும் இருந்த நயமோ, ஜீவனோ, உத்ஸாகமோ ஒன்றுமே இல்லை.

வெறும் வரட்டு தொனியில் சூனியமான பார்வையில் அடிக்கடி பெருமூச்சுடன் காணப்பட்டதோடு, ''வயது அதிகமாகிய பிறகு இனி உயிருடன் இருக்கக்கூடாது. எனக்கு ஆயுள் எத்தனை காலத்திற்குத்தான் என்று எழுதவே பகவான் மறந்துவிட்டான்போலிருக்கிறது. அதனால்தான் முடிவு என்பதே இல்லை. அதிக வயது இருந்தால் அதிக சங்கடந்தான் அனுபவிக்க நேரும்.''

என்று சலிப்புடன் கூறினார். எனக்கு இந்த வார்த்தைகளின் மர்மம் என்ன தெரியும்? ''ஏன் தாதா! இப்படிப் பேசுகிறீர்கள்? அந்த திக்கற்ற அனாதைக்கு உங்களைத்தவிர வேறு திக்கும் ஆதரவும் ஏது தாதா!'' என்று நான் உண்மை அங்கலாய்ப்புடன் கேட்டேன்.

அதற்குக் கிழவர், வெகு அலக்ஷியபாவத்துடன் ''ஆமாம் ...திக்கும் திவானமும் நான்தானா...கடவுள் இருக்கிறான். அவன் மகா வஞ்சனைக்காரன். நியாய அனியாயமற்றக் கல்லுதான் ...வெறும் கல்லுதான். அவன் கல்லாயிருப்பதுபோல என்னை

யும் கல்லாக வைத்திருக்கிறுன். என்னுல் இனிமேல் தாளவே இல்லை. வீட்டில் சின்னதுக்கு ஜுரம்; அவள் இரவு பகல் வீட்டிற்கே வருவதில்லை. என்பாடுதான் திண்டாட்டமாயிருக்கிறது. என்ன செய்வது? உம்—நான் வருகிறேன்.!'

என்று தானுகவே எழுந்துபோய்விட்டார். இந்தஅருந்ததியின் மாறுதல்கள் முற்றும் அவருக்கு வியப்பையும்விசனத்தையும் கொடுத்திருப்பதால்தான் அவர் அப்படிச்சொல்லியிருக்கிறுர் என்று இப்போது தெரிகிறது...என்ன உலகம்! என்ன அநியாயம்! என் உடம்பே பற்றி எரிவதுபோலிருக்கிறதே. உதவிசெய்தநம்மெதிரிலேயேஉதவாக்கரையாகவும் காட்சியளிக்கும் அந்த மூதேவியை நாம் அழைத்து இன்னமும் ஒருதரம் புத்திசொல்லி இந்த அவமானம் துர்நாற்றத்தை ஒருவாறு மறைக்கப்பார்த்தால் என்ன!...எனக்கு அதுதான் சரி என்று தோன்றுகிறது என்று படபடத்துப் பேசினுள்.

டாக்:—சாந்தி! நான்கூட அப்படித்தான் நினைத்திருக்கிறேன். அக்கழுதையை நான் கூப்பிட்டனுப்பினுல் தலை கிறுக்கேறி நாறிவிடும். அந்த வீட்டில் செருப்படிகொடுத்து நிறுத்திவிடட்டும். பிறகு தானுக இங்கு வருகிறதா என்று பார்ப்போம். அப்படியும் வரவில்லை என்றுல் பிறகு பார்க்கலாம். இந்த சிங்கார ஒய்யாரத்துடன் நம்மெதிரில் வருவதற்கே அவளுக்கு முகம் உண்டா என்ன!...

சாந்:—டாக்டர்! இம்மாதிரியான விஷயங்களை நான் வைத்து வளரவிடக்கூடாது. உடனுக்குடன் வெட்டிக்களைந்துவிடவேண்டும். ஏதோ பாவம். அவளும் வெகு பரிசுத்தவதியாய்த்தானிருந்தாள். கால தேவதையின் கூத்துதான் இம்மாதிரி எல்லாம் ஆட்டுகிறது. சில ப்ரகிருதிகளுக்கு நாற்பது வயதில்கூட காதல் அரும்பி சிறியவர்கள் போலாய் விடுவார்கள் என்று நீங்கள் பலதரம் தேகதத்வ சாஸ்திர விதியிலிருந்து படித்துக் கூறவில்லையா!

ஒரு விதவை, நாலைந்துகுழந்தைகள்உள்ளவள், கொண்டு கொடுத்து சம்பந்தமும் செய்தபிறகு பிறத்தியானுடன் நேசம் வைத்துக்கொண்டு கெட்ட பெயர் பெற்றதை நாம் மறந்துவிட்டோமா!...இன்னெரு விதவை கணவனிறந்து 15 வருஷம் கழித்து மூர்க்கனின் சகவாஸத்தினுல் அத்தனைபெரியவளாகிய அவள் புத்திகெட்டு வயிறுவீங்கி ஊர் சிரித்துக் காரித்துப்

பியதையும் கடைசியில் தற்கொலையால் மாண்டதையும் மறந் தீர்களா!

பாழாய்ப்போன உலகத்தில் பலவிதத் தாண்டவங்கள் நடக்கின்றன. இந்தப் பாழும் பெண்ணுக்கு இன்னும் 27வயது நிரம்பவில்லை. திடமான மனத்தை எப்படியோ தளரவிட்டு விட்டாள். நாம் இது பரியந்தம் செய்த உபகாரத்துடன், இவளை மனத்தால் கெட்டதுடன் விலக்க வழிசெய்து பெண் இனத்தின் மானத்தைக் காக்கவேண்டும். இதனால் நமக்கு ஒன்றும் குறைந்துவிடாது. ஏதோ! ஆசையின்வேகத்தில் சிதறி இருக்கலாம். அவள் தானாக வராவிடினும் கூப்பிட்ட னுப்பியே நான் சொல்லத்தான் போகிறேன்—என்று சற்று அழுத்தமான குரலில் பிடிவாதமாகக் கூறினாள்; டாக்டரும் அதற்குச் சம்மதித்தார்.

---

## 14

வழக்கம்போல் மஞ்சுளா லக்ஷ்மியின் வீட்டிற்குப் புறப் படும்போது லக்ஷ்மியின் வீட்டின் சமயல்காரன் ஒரு கவரை அவளிடம் கொடுத்துச்சென்றான். அதைத் திறந்ததும் அதில் 200 ரூபாயிக்கு ஒரு செக்கும் ஒரு கடிதமும் இருந்தது கண்டு வியப்புடன் படிக்கலானாள்.

மேடம்!

உங்களுக்குச் சேரவேண்டிய தொகையை இதோடு அனுப்பியிருக்கிறேன். இனிமேல் நர்ஸ் அவச்யமில்லை. தாங்கள் வரவேண்டாம்.

ஸேதுராம்

இந்த வரிகளைத் திருப்பித் திருப்பிப் படித்தாள். அவ ளுக்கு ஒன்றுமே புரியவில்லை. ''நர்ஸ் வேண்டாம் என்பதில் அர்த்தமே இல்லை. நோயாளியின் உடம்பு நாளுக்கு நாள் அதிகமாகிவரும்போது நர்ஸுக்கு வேலை இல்லை என்பதில் ஏதோ மர்மமிருக்கிறது! ஒரு வேளை இந்த ரகஸியம் அவர் களுக்குத் தெரிந்திருக்குமோ!''...என்று திடுக்கென்று தூக்கி வாரிப்போட்டது.

இளம்பியவள் அப்படியே திரும்பிவந்து உட்கார்ந்தாள். ஒன்றும் தோன்றாது சற்று நேரம் மவுனத்திலாழ்ந்திருந்த சமயம் அவள் குழந்தைகள் ப்ரைவேட்டிலிருந்து வந்தார்கள். அழுக்கு சட்டையும் பாட்டைத் தலையும் பொலிவற்ற முகமும் கண்டு ஒரு வினாடி தம்பித்தாள்.

லக்ஷ்மி ப்ரஸவித்த நாளிலிருந்து இன்றுவரையில் தன் குழந்தைகளைத் தான் கவனிக்கவே இல்லை என்பது அந்த நிமிஷத்தில்தான் அவள் மனதில் பட்டது...“என்ன...குழந்தைகளைக் கவனித்து நான்கு மாதங்களாகிவிட்டனவா! உண்மையாகவா!”...என்று தன்னையே தான் கேட்டுக்கொண்டாள்.

ஒரு க்ஷணம் அவளை ஏதோ கூறத்திறமற்ற சங்கடம் செய்தது. உடனே குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்துவைத்துத் தலையை வாரிப்பின்னினாள். அவள் குழந்தைகளை கவனியாமல் இதுபரியந்தம் இருந்த குற்றத்தை அரைக்ஷணம் நினைத்து...“உண்மையில் நான் குழந்தைகளின் க்ஷேமத்தைக் கோராமலா இருந்தேன்”...என்று ஒரு அசட்டு எண்ணமும் ஊடே தோன்றியது.

அதே மனத்தில் அதே வினாடியில் “ஐயோ! இன்று சங்கரைப் பார்க்க முடியாதுபோய்விட்டதே. என்னை நிறுத்திய விவரம் அவருக்குத் தெரியுமோ தெரியாதோ!” என்கிற எண்ணம் மின் வெட்டுப்போல் பாய்ந்து தேகம் ஜிடுஜிடென்று சிலிர்த்தது. “ஏம்மா உடம்பு சிலிர்த்தது. குளிரு எடுக்கிறதா? என்று குழந்தைகள் கேட்கும்போதுதான் அவளுக்கு மறுபடியும் உலகஞானம் உண்டாகியது. குழந்தைகளைக் கட்டித் தழுவிப் பின்...ஒன்றுமில்லையடா கண்ணா...என்று சமாதானம் செய்துப்பின் சாப்பாடுபோட்டு பள்ளிக்கூடம் அனுப்பினாள். இருக்கை கொள்ளாது தவித்தாள். கிழவரும் எங்கு போனாரோ இன்னும் வரவில்லை.

தன்னுடைய வாழ்க்கையில்கூட இத்தகைய புதிய...நம்பத்தகாத ஒரு விசித்திரம் சம்பவிக்கும் என்று கனவில்கூட காணவில்லையே...இதென்ன சோதனை என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கும்போது...மஞ்சுளா...என்று வீதியில் குரல் கேட்டதும் ஏதோ புத்துயிர் பெற்றவள்போல் எழுந்து ஓடினாள்.

சங்கர் கதவருகில் வந்து நிற்பதைக் கண்டதும் அவளையறியாது ஒரே துள்ளாகத்துள்ளி, “வாருங்கள்! வாருங்கள்

இப்போதுதான் உங்கள் வீட்டிலிருந்து கடிதம் வந்தது... உங்களையும் நினைத்தேன்...மாடிக்குவாருங்கள்'' என்று அழைத்துக்கொண்டு ஓடினாள்.

சங்கரும் மாடியில் வந்து உட்கார்ந்தபடியே...''எங்கே அந்தக்கிழம்?''...என்று சற்று அலட்சியமாகவேகேட்டான்.

மஞ்:—எங்கேயோ காணவில்லை; எங்காவது பொழுது போக்காகப் பேசிக்கொண்டிருப்பார்...ஏன்? எதற்குக் கேட்கிறீர்கள்?

சங்:—எதற்குமில்லை! முன்பு இரண்டுதரம் வந்தேன். அவர் வெள்வெள்ளென்று சீறியவாறு பதில் சொன்னார்....அது கிடக்கட்டும் உனக்கு எங்கள் வீட்டுக் கிழம் பணமும் கடிதமும் அனுப்பிவிட்டதாமே! நல்லதாய்ப் போயிற்று! அங்கும் பேசமுடியவில்லை: இப்போது ஹாய்யாய் நாம்எங்காவதுசுற்றிவிட்டு வரலாம். நீ எங்கே இந்த கடிதத்திற்கு வருத்தப்படப் போகிறாயோ! ஒருகால் நானும்தான் சேர்ந்து அனுப்பியதாக தப்பு அர்த்தம்செய்து கொண்டு கவலைப்படப் போகிறாயோ என்று பயந்துதான் நான் இப்போது அவசரமாக இங்குவந்தேன். இந்த விஷயம் ஒருவேளை என் வீட்டில் தெரிந்திருக்குமோ என்றும் நான் சந்தேகப்படுகிறேன். உன் தாதாவுக்குத் தெரியுமோ?...

மஞ்:—தெரியாதென்று தான் நினைக்கிறேன். ஆனால் நேற்றுமுதல் என்னுடைய மாறுதலும் இந்த புதிய அலங்காரங்களும் அவரைச் சற்று ப்ரமிக்கச் செய்திருப்பதாக நினைக்கிறேன். ஏனெனில் ஒருகாலத்தில் தலையே வாராதிருந்த நான் இப்போது பிச்சோடா போடுவதை வெறிக்க வெறிக்கப்பார்க்கிறார். உங்களுடைய வற்புறுத்தலுக்காகவும் என் மனமே இந்த நாகரீகச் சிங்காரத்தை விரும்புவதாலும் நான் துணிந்து செய்துகொள்வது தாதாவுக்கு மட்டுமில்லை, ஊருக்கே வியப்பாக இருக்கிறது.

சங்:—ஊருமாச்சு...நாடும் ஆச்சு, எது வேண்டுமானால் எப்படியாவது கிடக்கட்டும். இதோ பாரு, நம்மை இனி அசைக்கமுடியாது. லட்சுமி பிழைத்துக்கொள்வது இனி கனவுதான். அப்படியவள் பிழைத்தாலும் எனக்கு அதைப் பற்றி அவசியமில்லை; அவள் இறந்துவிட்டால் உடனே நாம் ரிஜிஸ்தர்செய்துகொண்டு நிம்மதியாகப் போய்விடலாம்.

மஞ்:—வாஸ்தவம்தான். இதற்கு எதிர்ப்பு ஏகப்பட்ட திருக்குமென்று தோன்றுகிறது. முதலில் உங்கள் வீட்டில்...

சங்:—(இடைமறுத்து) மஞ்சு! என்னை! பயந்தாங் கொள்ளி என்று எண்ணினுயா? பூ...யாருக்குமே நான் பயப் படமாட்டேன்...சரி. அந்த பேச்சு எதற்கு? தினம் நாம் சந்திப்பதை இங்கு வைத்துக்கொள்ளலாமா...

மஞ்:—வேண்டாம்......என் தாதாவே முதலில் சந்தே கிப்பார். அதோடு என்னைத் தேடிக்கொண்டு வருபவர்கள் நிறைய உண்டு. நமக்கு ரிஜிஸ்தர் ஆகும் வரையில் சற்று அப்படி—இப்படி இருந்து விடுவோம். பிறகு.....என்னும் போது, 'மஞ்சுளா!' என்று கிழவர் கூப்பிடும் குரல் கேட்டு திடுக்கிட்டாள்.

சங்கரும் எதனுலோ சற்று அச்சமடைந்தவனுய், "உன் தாதாவல்லவா கூப்பிடுகிறுர்!.......சரி நான் வருகிறேன். நீ கவலைப்படாதே." என்று கூறியவாறு எழுந்து விருவிரென்று இறங்கிப் போய்விட்டான். முகத்தில் அசட்டுக்களை தாண்டவ மாட அவள் பின்னேடுவந்து..."என் தாதா இத்தனை நாழிகை எங்கே போயிருந்தீர்கள்" என்றுள்.

கிழவர், திருடன்போல் தடதடவென்று ஓடும் சங்கரைப் பார்த்ததும் அதிர்ச்சியடைந்தவராய் அவனையே உற்று நோக்கிவிட்டு..."இவன் யாரு?"...என்று கடுமையான தொனி யில் கேட்டார்.

மஞ்:—இவரா! நான் இப்போது வேலைசெய்கிறேனே அந்த, வீட்டுக்காரர். நர்ஸின் உதவி போதுமாம். இதோ பாருங்கள் 200 ரூபாயிக்கு செக்குக் கொடுத்து நேரில் தாங்க்ஸ் சொல்லி விட்டுப் போகிறுர். இவர் சம்சாரந்தான் படுத்திருப்பது...... என்று கூறி கூடவிருந்த கடிதத்தை மறைத்துவிட்டு செக்கை மட்டும் கொடுத்தாள்.

கிழவர் செக்கை வாங்கிப் பார்த்தார். பேசாமல் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். இச்செய்கை மஞ்சுளா வுக்கு மிக்க வியப்பாகவே இருந்தது.

"தாதா! மணி இரண்டாகிவிட்டதே! ஏன் சாப்பிடாமல் படுத்திருக்கிறீர்கள்? ஏதாவது உடம்பு சரியில்லையா! என்று மஞ்சு அன்புடன் கேட்டாள். மஞ்சுவே சற்றும் எதிர்பாராத விதமாய் கிழவர் சிடுசிடுத்தப் பார்வையுடன் "எனக்குத்தான் நீ நேற்றுமுதல் பஞ்ச பக்ஷபரமான்னத்தையே விருந்தளித்து வருகிறாயே! இதைவிட சாப்பாடு வேறு என்ன வேண்டும்? வயிறு நிரம்பிவிட்டது. இனி அது வெடித்து ப்ராணன்தான் போகவேண்டும்...

என்று ஆரம்பிக்கும் போதே மஞ்சுளாவுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. என்ன பதில் சொல்வது என்று சிறிது தயங்கினாள். ஆனால் கிழவர் அவள் பேசும்வரையில் விட்டுக் கொடுக்கவில்லை. பொங்கிவரும் துக்கக்கனலின் பொறிகள் வெடித்து வெகு உக்ரமாக வெளிக்கிளம்புவதுபோல் "மஞ்சுளா! சில நாட்களாகவே—ஏன் இந்த எழவெடுத்த கேஸுக்கு இரவு பகல்போகவாரம்பித்ததிலிருந்தே...நீ ஒரு தினுசாக மாறியிருப்பதைக் கண்டு முதலில் நான் இளைப்போ, இளைப்போ என்று எண்ணினேன். நாளடைவில் நீ உன்னுடைய கடமைகளினின்றும் புரண்டு சமூகத்திற்கும் கட்டிய கணவனுக்கும் பெற்ற குழந்தைகளுக்கும் உபகாரம் செய்த உத்தமர்களுக்கும்,—ஏன் உலகத்திற்கே, பெண் இனத்திற்கே —நீ தீராத ப்ரஷ்டையாகிக்கொண்டு வருகிறாய். உன் செய்கையினால் நீ மகத்தான அபராதியாகி விட்டதை நீ உணரவில்லை.

பதித்ரோகம் உன்னை வீண் போக்காது...நீ தாயாகிய விதவை என்பதை மறந்தாய்போலும். கன்னி விதவையாக விருப்பின் நானே சூட்டோடுசூடாக மணத்தை முடித்துவைத்திருப்பேன். நீ கேவலம் பதிதையாகிவிடுவாய் என்றும் நெருப்புச் சுடராயிருந்த உன் பரிசுத்த இதயம் திடீரென்று துர்நாற்றச் சாக்கடையாகிவிடும் என்றும் நான் சொப்பனங் கூடக் காணவில்லை.

உனது அதீதமான செய்கையின் விளம்பரம் நேற்று முதல் ஊர் சிரிக்கவாரம்பித்துவிட்டது. இனி ஒரே பேச்சு. நீ தொழில் நடத்தி வாரிக்கொண்ட பலன் போதும். எனக்குள்ள சொல்ப நிலம் உள்ள க்ராமத்தில் எனக்கென ஒரு சிறு குடிசை இருக்கிறது. இன்றே நாம் இந்த ஊரைவிட்டுக் கிளம்

பியபிறகுதான் மறு காரியம் செய்ய வேண்டும். ஏதோ! பரிதாபத்திற்கும், பச்சாத்தாபத்திற்கும் பாடுபட்டு உன்னை இத்தனை மாதம் கண்டிக்காமல் கவனித்து வந்தேன். நீ வேலை செய்து நல்ல பெயரெடுத்த அதே மாசிலாமணி முதலியார் வீட்டில் உன்னைப்பற்றிக் கேவலமாகப் பேசுவதை என் காதால் கேட்ட பிறகு என் ப்ராணனை உடனே மாய்த்துக் கொள்ளவேணும் போலிருக்கிறது. இந்த அவமானம், இந்த உணர்ச்சி உனக்கில்லாது வெறும் கட்டையாக நீ ஆய்விட்டதை என்னால் சகிக்கமுடியவில்லை.

உலகமறியாத உன் பிள்ளை நேற்று இரவு என்னைக் கேட்கிறான். ''அம்மா முன்பெல்லாம் ஏதோ மாதிரி இருப்பாளே இப்போதுமட்டும் ஜோராயிருக்கிறாளே... அம்மா முன்பு விதவை என்றும் அலங்காரம் செய்துகொள்ளக் கூடாதென்றும் நீ சொல்வாயே! இப்போது விதவைஇல்லையா தாதா?''... என்ற வார்த்தைகள் நன்றாய்ப் பழுக்கக் காய்ச்சிய ஈட்டியை என்னிதயத்தில் பாய்ச்சுவதுபோல் வேதனை செய்தன...

ஒரு விதவை... தாயாகிய பீடத்தில் ஏறிய பிறகு விதவை ...உன் கடமையை... தர்மத்தை... நீதியை... மறந்து நீ அந்த எல்லையைமீறி காலை வைக்கத் துணிந்த நீ என்ன கதியை அடைவாயோ! எனக்கே தெரியவில்லை''... என்று வயிறெரிய நெருப்பைக் கக்குவதுபோல் சொல்வது முற்றும் மஞ்சுளாவின் காதில் கேட்காமலில்லை.

இதயத்தைத் தாக்காமலில்லை, மனத்தைப் பிளக்காமலுமில்லை. அதே சமயத்திலும் அதே மனத்திலும் மோகவெறி என்னும் பீடத்தில் சங்கரின் பிம்பத்தை ஆழமான ஸ்தானத்தில் ஆவாகனம் செய்துள்ளதை அவளால் அசைக்கமுடியவில்லை. சங்கரின் ஒவ்வொரு வார்த்தைகளும், அவனது ஸ்பரிசத்தில் தான் கண்ட இன்பவெறியின் பாவசமும் தான் மேல் நோக்கி நின்றதால் அவள் என்ன செய்வதென்றே தெரியாமல் சிறிது நேரம் தத்தளித்தாள்.

பிறகு தைரியமாகப் பேசத்தொடங்கி ''தாதா! என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். உலகவிவகாரம் இன்னதென்று அறியாத காலத்தில் என்னை நீங்கள், மலராத மொட்டைக் கசக்கிப் பிழிந்துப் பாழாக்கியதற்கு நானு ஜவாப்தாரி! இந்தப் பரந்த உலகத்தில் கோடிக்கணக்கான ஜீவராசிகளும் மனிதர்களும் ஆனந்தமாக இன்பதடாகத்தில் துளையும்போது அந்த

திவலைகூட என்மீது படக்கூடாதா...எனக்கு இந்தச் சிறு அலங்காரங்கூடக் கொடிது என்று பச்சாத்தாபமில்லாது பேசுகிறீர்களே தாதா!...

கிழவரின் கோபம் உச்சத்தை அடைந்துவிட்டது. 'சீச்சீ மானங்கெட்ட ப்ரஷ்டை...பெண்தன்மையும், நாணமும் அற்றப் பைசாசமே...பச்சாத்தாபமாம்...இன்பத்தடாகமாம்... இலுப்பக்காயாம்...பேமானி ...சீ உன் முகத்தில் விழித்தாலும் பாவம்...ஜென்மாந்திரப் பாவத்தின் ப்ரதிபிம்பம் நீ என்பது தெரிந்திருந்தால் உன்னை அன்றே—உன் தாய் செத்த அன்றே—கழுத்தை முறித்துப் போட்டிருப்பேன்...

நான் ஒரு ஆணாகப்பிறந்திருந்தும் அதிபாலியத்தில், உன் தாயாரைவிட்டு என் மனைவி இறந்தாளே, மறுவிவாகம் இருந்தும் நான் செய்துகொண்டேனா! உன் தாயாரின் போஷணைக்கும் அவளைக் காக்கவேண்டிய கடமைக்கும் ஆண் சிங்கமாகிய நானே இந்த அநித்ய வாழ்க்கையைத் துச்சமென எறிந்துத் தள்ளினேன்.

வளர்த்த பெண்ணும், பசுத்தோல்போர்த்த புலியாகிய உன்னை என் காலில் கட்டிவிட்டு மறைந்தாள். அப்போதும் நான் என் மன வைராக்யத்திலிருந்து ஒருதிவலை புரண்டிருப்பேனா! வெத்திலை போடுவதுகூட கிடையாது......பெண்கள் எப்படி விதவையாயிருக்கிறார்களோ! அப்படியே ஆண்களும் இருக்கவேண்டும் என்கிற புதிய முறையை உலகம் கையாளாவிடினும், நான் இந்த நிமிஷம்வரையில் கையாண்டு வந்திருக்கும் என்னெதிரில் நான்வளர்த்த குழந்தை என்று எண்ணுகிற நீயா இப்படி நடப்பது!

முடியாது. முடியாது ......இந்த அவமானத்தை இந்த அக்ரமத்தை என்னால் சகிக்க முடியாது!...உம்.....உடனே மூட்டை கட்டுகிறாயா! இல்லையா......மறுபேச்சு பேசினால் கொலைப்பாதகம் வந்தாலும் வரட்டுமென்று உன்னையும் கொன்றுவிட்டு என்னையும் குத்திக்கொள்வேன்...உம்...—என்ன யோசனை? —இந்த தளுக்குமினுக்கு அலங்காரங்களை முதலில் களைந்து எறி! நீ தாய்ப்பீடத்திலிருந்து தவறமுயலும் பயங்கரத்தை அறியவில்லை என்றாலும் என்னால் அதைச் சகிக்கமுடியாது...புறப்படு—" என்று பெரிய கர்ஜனை செய்

துக் கண்களில் தீப்பொறி பறக்கத் தானே மூட்டைகட்ட வாரம்பித்தார். இன்னது செய்வதென்று அறியாது அயோமயமான நிலைமையில் மூழ்கிவிட்டாள்.

16

"சாந்தி! உனக்கு விஷயம் தெரியுமா! கிழவர் மகா எமகாதகப் பேர்வழியாய்த்தானிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அசைக்கமுடியாத மலையை அந்தக் கிழவர் அசைத்து அவளை எப்படியோ இழுத்துக்கொண்டு க்ராமத்திற்குப் போய் விட்டாரே...இது எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. போகும் போது சொல்லிக் கொள்வதற்குக்கூட அவள் வரவில்லை பார்த்தாயா!"...என்றார் டாக்டர்.

இதைக் கேட்ட சாந்தாதேவி சற்றும் நம்பவே இல்லை. "என்ன! மஞ்சுளாவை அழைத்துக்கொண்டு க்ராமத்திற்குப் போய்விட்டாரா! இதென்ன நம்பவே முடியவில்லையே! கிழவருக்கும் பொறுக்காது போய்விட்டதாக்கும் பாவம்... குழந்தைகள்!" என்றாள்.

டாக்டர்:—அன்று உன்னிடம் பேசியபிறகு நான் வெளியே சென்றிருந்தேன். அங்கு கிழவரை அகஸ்மாத்தாகச் சந்தித்தேன். என்னால் விஷயத்தைக் கூறாமலிருக்க முடியவில்லை. அவரிடம் சகலத்தையும் கூறி முடித்துவிட்டேன். அதே சமயம் சங்கர் அவள் வீட்டிற்கே போயிருப்பதைக் கிழவருக்கு என் காரில் இருந்தபடியேகாட்டி அவரை அப்போதே வீட்டிற்குப் போகச் சொன்னேன்.

இதைக் கேட்ட அவர் உள்ளம் துடித்த துடிப்பைச் சொல்லிமுடியாது. உடனே போனார்; அதை நானே பார்த்தேன். அவர் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் சங்கரும் வெளியே வந்தான். பிறகு நடந்ததை நான் நேரில் அறியவில்லை. இன்று இதோ கடிதம் வந்திருக்கிறது. அதோடு நாம் தான் இரண்டு நாளாய் ஊரிலில்லையே...இக்கடிதத்தை நீயே படித்துப்பாரு—என்று கொடுத்தார். சாந்தாதேவி அதைப் படிக்க வாரம்பித்தாள்.

"அன்புள்ள நண்பருக்கு, உபயகுசலம்.

மகா உத்தம சிகாமணியும் பரோபகார வள்ளலுமான தங்கள் முகத்தில் விழிக்கவும் அச்சமும் அவமானமும்

No. 104338

பாதித்ததாலும் தருணம் தவறினால் மரணம் என்கிறபடி அந்த ஆவேச வேளையைத் தவறக்கூடாதென்கிறதாலும் நான் அந்தக் கொலைபாதகியைக் கண்டித்து அன்றே கட்டிப்பிடித்து இழுத்துவருவதுபோல் வந்துவிட்டேன். இந்த சிறிய பட்டிக்காட்டிலும் அரைமைல் தூரத்தில் ஒரு போர்டு பள்ளிக்கூடமிருக்கிறது. அதில் குழந்தைகளைச் சேர்க்கலாமென்றிருக்கிறேன். இந்த அல்ப நாயின் தோற்றம் சவத்தைப் போலிருக்கிறது. என்னிடமோ குழந்தைகளிடமோ பேசவே இல்லை. கெட்டுப்போன கழுதைக்கு துக்கம் வேறு; சதா கண்ணீர் ஓடியவண்ணமிருக்கிறது. குழந்தைகளுக்கு விவரமே தெரியாததால் அவர்கள் "ஏன் தாதா இந்தப் பட்டிக் காட்டிற்கு வந்தாய்? ஊரே நன்றாக இல்லையே...... என்னமோ போலிருக்கிறதே!" என்று நச்சரிக்கிறார்கள்.

அஸ்தமித்தால் காட்டுப்புறத்து நிசப்தமும் நாய் நரிகளின் சத்தமும் உங்களுக்குத் தெரியாததா! அதைக் கண்டு குழந்தைகள் பயப்படுகிறார்கள். அதோடு போதாக் குறைக்கு, வருஷக் கணக்காய்ப் பூட்டிக் கிடந்த வீடாகையால் அதில் இரண்டு பாம்புகள் வந்து, குழந்தைகளின் பயத்தைக் கிளறிவிட்டன. எது எப்படியானால் என்ன? இதைவிட்டு சிலகாலம்நகர்வதில்லை. பாங்கியில் இந்தப் பாபியின் பணம் 5 ஆயிரம் ரூபாய் ரொக்கமாக இருக்கிறது. பிறகு கையெழுத்து வாங்கி யனுப்புகிறேன். அதை 'வித்ட்ரா' செய்து நீங்களே வைத்திருந்து வேண்டிய போது கொடுங்கள். தாங்கள் செய்த கைம்மாறு கருதாத பேருதவிக்கு மகத்தான அபராதமே நாங்கள் செய்து உங்கள் மனத்தை வாட்டிவிட்டோம். தாங்கள் எங்கள் குற்றங்களை க்ஷமிக்கும்படிக் கோருகிறேன். அம்மாளுக்கு எனது ஆசியைக் கூறுங்கள். அம்மாளை ஒரு புத்திமதிக் கடிதம் எழுதச் சொல்லுங்கள்.

இங்ஙனம்

சபேசன்"

இதைப் படித்ததும் சாந்தாதேவி ஒரு நெடுமூச்செறிந்தாள். "உம்...எப்படி நினைத்தது எப்படி வந்து முடிந்தது! காலத்தின் போக்கையும், மாயாமோகத்தின் விபரீதத்தை

யும் யாராவது அறியமுடிகிறதா பார்த்தீர்களா? இதே மஞ்ஜுளாவை நான் சாக்ஷாத் அருந்ததி என்றும், த்யாகச் சுடர் என்றும்தான் நம்பியிருந்தேன். யானைக்கும் அடி சறுக்கும் என்கிறபடிதான் இது இருக்கிறது. விதவைகளை பகவான் படைத்து மகத்தான விஷப்பரீக்ஷைக்கு உள்ளாக்குவதைவிட விதவை என்கிற அதபாதாளமான பாழுங்கிணற்றில் அவளைத் தள்ளும்போதே அவளையுங்கூட தன்னடியில் சேர்த்துக் கொண்டுவிட்டால் எத்தனை உத்தமமாக இருக்கும்? இந்த பயங்களை எல்லாம் முன்கூட்டியே தீர்க்கதரிசிபோல்எண்ணித் தான் ஆதியில் பதியுடன் சதியும் உடன் கட்டை ஏறுவது என்கிற கட்டாயத்தை வைத்திருந்தார்கள் போலும்....இப்போது நடக்கும் அக்ரமங்களைப் பார்த்தால் மறுபடியும்அந்த சட்டம் வந்துவிட்டால்கூடத் தேவலை என்று தோன்றுகிறது

டாக்டர்:—ஏதேது! சாந்தி! உன் யோசனை வெகுவேகமாக முன்னேக்கிப் போகிறது! உடனுவது, கட்டையாவது? விரல்விட்டு எண்ணக்கூட இக்காலத்தில் யாரும் வரமாட்டார்கள். சத்யமும், தர்மமும், கற்பும், சீலமும் நிறைந்திருந்த அக்காலத்திலேயே இரண்டொருவர் உடன்கட்டை ஏற மறுத்தார்கள்; அழுதார்கள்;பலவந்தமாகப் பிடித்துத் தீயில் தள்ளினார்கள். சிலர் தப்பித்தோடிவிட்டார்கள் என்றதனால்தானே அந்த பயங்கரத்தையே நிறுத்தினார்கள்.

சாந்தீ! காலத்தின் விபரீத நாகரீகமே இத்தகைய கெடுதல்கள் உண்டாகிறதென்றுதான் எனக்குத் திட்டமாய்த் தோன்றுகிறது. இத்தகைய கொடிய பயங்கரங்கள் ஏராளமாயிருப்பதை யறியாமலா முன் காலத்தில் விதவைகளுக்குத் தனித்த கட்டு திட்டங்களும், முறைகளும் சாஸ்திரத்தின் பேராலும் மதத்தின் பேராலும் ஏற்படுத்தி அவர்களைக் காப்பாற்றி வந்தார்கள்.

விதவைகள் வெளியில் வரக்கூடாதென்ற அத்துமீறியதும் அவர்களுடைய கட்டுப்பாடுகளும் மீறத்தானே செய்யும். கன்னி விதவை என்றால் விவாகம் செய்வதற்கு ஒப்புக்கொண்டிருக்கும் காலம். தாய் விதவையையும் மணக்கும் விபரீதம் வந்துவிடப்போகிறது என்றுதான் நான் எண்ணினேன். முதலில் ரகஸியம்...பிறகு பகிரங்கம்......ஏதோவெட்கக்கேடு— என்று சலிப்புற்றார்.

சாந்:—ஐயோ பாவம்! அந்தப் பெண்ணுக்கு எப்படியிருக்கிறது? மகாலக்ஷிமிபோன்ற பாரியையை விட்டு இந்த முண்டச்சி மூதேவியை அந்தப் படுபாவி நாடுகிறானே அவன் இதயம் என்ன சூனியமா!

டாக்:—சூனியம் மட்டுமில்லை. கொலைப் பாதகத்திற்கும் அஞ்சாத கல்நெஞ்சம் அது...பாவம்! அந்தப் பெண்... இனி பிழைப்பு என்னவோ இல்லை. என்று கண்ணை மூடுவாளோ? ...என்கிறபோது டாக்டருக்கு அவசரமான அழைப்பு வந்ததால் அவர் வெளியே சென்றார்.

---

## 17

வெகு உத்ஸாகத்துடன் சங்கர் மஞ்சுளாவின் வீட்டிற்கு ஓடிவந்தான். வீதிக் கதவில் பூட்டியிருந்த பூட்டைப் பார்த்ததும் அவன் இதயக்கோட்டையின் ஆசைக் கதவின்கபாடம் டபாரென்று அறைந்து சாத்தியதுபோல் அதிர்ச்சி உண்டாகியது. "இதென்ன வேடிக்கை! கதவு பூட்டப்படுவானேன்? எங்கேனும் வெளியே சென்றிருந்தால் அந்த உராங்கொட்டான்போன்ற கிழந்தான் குச்சு நாயைப்போல் காத்துக் கிடக்குமே... இதென்ன வேடிக்கை?" என்று வியப்புற்றான்.

அக்கம்பக்கத்தில் தான் நர்ஸைத் தேடிக்கொண்டு வந்தவன்போல் பாவனைகாட்டி, "ஏன் சார்! இந்த நர்ஸ் எங்கே போயிருக்கிறார்கள்? அவசரமாக அழைத்துச்செல்லவந்தேன், கதவு பூட்டியிருக்கிறதே!" என்றான்.

பக்கத்து வீட்டுக்காரன் உதட்டை ஒருமாதிரி பிதுக்கிக் கொண்டு "அவ வீட்டையே காலி செய்துகொண்டு நேற்றிரவே எங்கோ ஊருக்குப் போய்விட்டாள். எந்த ஊரு என்ன என்பது எனக்குத் தெரியாது" என்றான்.

அதற்குமேல் அவனால் அங்கு நிற்க முடியவில்லை...... "மஞ்சுளா வேண்டுமென்று தன்னை ஏமாற்றியிருப்பாளா! அல்லது அந்தக் கிழக்கோட்டான் ஏதாவது கடிபிடி செய்து அவளை எங்கேனும் இழுத்துக்கொண்டு போயிருக்குமா!... இந்த மர்மம் ஒன்றுமே புரியவில்லையே! அவளுக்கு இதைவிட்டு இன்னொரு ஊர் இருக்கிறது என்பதை அறியாமல் மோசம் போய்விட்டோமே!'...என்ற பெரிய குழப்பத்துடன் திரும்பிச்சென்றான். புதிய மோகவெறியும் ஏமாற்ற அதிர்ச்சி

யும் ஒன்றுகூடி அவனைப் பார்ப்பதற்கே பித்தன்போலச் செய்துவிட்டன.

அவள் பழக்கமாகப் போகும் வீடுகளிலும் இதர இடங்களிலும் எத்தனையோ ப்ரயாஸைப்பட்டு விசாரித்தும் பலன் கிடைக்கவில்லை. டாக்டர் சேகர் வீட்டில் விசாரித்தால் கட்டாயம் தெரியும் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் டாக்டர் தன்னைப் பார்ப்பதும் தன்னிடம் நடந்துகொள்வதும் அவர் இந்த ரகஸியத்தை அறிந்துகொண்டுவிட்டார் என்பது நன்ருகத் தெரிந்ததால் அவரிடம் கேட்டால் உண்மை வாராது என்பது உறுதியாகத் தெரியும். அதற்கும் ஓர் யுக்தி செய்யவும் துணிந்தான்.

அதாவது—மஞ்சுளாவுக்கு நர்ஸ்வேலை செய்ததற்காகப் பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரியவில்லை; தயவு செய்து சொல்லவும் என்று ஒரு ஆளைவிட்டுக் கேட்டுவரச் செய்தான். எல்லோருக்கும் மேல் சூரப்புலியாகிய சேகரிடமா இந்த தந்திரம் பலிக்கும்? யார் பணம் கொடுப்பதாயினும் என்னிடமே கொடுக்கும்படி அவள் சொல்லியிருப்பதால் என்னிடம் சேர்க்கச்சொல்லு." என்று பதில் கூறினர்.

அதிலும் ஏமாற்றமடைந்ததால் மஞ்சுவின்மீது சிறிது கோபங்கூட உண்டாகியது. தபாலாபீஸில் மாற்று விலாசம் கொடுத்திருக்கிறதா! என்று பார்த்தான்; அதுவும் இல்லை. இந்த விசாரணைகளிலேயே இரண்டு மூன்று நாட்களாகிவிட்டன. லட்சுமியின் உடல் நிலை மிகவும் கேலமாகிக் கவலைக்கிடமாகிவிட்டதால் சங்கரும் ஒப்புக்காகவாவது லீவு வாங்கிக்கொண்டு வீட்டில் குடும்பலுடன்கூட, மனமோரிடம் சரீரம் ஓரிடமாக விருந்தான்.

அதில் ஒரு வாரத்திற்குமேல் கழிந்துவிட்டது; அப்போதும் அவன் கள்ள மனம் இருப்புக்கொள்ளாது தவித்தது. இவனுடைய ஏக்கத்தையும் முக உறக்கத்தையும் எல்லோரும் உண்மையாக மனைவியின் பொருட்டுத்தான் என்று எண்ணினார்கள். அந்த மகா உத்தமியும் அதிக காலம் கஷ்டப்பட்டும் பயனில்லாது தன் குழந்தைகளை நிராதரவாய் விட்டுவிட்டு சாச்வத நித்திரையிலாழ்ந்துவிட்டாள்.

அந்த வீடே அல்லகல்லோலப் பட்டது என்றால் மிகையாகாது. சங்கரின் பாடுதான் திண்டாட்டமாகிவிட்டது. பிணம் கிடக்கும்போதே மறுவிவாகத்தை முன்னிட்டுப்

பேச்சுக்களும், விளக்கேற்றி வாங்கும் வைபவமும் நடை பெற ஆரம்பித்துவிட்டன. சிலர் அப்போதே என் பெண் கிளிபோலிருக்கிறாள் என்றும், சிலர் மலையாட்டும் வளர்க்திருக்கிறாள் என்றும், கொடுத்துவைக்காத பாவிப்பெண் போனாள் என்று அதோடு முழுகிப்போகலாமாடாப்பா! விளக்கை வாங்கிக்கொள் என்றும் சமயத்தை நழுவவிடாது வார்த்தையை விட்டார்கள்.

காரியம் ஒருவாறு முடிந்தது. க்ரியைகள் நடந்த மறு நாள் சங்கர் ஆபீஸூக்குப் போனான். லக்ஷ்மி ஒருத்தி குறுக்கே நின்றவளும் போய்ச் சேர்ந்தாள். இச்சமயம் இவள் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டாளே என்கிற விசனம் கோபம் சகலமும் அவனைச் சூழ்ந்துகொண்டு வருத்தின.

ஆபீஸில் தன் மேஜையின்மீது இவனுக்காக வந்த கடிதங்கள் வழக்கம்போல் வைத்திருந்தன. அவைகளை எல்லாம் பார்க்கையில் இவனை ஆச்சரியம் ஆனந்தம் ஆவேசம்முதலிய உணர்ச்சிகளில் மூழ்கச் செய்யும் அமிருததாரை போன்று மஞ்சுளாவின் கடிதம் இருக்கக் கண்டு அதைப் பலமுறை படித்தும் ஆவலடங்காது பின்னும் படிக்கலானான்.

"ஆருயிர் நேசரே!

இம்மாதிரி ஒரு சம்பவம் நேருமென்று நான் கனவிலும் கருதவில்லை. விதி என்பது மிக்க வலிவுபெற்றது என்பதை என் வாழ்க்கையிலேயே நான் பலமுறை பார்த்திருக்கிறேன். நான் செய்யும் காரியம் பஞ்சமாபாதகத்திலும் கொடியது; மகா சண்டாளம் நிறைந்த மகத்தான அபராதம் என்பதை அறிந்தும் பறிகொடுத்த நெஞ்சம் எமனையும் எம வாதனையையும் பயங்கரமான தண்டனைகளின் விபரீத வெள்ளத்தையும்கூட நீந்தியடித்துக்கொண்டு உமது அன்புச் சங்கிலியில் பிணைக்கப்பட்டுள்ள என்னிதயத்தை மீட்க முடியவில்லை. அன்று நீங்கள் சென்ற உடனே தாதா என்னைப் பலமாகக் கண்டித்து கேவலம் பட்டிக்காடாகிய காட்டேரி என்கிற ஊருக்குப் பிடிவாதமாக அழைத்துவந்து சிறைவைத்துவிட்டார். இந்த நரகலோகத்தில் நான் படும் வேதனையைவிட வேறு நரகமே எனக்கு இருக்காது. அவர் ப்ரியப்படியே விட்டுக்கொடுத்துத்தான் வருவோம்

என்று பொறுமையாய் இருக்கிறேன். உமது மனைவி எப்படி இருக்கிறாள்.........தேவலையா......நீங்கள் இந்த குக்ராமத்திற்கு வரவேண்டாம் நீர் அன்று கொடுத்த ஓர் வாக்குறுதியை நான் மறக்கவில்லை. சமயம் எழுது கிறேன்; நீர் வரலாம். இக்கடிதம் எழுதிய விஷயம் யாருக்கும் சொல்லவேண்டாம்.

மஞ்சு"

இதைவிட வேறு என்னவேண்டும்! "மஞ்சு ஊருக்குப் போய் மறுநாளே இதை எழுதியிருக்கிறாள். நாம் லீவிலிருந்த தால் இத்தனை நாள் பார்க்காமலிருந்துவிட்டோம்." என்று பூரித்தான்.

---

# 18

லக்ஷ்மியின் காரியங்கள் முடிந்து ஒரு மாதமாகியது. சங்கருக்குப் பெண் கொடுக்க வரும் போட்டி வலுத்துவிட்டது. ஏன்? அவன் சகோதரி சக்குவுக்குத் தன் பெண்ணையே கொடுத்து விவாகம் செய்து விடவும் ஆசை துடித்தது. எப்படியும் கல்யாணம் செய்யப்போகிறோம், ஒரு மாதமானால் என்ன, ஒருவருஷமானால் என்ன என்கிற எண்ணமே எல்லோருக்கும் உண்டாகியதால் கல்யாணப் பேச்சுவளர வாரம்பித்தது.

பாவம்! சங்கருக்கும் இதைக்கேட்கும்போதே மிக்க உபத்திரவம் உண்டாகியது. "மனைவி இறந்து இன்னும் எரிந்த தீகூட அணையவில்லை. இதற்குள்ளாகவா இப்படித் தொந்தரவு செய்வது!" என்று ஒப்பாரி வைத்து நீலிக்கண்ணீருடன் நாட்களைக் கடத்திப் பிடிகொடுக்காதிருந்தான்.

தினம் ஆபீஸுக்கு வந்ததும் தனக்குக் கடிதமிருக்கிறதா! என்கிற ஆராய்ச்சியில் தீவிரமாக இறங்கினான். தினம் ஏமாற்றத்தைத் தவிர வேறில்லை. அப்பாழும் ஊர் எங்கிருக்கிறது என்று தெரிந்தாலும் போய்ப் பார்த்து வரலாமே! அதையும் அவள் எழுதவில்லையே என்று விசனித்து நாட்களைக் கடத்தினான்...இதுவரையில் ஏமாற்றிய கடிதம் இன்று கிடைத்தேவிட்டது. துடிதுடிக்கும் ஆவலில் படிக்கவாரம்பித்தான்.

*"ஆருயிர் நேசா! கடவுள் என்பவர் புண்யாத்மாவுக்கும் இருக்கிறார்; திருடனுக்கும் அவர் இருப்பதால் தானே அவரிடமே தன்னைக் காட்டிக்கொடுக்காமலிருக்கும்படி வேண்டுகிறான். அதேபோல் என்பக்கிலும் அவரிருப்பதாகவே நான் நினைக்கிறேன். இல்லாவிடில் இத்தகைய ஒரு அதிசயமான சம்பவத்தைக் காட்டுவாரா! சிறையிலடைப்பதுபோல் என்னை இங்கு கொண்டுவந்து வைத்த கிழவர் அந்த சுகத்தை அதிகநாள் அனுபவிக்கவில்லை. திடீரென்று பாம்பு கடித்து ஒரேமணிகாலத்தில் உலகைவிட்டு மறைந்துவிட்டார். இவ்வூரிலுள்ள இரண்டொருவரின் சகாயத்தினால் தகனக்கிரியையும் அதற்கடுத்தக்கிரியையும் முடிந்தன. என் விஷயம் ஒன்றுமே இங்கு யாருக்கும் தெரியாதாகையால் தாதாவின் உடல் நலத்திற்காக நாங்கள் இங்கு வந்திருப்பதாகத்தான் முதலிலிருந்து கதை சொல்லி வந்தோம். கதை பூர்த்தியாகிவிட்டது.

(*இச்சமயம் வாசகர்களுக்கு உண்மையில் நடந்த ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். சாருலோசனா என்கிற எமது நாவலை அனேகர் படித்திருக்கலாம். அதில் குறிப்பிட்டுள்ள அனேக சம்பவங்கள் உண்மையில் நடந்தனவென்றும் நேருக்கு நேராக நான் பார்த்ததையே கற்பனையுடன் கலந்து எழுதியிருப்பதாயும் முன்னுரையிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். அக்கதையில் குறிப்பிட்டுள்ள உண்மை-ஜெயமணி பாலிய விதவை. அவள் தனது ஆசைக்காதலனைச் சந்திப்பதற்காக அவள் அடித்ததுடிப்பும், செய்த ரகஸிய தந்திரங்களும், பிறர் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்கிற உணர்ச்சியே அற்று நடந்து கொண்டதும் கண்ணால் பார்த்திருக்கிறேன். அதைப்போல் இன்னும் சில பாலிய விதவைகள்...கணவன் கல்லுபோலிருக்கும் பெண்கள்...அதீதமான முறையில் மனத்தை நழுவவிட்டுப் பாழாகியதையும் கண்ணால் பார்த்தபிறகே இம்மாதிரி சம்பவத்தை எழுதத் துணிந்தேன். இந்த உண்மை ஆதாரம் இல்லாமல் கற்பனையிலேயே ஒரு அசம்பாவிதக் காக்ஷியை வளர்ப்பதாக வாசகர்கள் நினைக்கக் கூடாதென்பதற்காக இந்தக் குறிப்பை எழுதுகிறேன்—ஆசிரியை)

'உங்கள் மனிதர்களுக்குத் தந்திகொடு' என்று இங்கு வற்புறுத்தினார்கள். 'நான் கடிதம் போட்டிருக்கிறேன். அவர் வந்து அழைத்துப் போவார்.' என்று சொல்லி யிருக்கிறேன். டாக்டர் வீட்டிற்கு விஷயமே தெரிய வேண்டாம். உமது மனைவி இறந்த விஷயத்தையும் அகஸ்மாத்தாகக் கிடைத்த பழையபேப்பரில் சமீபத்தில் பார்த்தேன். அதற்காக என் அனுதாபம். தாங்கள் முத்துப்பேட்டை ஸ்டேஷனில் இறங்கி அரை மைல் மேற்கில் நடந்து வந்தால் இந்த குக்கிராமம் இருக்கிறது. மற்றவை நேரில்பேசலாம்... மஞ்சு"

இப்படியொரு கடிதம்வரும் என்று அவன் கனவில் கூட எதிர்பார்க்கவே இல்லை. இதைப்படித்தஉடனே ஏதோ சாம் ராஜ்யப் பட்டாபிஷேகம் செய்துவிட்டதுபோல்தோன்றியது.

கடிதத்தைப் படித்துத் துள்ளிக் குதித்தான். ஒருவாரம் லீவு கேட்டுக்கொண்டு வீட்டிற்கு வந்தான். அன்று வீட்டில் ஒரு பெரிய மனிதர் இவனுக்குப் பெண் கொடுப்பதற்கு வந்து பேசிக்கொண்டிருந்தார். அவர் பெரிய செல்வவந்தர். பெண் ணும் 22 வயதானவள், பி. ஏ. பாஸ் செய்தவள். வெகு அழ காக இருப்பாள் என்றெல்லாம் சங்கரின் பிதாவுடன் பேசிக் கொண்டிருந்தார். மகன் வந்துவிடுவான்: நேரில் கேட்டு முடித்துவிடலாமென்று முடிவு செய்து காத்திருந்தார்.

சங்கர் தடபுடல் அவசரத்துடன் வந்து "ஆபீஸ் விஷய மாகக் காம்ப் போகவேண்டும். இப்போதே புறப்பட்டாக வேண்டும். கல்யாணப் பேச்சை இப்போது எடுத்து ப்ரயோ ஜனமில்லை. நான் திரும்பிவந்ததும் சொல்லியனுப்புகிறேன். வாருங்கள்." என்று கூறிவிட்டு உடனே அன்று இரவு வண் டிக்கே கிளம்பிவிட்டான். இந்தப் புளுகுமூட்டையை எல்லோ ரும் நிஜமென்றே நம்பினார்கள். ஏனெனில் மஞ்சுளாவின் தொடர்பு அதோடு விட்டதாக இவர்களின் நினைப்பு பாவம்!...

---

## 19

இப்போது சங்கரும் மிஸஸ் சங்கரும் ஆரஞ்சுபுரத்தில் தனிக்குடித்தனம் செய்ய வாரம்பித்துவிட்டார்கள். இப் போது மஞ்சுளாவின் நெற்றியில் குங்குமமும் தலையில் புஷ்ப மும் குடியேறியதைக் கண்டு அவளுடைய குழந்தைகளே

வியந்து "ஏம்மா இப்பமட்டும் இதெல்லாம் செய்து கொண் டிருக்கிறாய்? இந்த மாமா யாரம்மா...நமக்குத் துணைக்காக வந்திருக்கிறாராம்மா?...என்று கேட்கும்போது பையனையே சீறிவிழுந்து, "போடா பித்துக்குளி! ஓங்கப்பா இத்தனை நாள் வெளியே போயிருந்தார். இப்போது வந்துவிட்டார். அவர் தாண்டா உங்கப்பா. தத்துபித்து என்று பேசாதே" என்று மிரட்டிவிடுவாள்.

சங்கர் தனக்கென்று ஒரு பேபி கார் வாங்கிக்கொண் டான். இன்ஷியூர்கம்பெனியில்தான் வேலையாகையால் அடிக் கடி வெளியே போக கார் வேண்டும் என்று வாங்கிவிட்டதால் இவன் வீட்டிற்கும் தனி வீட்டிற்கும் 10 மைல் தூரந்தான் இருப்பதால் அடிக்கடி வருவதும் போவதுமாக வாரம் பித்தான்.

மாதம் இரண்டு மூன்றுக்குமேலாகிவிட்டது. சங்கர் விஷ யத்தில் மிகவும் சந்தேகமுடைய சக்கு அவனைப் பற்றி வெகு ஜாக்ரதையாகக் கவனித்து வந்தபோது சந்தேகம் வலுத் தது. கல்யாணம் வேண்டாம் என்பதால் எங்கேனும் கெட் டலையப்போகிறானே என்று எண்ணினாளே யன்றி இதே மஞ் சுளாவே எமன்போல் வந்திருப்பதாக அவள் நினைக்கவே இல்லை. மஞ்சுளா ஒழிந்தவள் ஒழிந்தவள்தான் என்று எண்ணி னார்கள். இவனை எத்தனை கெஞ்சியும் கல்யாணத்திற்கு இசை யாமல் பிடிவாதமே செய்து வந்ததானது கிழத் தாய்தந்தை யருக்கு மிக்க வேதனையை உண்டாக்கியது.

ஒருதினம் திவான்பகதூர் பீச்சில் உலாவிவிட்டு மணல் மீது உட்கார்ந்திருக்கையில் அவருடைய கிருஸ்தவ நண்பர் ஒருவர் வந்து துணையாய்ப் பேச உட்கார்ந்தார். "மிக்க சந் தோஷம் சார்! ஏதோ தவறியதை எண்ணி விசனிக்காமல் உடனேமறுமணம் செய்ததை... அதிலும்தற்கால நாகரீகப்படி ரிஜிஸ்தர் மணம் செய்ததுபற்றி சந்தோஷமும் வியப்பும்கூட அடைந்தேன்...என்று ஏதோ இடி இடிப்பதுபோல் இவர் பேசுவதைக் கேட்டு பகதூருக்குத் தூக்கிப்போட்டது... இடைமறுத்து "சார்! தாங்கள் வேறு யாரிடமோ பேசுவ தாக நினைக்கிறேன். என்னிடமா பேசுகிறீர்கள்?" என்று குறுக்கே பாய்ந்தார்.

கிருஸ்தவ நண்பர்:—திவான்பகதூர்வாள்! தங்களிடமே, தங்கள் குமாரரின் விவாக விஷயத்தைப்பற்றித்தான் பேசு

கிறேன். ஏன்! நீங்கள் சொல்வதைப் பார்த்தால் விசித்திரமாக இருக்கிறதே. ரிஜிஸ்தர்மணம் செய்துகொண்டது உங்களுக்குத் தெரியாதா?...

பகதூர்:—என்ன! ரிஜிஸ்தரா...என்ன சார் இது!

நண்பர்:—ஆடக்ரகசாரமே! உங்களுக்குத் தெரியாதா ...உங்கள் மகன் சங்கர் ஒரு விதவையை ரிஜிஸ்தர் விவாகம் செய்துகொண்டு தனிக் குடித்தனம்கூடச் செய்கிறாரே. நான் ரிஜிஸ்தர் ஜாபிதாவில் பார்த்த பிறகுதான் ஒருவேளை கால வெள்ளம் உமது பழைய கட்டுப்பெட்டி ஆசாரத்தை மாற்றி தற்காலத்திற்கேற்ப நடக்கச்செய்ததோ என்று வியந்தேன்.

கிழவரை இவ்வார்த்தைகள் அப்படியே ஒரு குலுக்குக் குலுக்கி தடாரென்று கீழே போட்டதுபோல் அதிர்ச்சியடையச்செய்தன. "சார்! நீங்களே இதுபோன்ற விஷயங்களில் விளையாடக்கூடாது. உண்மையைச் சொல்லவேண்டும். சங்கரா......ரிஜிஸ்தர் செய்துகொண்டானு.........அதிலும் விதவையையா...எனக்கு நிரூபித்துக் காட்டுவீர்களா!" என்று படபடத்துக் கேட்டார்.

நண்பர்:—ஸார்! நாம் இன்றைய நேற்றய நண்பர்களல்ல: ஆதிமுதல் கலாசாலையிலிருந்து பழகிவரும் சிநேகிதர்கள் என்கிற ஆழமான மதிப்பினுல்தான் நான் வியப்படைந்து கேட்டேன். ஒரு காலத்தில் விதவா விவாகத்திற்குத் தாங்கள் எதிர்ப்புக் கட்சியை உண்டாக்கி பலமான வாதங்கள் செய்ய வில்லையா! ஏன்? சாரதா சட்டத்தையே தாங்கள் ஒப்பமாட்டேன் என்று கூறவில்லையா? அத்தகைய உங்கள் மகன் விதவையை...அதிலும் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிய விதவையை...தின்று வீசி எறிந்த எச்சில் இலையில் மீண்டும் சாப்பிடுவதுபோன்ற உதவாக்கரை விதவையை...எப்படி ரிஜிஸ்தர் செய்துகொள்ள நீங்கள் சம்மதித்தீர்கள் என்றுதான் உண்மையாக நான் ஆச்சரியப்பட்டு, அது தாங்காமல் உங்கள் வீட்டிற்கே வந்து கேட்கவேண்டும் என்று எண்ணினேன். தற்செயலாக இங்கு வந்து பார்த்ததால் கேட்டு விட்டேன் சார்! கோபிக்கக்கூடாது...

பகதூர்:—சார்! இருக்கும் உண்மையைக் கூறினுல் கோபம் வேறு வரவேண்டுமா! அது கிடக்கட்டும். எனக்கந்த ரிஜிஸ்தரைக் காட்டுவீர்களா!—என்ருர். நண்பர் உடனே "ஆகா! ரிஜிஸ்தர் ஆபீஸ் இன்னேரத்திற்கு மூடியிருக்கும்.

ரிஜிஸ்தர் செய்தவர் எனக்கு உறவினர்தான். ஏன்? ஆரோக்ய ஸ்வாமியை உங்களுக்கே தெரியும் என்று நினைக்கிறேன். அவர் தான் செய்தாராம். நான் நேற்றுதான் என் பெண் கல்யாண விஷயமாய் அவரிடம் பேசும்போது அவர் ரிஜிஸ்தரையே எனக்குக் காட்டினர்...அவர் வீட்டிற்குப் போகலாம் வாருங்கள்'' என்றார்.

பகதூருக்கு உட்காரவே முடியாது ஆத்திரமும் சங்கடமும் செய்கின்றன. உடனே அந்த நண்பருடன் கிளம்பிச் சென்றார். ஆரோக்யஸ்வாமி பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தார். இவர்களைப் பார்த்ததும் வெகு மரியாதையுடன் வரவேற்று உபசரித்தார்.

நண்பர்:—ஆரோக்யம்! நேற்று நீ எனக்கொரு ரிஜிஸ்தர் விவாகக் குறிப்பைக் காட்டினாயே! அதைச்செய்து கொண்டவரின் தகப்பனார் இவர்தான். அது உண்மையா என்று அறிய வந்திருக்கிறார்...

ஆரோ:—முக்காலும் உண்மைதான் சார்! அது நடந்து மூன்று மாதங்களாகிறதே. இதென்ன வேடிக்கை! உங்களுக்குத் தெரியாமலா அது நடந்திருக்கிறது...அவர் ரிஜிஸ்தர் செய்துகொண்ட பெண் உங்கள் வீட்டிலே நர்ஸாக மாதக்கணக்கிலிருந்ததால் நீங்களெல்லோரும் சம்மதித்து நடக்கும் விவாகம் என்றல்லவா எண்ணினேன். அடாடா! இப்படியா நடந்திருக்கிறது...

அவ்வளவுதான் பகதூருக்கு அதற்குமேல் வேண்டிய விவரம் ஒன்றுமில்லை. ஆத்திரமும் படபடப்பும் எல்லை கடந்து விடும்போல் தோன்றியதால்...நான் வருகிறேன்......என்று கூறிக்கொண்டே ஓரே முடுக்காகச் சென்றார்.

## 20

"ஆமாம்! என்னிஷ்டம்! இவைகளில் நீங்கள் தலையிடுவதில் ப்ரயோஜனமில்லை. இனி கல்யாணம்! கல்யாணம்! என்று என் ப்ராணனை வாங்கவேண்டாம். 'நீ எங்கே போகிறாய் எங்கே வருகிறாய்?' என்ற கேள்வியும் என்னைக் கேட்க வேண்டியதில்லை. வீட்டில் கால்வைக்க ஆசையில்லை. ஓரே உபத்திரவந்தானு!'' என்று சங்கர் ஓரே முறைப்பாயும்

அலக்ஷியமாயும் தன் தாயாரையும் சகோதரியையும் தூக்கி எறிந்துப் பேசினான்.

உள்ளக்கொதிப்புடன் வீட்டிற்கு வரும் பகதூரின் காதில் இவ்வார்த்தைகள் விழுந்ததும் இன்னும் புண்ணில் கோலிட்டுக் கிளறுவது போலும் எரியும் அடுப்பில் எண்ணெயை ஊற்றியதுபோலும் ஆத்திரம் பற்றிக்கொண்டது. இன்னது பேசுகிறோம் என்பதைக்கூட மறந்து...“சீச்சீ... ப்ரஷ்டா! குலநாசகா! சண்டாளா! வெட்கங்கெட்ட கம்மனாட்டி! எச்சில் இலையை உசிதப் பண்டம் என்றும் அழுகப் பண்டத்தை ஆத்மார்த்தகப் பொருள் என்றும் எண்ணி, கண்ணிருந்தும் குருடனாகி நாற்ற நரகலில் விழுந்து மானத்தையும் குல கண்ணியத்தையும் பெற்றோர் உற்றோர் என்கிற மதிப்பையும் ஒழித்துக்கொண்ட பாதகா! என் வீட்டுப் படி ஏறுவதற்கு உனக்குப் லவிஷமும் யோக்யதையும் இருக்கிறதாடா! குடிகேடா போ போ...போய்விடு. இனி என் வீட்டு வாசல்படி ஏறாதே! எங்கள் முகத்தைப் பார்க்காதே, போடா பேமானி!...

சண்பகம்! இனி இந்த த்ரோகியை உன் பிள்ளையாய் எண்ணவேண்டாம். உனக்குப் பிள்ளையே பிறக்கவில்லை, சக்கு ஒருத்திதான் என்று எண்ணிக்கொள்ளு. வெட்கக்கேட்டைச் சொல்வதற்கும் மானம்போகிறது. அந்த குடிகெடுக்கும் நாய்... அறுத்த முண்டச்சி வீட்டில் அடிவைத்த போதே வீட்டில் சாக்ஷாத் ஸ்ரீ மகா லக்ஷ்மியைப் போலிருந்தவளை ஒழித்து நம் குடும்பத்திற்கே உலை வைத்துவிட்டாள். அந்த அழுகப் பிண்டத்தை இந்த மூளைகெட்ட முண்டம் ரிஜிஸ்தர் விவாகம் செய்துகொண்டு வெட்கமின்றி அலைகிறானும்...மானம் போய்விட்டது. என்னுடைய வாழ்க்கையில் நான் கொண்டிருந்த லக்ஷியங்கள் முற்றும் இப்பாவியின் செயலால் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போய்விட்டன. எங்காவது சொல்லாமல் ஓடிவிடலாமா! அல்லது ப்ராணனையே விட்டுவிடலாமா என்று இதயம் துடிக்கிறது” என்று அவர் கட்டுக்கடங்காது காட்டாற்று வெள்ளம்போல் பொங்கி எழும் ஆவேசத்துடன் தாண்டவமாடுகிறார்.

இந்தப் பேரிடி போன்ற வார்த்தைகளைக் கேட்டகிழவி ... “என்ன!...அந்தக் கம்மனாட்டி முண்டையையா கல்யாணம் பண்ணிண்டான்...ஐயயோ! குடிமூழுகிப்போச்சே......அந்தப்

பாவிமுண்டே என் குடும்பத்திற்குக் கோடாலிக்காம்பாய் எங்கிருந்து வந்தாளோ தெரியவில்லையே!......இந்த முட்டாளுக்குப் பெண்ணு அகப்படாது போயிற்று! போயும் ஒரு முண்டச்சியையா......என்று அந்தம்மாள் வேறு ப்ரலாபிக்கவாரம்பித்துவிட்டாள்.

சக்குவுக்கும் பெரும் அதிர்ச்சியாகிவிட்டது. ஆனால் இத்தனைக்கும் சங்கர் அங்கு நின்றால்தானே! தகப்பனாரின் கூக்குரல் அடங்குவதற்குள்ளேயே அவனைக் காணவில்லை. பதில் பேச்சும் சண்டையும் போட ஆள் இருந்தால்தானே.

லக்ஷ்மி இறந்த அன்றுகூட வீடு இத்தனை அலங்கோலமாக இல்லை. இன்று வீட்டில் அடிக்கும் புசல்காற்றை அளவிட்டுக்கூற முடியாது. ஆத்திரத்தோடு ஆத்திரமாய் கிழவர் அதே இரவில் தன் வக்கீலை வரவழைத்து ஒரு வில் எழுதிவிடத் தீர்மானித்தார். ஏனெனில் சொத்து பூராவும் தான் சுயார்ஜிதமாகச் சம்பாதித்தது. ஆதியில் காலணா ஆஸ்தி கிடையாது.

அவர் மனைவி சண்பகத்திற்கும் ஸ்த்ரீதனமாக வந்த சொத்து வேறு அலாதியாக இருந்ததால் இருவரும் மனம் போனவாறு செலவிட உரிமை உண்டு. தன்னை விரோதித்துக்கொண்டு, தன் குலத்திற்கும் பெருமைக்கும் லக்ஷியத்திற்கும் அழியாத நாசத்தைத் தேடிவைத்த சத்ருவாகிய சங்கருக்கு தன் சொத்தில் காலணாகூட கொடுக்கமுடியாது. அவ்வளவு சொத்தும் அவன் குழந்தைகளுக்குத் தான் எழுதிவைத்து அந்த ஊதாரிப் பயலின் வாயில் மண்ணைப் போடுகிறேன். என் வயிறு எரிகிறது. என்மானம்போகிறது. இனி நான் எப்படி பிறர் முகத்தில் விழிப்பது! என்று கிழவர் கர்ஜனை செய்துத் துடிக்கிறார்.

குலத்திற்கெல்லாம் ஓரே மகனாக இருந்தும் இப்படியா புத்தி கெட்டுப் போகவேண்டும்?. அந்தபிள்ளையும்எத்தனையோ நாட்கள் கழித்துத் தவமிருந்து பிறந்தவனாகையால் வயது முதிர்ந்த காலத்தில் சந்தோஷத்தை அடையாமல் மகனால் இப்படியா அவமானத்தையும் துன்பத்தையும் அடையவேண்டும் என்று சண்பகம் அதே ஏக்கத்தில் அப்படியே இடிந்து போனாள். தன் நாட்டுப்பெண்ணின் மறைவே ஒரு மின்சாரம் தாக்கியதுபோல் கிழவியை வாட்டியது. கூட இந்த அதிர்ச்சி

யும் சேர்ந்து அவனை முற்றிலும் இடிப்புடைந்ததுபோலாக்கி விட்டது.

அன்றிரவு முற்றும் கிழவர் தூங்கவே இல்லை. வக்கீலிடம் சட்டங்களை அலசிப் பேசிப் பேசி உயில்எழுதும் மும்முரத்தில் கழிந்தது. மறுநாள் வழக்கமாக வருவதுபோல் சங்கர் வந்தால் தன் தாயுள்ளம் கேளாமல் அவனிடம் முறையிடலாம் என்று எண்ணிய சண்பகத்திற்கு முழு ஏமாற்றமாகிவிட்டது. நாட்கள் ஒன்றிரண்டாகி ஒரு வாரமாகிவிட்டது; சங்கர் வீட்டுப்பக்கமே வரவில்லை.

அந்தப்ரஷ்டன் வாராததற்குத் தகப்பனார் சந்தோஷமே அடைந்தார். ஆனால், அந்த தாயுள்ளத்தின் பரிசுத்த உணர்ச்சி ஜ்வாலையே ஒரு தனிச்சிறப்புடன் கூடியதல்லவா? ... அதிலும் சண்பகத்திற்கு அவன் ஒரே மகன்; எத்தனையோ செல்வமாக வளர்த்த அருமை அவளுக்குத் தெரியும். அவனால் அவள் அடையப்போகும் ஆனந்தமும் எதிர்பார்த்த மனக்கோட்டையின் உச்சமும் அவளுக்குத் தெரியும். ஒருவினாடி அவனைப் பார்க்கவில்லை என்றால் கூட அவள் இதயம் துடிக்கும். ஆபீஸிலிருந்து சற்று தாமதித்து வந்தால்கூட அவள் மனது தத்தளிக்கும். அத்தகைய செல்வமகனைப் பார்க்காத ஒவ்வொரு நிமிடமும் அவள் உயிர் எமனிடம் வாதாடுவதுபோன்ற வேதனையையே அளித்தது.

லக்ஷ்மி இறந்தபோது உபசாரம் கேட்கவந்த கூட்டத்தைவிட இப்போது 'உன் பிள்ளை இப்படியாமே' ...என்று கிழவரையும் கிழவியையும் உபசாரம் கேட்பதுபோல் கேட்க வரும் உபத்திரவத்தை அவர்களால் சகிக்கவேமுடியாதுபோய்விட்டதால் ஊரைவிட்டே சிலகாலம் எங்கேனும் வெளியே இருக்கலாம் என்றுகூடத் தோன்றியது.

---

## 21

"சாந்தி! நீ சொல்லிய யோசனையின்படியே அந்த க்ராமத்திலுள்ள முனிசிப்புக்குக் கடிதமெழுதினேன். இதோ பதில் வந்திருக்கிறது. இப்படியொரு அநியாயம் நடக்குமென்று நான் கனவில்கூடஎதிர்பார்க்கவே இல்லை." என்று கூறியவாறு கடிதத்தைக் கொடுத்தார். சாந்தா அதைப் படித்தாள்.

"அன்புள்ள ஐயா! சலாம்...

நீங்க கேட்ட அதே சபேசய்யர் திடீரென்றுபாம்பு கடித்து இறந்துபோய் கிட்டதட்ட ஆறுமாதமாகிறது. அவர்களின் சொந்தக்காரர் வந்து அவர்களை அழைத்துக் கொண்டுபோய்விட்டார்கள். அவருக்கிருந்த நிலம் புலம் எல்லாவற்றையும் விற்றுவிட்டார்கள். அவர்களைப்பற்றி வேறு ஒன்றுமே தெரியாது.

K. M. ஆலிசாயபு"

சாந்தாதேவிக்கு இக்கடிதம் முற்றிலும் வியப்புண்டாக்கி விட்டது. "இதென்ன, கண்கட்டு வித்தையைப்போலிருக்கிறதே...அவர்கள் ஊரைவிட்டுப் போய் இதற்குள் ஆறுமாதத்திற்குமேலாகவா ஆய்விட்டது !...சொந்தக்காரர்களாவது... சுண்டைக்காயாவது...அந்த மோகவெறிபிடித்த மூதேவிஎங்காவது ஓடிப்போயிருப்பாளோ!...பாம்பு கடித்து கிழவர்இறந்தார் என்கிற விஷயம உண்மையாக இருக்குமா! என்ன ஆச்சரியம்! கிழவரை ஒருவேளை கொலைகூடச் செய்திருந்தாலும் இருப்பாள் என்றும் தோன்றுகிறது...ஆமாம் பகதூர் வீட்டில் விசாரித்தால் தெரியுமா!"...என்றாள்.

டாக்டர்:—பகதூர் வீட்டிற்கு நான் போவதில்லை. அவருடையமருமகளின் நோய் குணமாகாது என்று நான் முதலில் பார்த்தபோதே அவர்களிடமே சொல்லிவிட்டுத்தான் வைத்தியம் செய்தேன். அப்படி யிருந்தும் இன்னும் ப்ரபல டாக்டரை நான் அழைத்துக்காட்டாமல் வ்யாதி முற்றிவிட்டதாக அவர்கள் வீட்டில் ப்ரஸ்தாபம் பிறந்ததால் எனக்கு மனவருத்தம் உண்டாகிவிட்டதால் நான் அன்று முதலே போகவில்லை. அந்த பெண் இறந்ததற்குக்கூட நான் துக்கம் விசாரிக்கப் போகப் பிடிக்கவில்லை. 'நான் மருந்து கொடுப்பதை நிறுத்தி ஒரு மாதத்திற்குமேல் வேறு டாக்டர் மருந்து கொடுத்தும் உயிரைப் பிடித்து வைத்துக்கொள்ள முடியவில்லையே பாவம்! அப்படியும் போய்விட்டாளே' என்று கேட்கவேண்டுமென்று தான் ஆசை. ஆனால் அது கண்ணியத்திற்குத் தகுந்ததல்ல என்று பேசாதிருந்துவிட்டேன். அதோடு அவர்களொரு பேட்டையிலிருப்பதாலும் நாம் ஒரு ஒதுக்குப்புறத்திலிருப்பதாலும் தகவல் ஒன்றுமே தெரியவில்லை.

காலைக்கு ஒரு டீபார்ட்டியிருக்கிறது. அதுக்குப்போனால் ஏதாவது தகவல்கள்கிடைக்கலாம். அந்தச் சனியனின் பணம் நம்மிடம் இருக்கிறதே இதை அவளிடம் தொலைத்துவிட்டால் நமக்கு பாரம் குறையும். எப்போ அவள் கெட்டுப்போனவளாயாகிவிட்டாளோ, அப்போதே புத்தி சகல அம்சத்திலும் கெட்டுப்போயிருக்கும். பணத்தை நாம் எடுத்துக்கொண்டதாக எண்ணி இருந்தால் என்ன செய்வது? அதற்காக நான் ஒரு யோசனை செய்திருக்கிறேன்.

பத்திரிகையில் பகிரங்கமாக விளம்பரப் படுத்திவிட்டால் விஷயம் தானாகவே வெட்டவெளிச்சமாகிவிடும். நம் கடமையும் முடிந்துவிடும் என்று தோன்றுகிறது. நீ என்ன சொல்கிறாய்?—என்றார். பர்த்தாவுக்கேற்ற பத்தினியாதலால் அதற்கு மாறுதல் பேச்சுக்கூட பிறக்குமா! அப்படியே செய்து அந்த பணத்தை ஒழித்துவிடுங்கள். பணமென்றால் பிணமும் வாய் திறக்குமென்பார்களே! தனது ஆடம்பரச் செலவுக்குப்பணம் வேண்டியது அவச்யந்தானே! அவளே வந்து மானங்கெட்டுப் போய்ப் பெற்றுக்கொண்டாலும் கொள்வாள்'' என்றாள்.

டாக்டரும் சாந்தாதேவியும் ஒரு முக்ய காரியமாகக் காரில் போகும்போது எதிரில் பள்ளிக்கூடப் பசங்களை வாத்தியார்கள் ஏதோ கண்காக்ஷிச்சாலையைக் காட்டுவதற்காக அணிவகுத்து அழைத்துக்கொண்டு போகும் கூட்டமாக வந்ததால் டாக்டர் காரை ஒதுக்கி நிறுத்தி அவர்களுக்கு வழி விட்டார்.

''செந்தமிழ் நாடென்னும் போதினிலே'' என்கிற பாரதியாரின்—அமரகவியின்—பாடலைப் பாடிக்கொண்டே குழந்தைகள் சென்றார்கள். குழந்தைகளின் தனித்த உத்ஸாகமும் ஆனந்தமும் அவர்கள் செல்லும் அழகும் பார்த்துக்கொண்டே இருந்த சாந்தாதேவி அந்தக் குழந்தைகளில் இரண்டு குழந்தைகளின் முகத்தைப் பார்த்ததும், ப்ரமிப்பும் ஆச்சரியமும் அடைந்து, ''டாக்டர்! அதோ போகும் இரு குழந்தைகளும் மஞ்சுளாவின் குழந்தைகள்போலில்லையா?...இருங்கள். இருங்கள்...ஆமாம். சந்தேகமில்லாமல் அவர்களேதான்...''ராஜு ...ராஜு'' என்று அந்தப் பையனைக் கூப்பிட்டார்கள்.

அவன் திரும்பிப் பார்த்ததும் ஒரு துள்ளு துள்ளியவாறு ...'ஓ! டாக்டர் மாமியார்!...என்று காரின் அருகில் வந்து நின்றான். ஆனால் முன்பிருந்த வளர்ச்சியும் வசீகரமும் காணப்

படவில்லை. ஏதோ சாதாரணமான நிலைமையில் இளைத்துக் காணப்பட்ட குழந்தையைக் கண்ட சாந்தாதேவி..."சவுக்ய மாப்பா! எப்போது நீங்கள் ஊரிலிருந்து வந்தீர்கள்...உங்கம்மா எங்கே...தாதா எங்கே?"...என்று அடுக்கடுக்காய்க் கேட்டாள்.

பையன்:—ஐயயோ! ஒங்களுக்கு சமாச்சாரமே தெரியாதா! எங்க தாதாதான் பாம்பு கடிச்சு செத்துப்போயிட்டார். முன்னே எங்கேயோபோயிருந்த எங்க அப்பாவாம் அவர்; அவர் வந்து அப்பவே எங்களை அழைச்சிண்டுவந்துட்டார். எங்கம்மா இப்போ முன்மாதிரி இல்லாமே ஒங்கமாதிரி அலங்காரமாயிருக்கா. எங்கப்பா கார் வெச்சிண்டிருக்கார். எங்கம்மா நர்ஸ் வேலைக்கே போறதில்லே...நாங்க சந்திப் பேட்டையிலே 20 நம்பர் வீட்டிலே தனியாயிருக்கோம். எங்க பள்ளிக்கூடத்தில் எக்ஸ்கர்ஷன் போரா. நானும் வந்தேன். எங்க வாத்தியார் கோவிச்சுக்குவார்; நான் போறேன்... என்று ஓட எத்தனித்தான்.

டாக்டர் அவனைப் பிடித்து நிறுத்தி, "இருடா...ஒங்கப்பாவின் பெயரென்ன?" என்றார்.

பையன்:—மிஸ்டர் சங்கர்...இப்போ எங்கம்மாபெயர் கூட மிஸஸ் சங்கர்தான். மஞ்சு, கிஞ்சு ஒன்னுமில்லை...நீங்க எங்காத்துக்கு வாங்க மாமா...என்று கூறிக்கொண்டே ஓடிவிட்டான்.

இப்போது தம்பதிகளுக்கு விஷயம் தானே வெட்ட வெளிச்சமாக ஆய்விட்டதால் "இனி பணத்தைப்பற்றிய விஷயத்தைப் பத்திரிகையில் போடுவது அவசியமில்லை. நேரிலேயே கூட அனுப்பிவிடலாம். என்ன சொல்கிறாய்?" என்றார்.

சாந்:—என்னைக் கேட்டால் இந்த பணத்தை இன்னும் கொஞ்சநாட்களுக்குஅவளிடம்கொடுக்காதிருப்பதுதான்நல்லதென்று தோன்றுகிறது. ஆசை அறுபதுநாள் மோகம் முப்பது நாள் என்கிற பழமொழிப்படிக்கு இந்த வெறி சற்று அடங்கிய பிறகு அவள்பணத்திற்காகவாவது நம்மிடம் பல்லிளிக்க வருவாள். அப்போது கொடுத்தால் போகிறது. அதற்கென்று கெடுத்த தடியன் காப்பாற்றட்டுமே...என்றாள். இதுவும் உத்தமமாகத் தோன்றியதால் டாக்டர் அவ்வார்த்தையை அதோடு நிறுத்தினார்.எனினும் கிழவரின்துர் மரணமும்இந்த துஷ்டையின் செய்கையும் அவர்மனத்தைப்பாதிக்காமலில்லை.

எக்ஸ்கர்ஷனிலிருந்து வந்ததும் ராஜு, தான் டாக்டர்-தம்பதிகளைப் பார்த்த விவரத்தைக் கூறும்போது அவள் நெஞ்சு அவளையறியாமல் டபக் டபக்கென்று அடித்துக் கொண்டது. குழந்தையினிடம் அதைப்பற்றி அதிகமாகப் பேசவும் இஷ்டப்படவில்லை. அந்த வார்த்தையை மாற்றி விடவே அவள்உள்ளம் விரும்பியதால் எக்ஸ்கர்ஷனைப்பற்றிப் பேச்சைத் திருப்பிக் குழந்தையின் கவனத்தை மாற்றினாள்.

தன்னுடைய வாழ்க்கையின் விநோதங்களை எண்ணும் போதுமட்டும் சில சமயம் அவளையறியாது தூக்கிப்போடும். தான் உண்மையில் சுமங்கலியா! மஞ்சள் குங்குமம் புஷ்பம், சந்தனம் இவற்றிற்குத் தான் அருகதையுண்டா! ஐயோ! இதைத் தொடுவதற்காவது உரிமை உண்டா! என்கிற எண்ணம் பழுக்கக் காய்ச்சிய ஈட்டியை இதயத்தில் பாய்ச்சுவது போல் வேதனையுண்டாக்கும்...சற்றுநேரம் ஏதோ பயித்தியம் பிடித்தவள்போல் வெறிக்க வெறிக்கத் தன்னையே பார்ப்பாள்.

அடுத்தக்ஷணமே மோகவெறியாகிய புசல் காற்றில் மேல் எழுந்த சகல உணர்ச்சிகளும் அடித்துக்கொண்டு போய்விடும். தங்களுக்கு மகத்தான சொர்க்கப் பதவி கிடைத்துவிட்டதாக எண்ணிய நினைப்பில் இருவரும் தம்தம் ஆப்தர்களை உதறித் தள்ளிவிட்டு முரட்டுத்தனமாக வாழ்க்கை நடத்தும்போதும் இருவரையும் அறியாமல் உள்ளத்தில் ஏதோ வேதனையும் கூறத்திறமற்ற சங்கடமும் செய்து நீண்ட பெருமூச்சு தானே கிளம்பிவிடும்.

தனது தாய்தந்தையர்களை அறவே துறந்துவிட்டு வந்த சங்கரனுக்கு உண்மையில் மன நிம்மதியோ, சாந்தியோ இல்லை என்று நிச்சயமாகக் கூறலாம். அவனுக்கு வேண்டிய வர்கள்—அவன் மனைவி இறந்ததைப்பற்றி துக்கம் விசாரிக் காதவர்கள்கூட—இந்த மறுமணத்தைப்பற்றி பகிரங்கமா கவே கேட்டுவிடுவது அவனுக்கு ஒருபுறம் எரிச்சலாயும் ஒரு புறம் ஏதோ ஒருமாதிரியான துன்பத்தை உண்டாக்குவதாயும் தோன்றியது.

கேட்பவர்கள் ஏதோ உளறிவிட்டுப் போகிறார்களா! "ஏம்பா! போயும் போயும் ஒரு கம்மனாட்டிதானா உனக்குக் கிடைத்தாள்...அதிலும் இரண்டு குட்டிகள்போட்ட எருமை மாடுதானா உனக்குப் பிடித்தது? ஒருவன் தின்று வாந்தி

எடுத்த பண்டத்தையா நீ புசிக்கவேண்டும்? பாவம்! உலகமறியாத கன்னி விதவைகள்...கணவனை சரியாகக் கூடப் பாராத பரிதாபகரமான பாலிய விதவைகள்......எத்தனை பேர்கள் இல்லை சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று உனக்குத் தோன்றினால் அம்மாதிரி அப்பழுக்கற்ற பரிசுத்தமான ஒரு விதவையைச் செய்துகொள்ளக்கூடாதா!

இந்த நாற்றக் குப்பைக்காக, உன்னையே ப்ரபஞ்சமாக எண்ணி உயிர் வாழும் மூன்னறி தெய்வங்களை வயிறெரியச் செய்துவிட்டு கண்ணை மூடிக்கொண்டு குப்பையில் காலை வைக்கத் துணிந்தாயே இது தர்மமா!.........நன்ருக நீயே யோசித்துப் பாரு. ஒரு புருஷனிடம் வாழ்ந்து இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகியபிறகு அந்த காதகி தாயுள்ளத்தின் சிறப்பை.........மதிப்பைக்கூட மறந்து கேவலம் அல்ப ஆசைகொண்டு உன்னிடம் கற்பை இழக்கச் சம்மதித்தவளுக்கு நீதியாவது நிர்ணயமாவது இருக்கமுடியுமா! இது போல் எத்தனை கெட்டலைந்தவளோ! இன்னும் கெட்டுக் குட்டிச்சுவராகப் போகிறவளோ!

விதவா விவாகத்தை வேண்டாமென்று நான் சொல்லவில்லையப்பா! விதவையில் தாராதரமில்லையா! காலாகாலத்தில் உலகமறியாத கன்னி விதவைகளை—அதிலும் அவர்களே இஷ்டப்பட்டால்—கட்டாயம் மணக்கலாம். சில கன்னிகைகளைப்போல் வயிற்றில் வந்து இனி மறைக்கமுடியாது என்கிற திண்டாட்டத்தில் நிலைமை உண்டாகிய பிறகு மணந்துகொண்டதாக பறைசாற்றுவதும் வேண்டாம்.

இப்படி தாயான விதவையை மணம் செய்வது அடுக்கவே அடுக்காது...இது, அவள் கடவுளிடத்திலும் சமூகத்தினிடத்திலும் செய்யும் மகத்தான விபசாரமேயன்றிவேறில்லை. உங்களைப்போன்ற தூர்த்தர்களின் விஷமப் பார்வையும், விஷம் நிறைந்த பேச்சும்கூட ஒத்தாசை செய்து பாழ்படுத்துகின்றன...ஏதோ......போனது போகட்டும். உன் தகப்பனரைவிட, தாயார்தான் வெகு கேவலமாகிவிட்டாள். இதே ஏக்கத்தில் அவள் உயிர்விடுவாளேயானால் நீதான் கொலைகாரனுகிவிடுவாய். பத்திரம்......

கொலையிலும் சாமான்யக் கொலையில்லை. ஸ்த்ரீஹத்தி மட்டுமில்லை. மாத்ருஹத்தி, பெத்த தாயைக் கொலைசெய்த சண்டாளனுக்குப் புதியரௌரவாதி நரகந்தான் ச்ருஷ்டிக்க

வேண்டும். விதவையின் வேஷம் கொண்டு நீயும் கெட்டு அவனையும் கெடுத்த ஒரே பாதகத்துடன் விலகிக்கொள்ளு. ...பெத்த தாயைக் கொன்ற பயங்கர பாதகத்தைச் செய்யாதே...உன் நன்மைக்கே இதைச் சொல்கிறேன்.'' என்று சொல்வதோடு மல்லாமல், தினம் கத்தை கத்தையாய் கடிதங்களும் குவியத்தொடங்கின.

மோக வெறி பிடித்தத் தாண்டவத்தின் முன்பு இந்த நற்புத்திகளும் நியாயமும் நிறைந்த ப்ரகாசம் கண்ணில் படவே இல்லை. தன் தந்தை அன்று வாய்க்கு வந்தவாறு திட்டியதும் சொத்துக்கள் இல்லை என்று சொல்லியதும் அவனுக்கு மகத்தான குற்றமாகப்பட்டு அந்த உணர்ச்சியே தலை தூக்கி நின்றதால் மேற்குறித்தவைகள் உறைக்கவில்லை.

இதே நிலையில் ஒருவாறு வாழ்க்கைப்படகு நகர்ந்து கொண்டிருந்தது. ஆனால் மஞ்சுவிடம் உள்ள புதுமோக வெறி அவள் குழந்தைகளிடம் ஒரு திவலையும் உண்டாகவே இல்லை. குழந்தைகளின் பள்ளிக்கூடத்தில் பெற்றோர்கள் தினம் நடைபெற்றது. அதற்குச் சங்கரையும் கூட வரும்படிக்கு அழைத்தாள்.

அதற்கு சங்கர் சற்றும் யோசிக்காமல் சடக்கென்று ஓ! இந்த வ்யாபாரத்திற்கு நான் வரத்தயாராயில்லை. எமலோகத்திலிருந்து அவர்களின் அப்பன் வரட்டும்'' என்று முள்ளு குத்துவதுபோல் சொன்னதைக்கேட்டு மஞ்சுளாவுக்கு இதயம் துணுக்குற்றதோடு இவன்தான் தந்தை என்று சொல்லிக் குழந்தைகளை ஏமாற்றி வருகையில் இப்படி தேங்காய் உடைப்பதுபோல் கூறியதைக்கேட்ட குழந்தைகள் என்ன நினைப்பார்கள் என்கிற கவலையும் உண்டாகியதும் அவளையறியாது கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன.

அதையும் அடக்கிக்கொண்டு ''என் குழந்தைகள் உங்கள் குழந்தைகளல்லவா?'' என்று கேட்டாள்.

சங்:—பேஷ்! உன் குழந்தைகள் என் குழந்தைகள் எப்படியாகும்? என்குழந்தைகள் வீட்டிலிருக்கிறார்கள். உன் குழந்தைகள் உன்குழந்தைகள் தான். இனிஉனக்குப்பிறக்கப்போகும் குழந்தைகள்தான் நம் குழந்தைகள். இதென்னக் கேள்வி?

அதற்குமேல் மஞ்சுளாவால் பதில் சொல்லமுடியவில்லை. 'வெள்ளைக்காரர்களில் உன் குழந்தை என் குழந்தை, நம் குழந்தை என்று பேசிக் கொள்வார்கள். மானஹீனமற்றச்

செய்கை, என்று தன் தாதா அடிக்கடி விவாகரத்து விஷயமா
கப் பத்திரிகைகளில் வரும்போது படித்துச் சொல்லியது எப்
படியோ பளிச்சென்று நினைவுக்கு வந்து அவளதுமனக்கிளர்ச்
சியைத் தூண்டிவிட்டது.

அன்று பெற்றோர்களின் கொண்டாட்டத்திற்கு குழந்தை
களை அனுப்பாமல் நிறுத்திக்கொண்டாள். மறு நாள் குழந்
தைகள் பள்ளிக்கூடம் போய்த்திரும்பி வந்ததும் தடதட
வென்று தாயாரிடம் வந்து...'ஏம்மா...இந்த மாமா தான்
எங்கப்பா என்று நீ சொன்னாயே...இன்னிக்குப் பள்ளிக்கூடம்
போனதும் ஒரு வாத்தியார் வந்து நேத்து ஏண்டா ஒங்கப்பா
அம்மா நீங்க ஒருவரும் வல்லேன்னார்.

நாங்க பதில் சொல்றத்துக் குள்ளேயே இன்னொரு வாத்
தியார் "அவாளுக்கேது ஸார் தகப்பனார்! அவாம்மா விதவை
ன்னா...இத்தனை பெரிய பசங்கள் ரெண்டு இருக்கச்சே கல்
யாணம் பண்டிருக்கா கல்யாணம்! வெளியே வர வெக்கமா
யிருந்ததோ என்னமோ...அதான் வால்லே...அந்த திவான்பக
தூரின் பிள்ளை யன்னா அவன்! காலம் கெட்டுப்போச்சு சார்!
கெட்டுப்போச்சு. விதவா விவாகம் வந்தாலும் வந்தது இந்த
மாதிரி புள்ளே பெத்தவ...... மொட்டையடிச்சவ......எல்லா
ரும் இனுமே கல்யாணம் பண்ணிக்கவேண்டியதுதான்"...

என்று ரொம்ப ஆத்திரமா சொன்னாரம்மா...விதவை
என்றால் கணவனில்லாதவள்...கணவன் இறந்தால் அவள் வித
வையாகிவிடுகிறாள். பிறகு அவளுக்கு மங்களமில்லை, சபையில்
வர மாட்டாள்...என்றெல்லாம் என் பாடபுத்தகத்தில்இருக்கே
அது மாதிரியாம்மா நீ!" என்று தன் போக்காக மெஷின்
போல் சொன்னதைக் கேட்ட மஞ்சுவுக்குத் தலை சுற்றியது.
இது பரியந்தம் துள்ளிக் குதித்த இதயத்திற்குத் திடீரென்று
ஓட்டம் நின்றுவிட்டதுபோல் ஒரு சோர்வும் பயங்கரமும்கூடத்
திறமற்ற அதிர்ச்சியும் உண்டாயின.

அவள் பதில் சொல்வதற்குள் சங்கர் இரண்டு குழந்தை
களையும் இழுத்து இரண்டு அறைகள் விட்டுப் "போங்கள்
பீடைகளா...பாடமாம்...புத்தகமாம்...பனங்காயாம்"...என்று
பந்தடிப்பதுபோல் அடித்தான். நான்கு குண்டாங் கரணம்
போட்டுக்கொண்டுபோய் விழுந்த குழந்தைகளின் வீறிடலுக்
கும் மஞ்சுளாவின் வயிற்றில் செய்யும் சங்கடக் குமுறலுக்கும்
யார்தான் செவிகொடுக்கப் போகிறார்கள்?

கரைகாண முடியாத ஆனந்தக்கடல் தன்னை 'வா வா!' வென்று இரு கரங்களையும் ஆட்டிக் கூப்பிடுவதாக எண்ணித் தனது பெண்மையின்...கற்பின்...கடமையின்...சமூகத்தின் கட்டுத் தளையை அறுத்துக்கொண்டு குதித்த மஞ்சுளா அக் கடலில் ஏதோ ஒரு அல்ப சந்தோஷம் இருப்பதாக எண்ணிய தற்குப்பதில் பயங்கரச் சுழல்கள், திமிங்கிலங்கள் விஷ ஜந்துக் களே நிறைய இருப்பதை நாளாக ஆகத்தான் அறிந்தாள்.

ஊராரும் வம்பர்களும் தன்னைப்பற்றிக் குறைகூறும் விசாரத்தைவிடத் தன் மூத்த குழந்தை தன்னைப்பற்றி என்ன நினைக்கிறான் என்பதை நினைக்க நினைக்க அவள் எதிர்பார்த்த சந்தோஷம் எதிரில் வந்து கூத்தாடினால்கூட இந்த விசனந் தான் அதிகமாகத் தெரிந்தது. ஆனால் திருடனுக்குத் தேள் கொட்டினால் அதையவன் யாரிடம் சொல்வது? அந்த கதியே இவளுக்கும் உண்டாகியது.

விகார புத்தியின் உத்வேகமும் விட்டபாடில்லை. மெல்ல வும் மாட்டாது விழுங்கவும் மாட்டாது காலச் சக்கரம் சுழ லும் வழியில் போய்க்கொண்டிருந்தாள். தனிவாழ்க்கை யாரம்பித்து வருஷம் ஒன்றாயிற்று. இன்னும் டாக்டர் தம்பதி களின் முகத்தில் விழிக்கவே இல்லை.

ஒருதினம், ஒரு பாட்டியம்மாள் மஞ்சுவிடம் வந்து "அம்மா! சற்று மூணுவது வீட்டிற்கு வருகிறாயா! என்மகள் ப்ரஸவித்து புண்யாவாசனம் ஆகிறது. வீட்டில் ஒன்றிற்கும் உதவாக்கரையாக இரண்டு கட்டைகள் இருந்தும் உபயோக மென்ன? ஒரு மங்களம் பாடி ஹாரத்தி எடுத்துவிட்டு வருவ யாம். வாடியம்மா! குடியிருக்கிற பெண்ணும் ஊருக்குப் போயிருக்கிறாள். எதிர்வீட்டிலும் ஒரு விதவை...பக்கத்து வீட்டிலும் அதேதான். பகவான் இந்தமாதிரி கம்மண்டாட்டி கட்டைகளே வெச்சி ஆட்றத்தேவிட கொண்டுபோகலாம்... சித்தே வாடியம்மா! நெறஞ்ச சுமங்கலியாயிருக்கே"... என்றாள்.

ஐயோ பாவமே!...மஞ்சு அதற்கு என்ன பதில் சொல் வது என்று தெரியாது தத்தளிக்கிறாள். அவர்களைப்போல் தானும் ஒரு உதவாக்கரைதான் என்று சொல்லிக்கொள்வதா! அன்றி, தான் போய் தனக்குச் செய்வதற்கு அருகதையற்ற

காரியத்தைச்செய்து அந்தப் பெண்ணுக்கும் குழந்தைக்கும் ஆகாத அபசகுனத்தை உண்டாக்குவதா...என்று விழித்தாள்.

''சாஸ்திரிகள் காத்திருக்கிறூர், என்னடியம்மா தயக்கம்? இந்த நல்லகாரியம்செய்ய நீ குடுத்துவெச்சிருக்கிறயே! அந்த நாளில் ஒரு வீட்டுக்கல்யாணம் பாக்கி இல்லாதே இந்த கட்டே போய் செய்த கைதான். இப்போ வீட்டுக் குழந்தைகளுக்குப் பஞ்சமாப்போச்சு...பிள்ளைபெத்தவ மணையிலே ஒக்காந்திருக்க முடியலேடியம்மா...செத்தே வா...என்று கெஞ்சும் பாவனையில் கூறித் தன் ஆதிகாலத்தை எண்ணி அங்கலாய்த்தாள்.

இதைக் கேட்டுக்கொண்டே வந்த சங்கர்...''உம்...போய் வாயேன் மஞ்சு...என்ன யோசனை?'' என்று வாயில் சிகரேட்டை ஊதிய புகையை விட்டபடியே புகைந்துகொண்டிருந்த அவள் இதயத்தைத் தூண்டிக் கிளறினுன்.

பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்கைப்போல் மனச்சாட்சி பின்னுக்கிழுக்க, புதிய நாகரிகக் கோலமும் செய்கையும் முன்னுக்குத்தள்ள கிழவியின்பின்னேடு போனுள், கால்கள் நடுக்குகின்றன. கைகள் அவளை யறியாது உதறுகின்றன. ''நான் மறுமணம் செய்துகொண்ட போதிலும் விதவை விதவைதானே...எப்படி இனி சுமங்கலித்தனம் வரும்....இது வெறும் வேஷமல்லவா,'' என்று ஏதோ ஒன்று இதயத்திற்குள் குத்துகிறது.

இத்தனை கலக்கத்திற்கு இடையில் ஹாரத்தித் தட்டை எடுத்துக்கொண்டு பந்தலுக்கு வந்தாள். வெயர்வை குபீர் என்று பொங்கி வழிகிறது. இதயம் படக் படக்கென்று அடித்துக்கொள்கிறது. இந்த நிலைமையுடன் மணைக்கருகில் வருவதை சாஸ்திரிகள் உற்றுப் பார்த்துவிட்டு...''நில்லும்மா ...நீ...நீ...நர்ஸ் அல்லவா...சேச்சே...இதென்ன வேஷம்... இந்த கோலம் செய்துகொண்டால்மட்டும் தீர்க்க சுமங்கலியாகிவிட்டதாக எண்ணமோ... ...அட க்ரகசாரமே...பாட்டி! போயும் போயும், இத்தனைநேரம் தேடிப்பிடித்து இந்த விதவையைத்தானு அழைத்து வரணும்......சேச்சேச்சே... தட்டைக் கீழே வை...

விதவா விவாகமாம்...முண்டச்சிக் கல்யாணமாம்...நம்ம சமூகத்தையே குட்டிச்சுவராடிக்க வந்திருக்கிற கொள்ளேலே உலகமே மயங்கிவிட்டது.

ஆரத்தி எடுப்பதை நீங்களே தாராளமாக எடுக்கலாம். நீங்களானாலும் வெகுகலாம் வாழ்ந்து பின் விதவையானவர்கள். இவள் மோளையிலே வந்த மூதேவியல்லவா...இவ தாதாவுக்கும் எனக்கும் பரிச்சயம் உண்டு. அந்த காலத்திலெல்லாம் எத்தனையோ சிலமாயிருந்த இவள் அந்த திவான் பகதூர் குடும்பத்தையே நாசமாக்கி அவா பிள்ளையை மயக்கி இழுத்துக்கொண்டு ஓடிவந்துவிட்ட விபசாரியன்றோ இவள்!... தூத்தூ!...மானங்கெட்டுப்போய் பந்தலில் காலை வைத்து வருகிறாள்...பாவம். இந்த மூதேவியால் பகதூர் குடும்பம் போன போக்கை நினைத்தாலும் வருத்தமாயிருக்கிறது. எப்போது அக்கினி சாக்ஷியாய்க்கட்டின கணவன் இறந்தானோ, அன்றே எல்லாம் போயிற்று. அதிலும் இந்த சீர்திருத்தக்காரர்கள் கூச்சலிடுகிறார்களே, பால்யவிதவை-என்று அப்படியாவது பரிசுத்த கன்னிகையாயிருந்தால்கூட என்போலவாள் ஒப்பாவிடினும் அந்த சீர்திருத்தக்காரர்களாவது ஒப்பும்படியிருக்கும். இந்த தடிப்பிணம் இரண்டு பிள்ளைக்குத் தாயான பிறகு காதலாம், கல்லெடுப்பாம்...ஆசையாம்.....அவதியாம் ...ஏதோ பேத்திக்கொண்டு ஆம் ஊம் என்றால் இந்தமாதிரி மோசக் கூட்டத்திற்கு ஓத்துப் பாடும் ரிஜிஸ்தர் ஒன்றிருக்கிறதே அதைச் செய்துவிட்டாளாம். பாதகி பதித்ரோகி செத்தகணவனுக்கு தெவசம் கிடையாது; சாகாத கணவனுடன் கும்மாளமாம். இவள் பவிஷுக்கு ஹாரத்தி மங்களமா எடுக்க வந்தா!...பாட்டி!...நீங்ககூட இனிமே தலையே வளர்த்துண்டு கல்யாணம் பண்ணிக்கலாம்...எங்க ஊர்லே ஒரு விதவை சம்பிரதாயப்படி மொட்டையடித்தபிறகு புத்தி கெட்டு ஒருவனிடம் ரகஸியத்தில் நட்புகொண்டாள். அவள் இரவு காலத்தில் சகல நகைகளையும் போட்டுக்கொண்டு மொட்டைத் தலையுடன் அந்தக் கள்ளத் தடியனுக்குக் காக்ஷி கொடுப்பாளாம். ஊரிலுள்ள சூத்திரக் கூட்டங்கள் முழுதும் சிரிப்பார்கள்...காலம் கெட்டுப்போற போக்கைப் பார்த்தால் கலிமுற்றி இப்போதே ப்ரளயம் வந்துவிடும்போலத்தானிருக்கிறது...நானே ஹாரத்தியெடுக்கிறேன்''...என்று ஒரு பெரிய

கர்ஜனை செய்தபடியே, தானே ஹாரத்தித் தட்டை எடுத்து ...மங்களம்பாடிச் சுற்றினார்.

இம்மாதிரி ஒரு பெரும் பூதம் தன்மீது பாயவரும் என்பதை அடியோடு நினைக்காதிருந்த மஞ்சுளா சாஸ்திரிகள் சொல்லச் சொல்ல அப்படியே மூர்ச்சையாகிவிடுவாள்போலாகியதால் பதில் பேச்சின்றி தட்டித் தடுமாறி வீட்டிற்கு வந்துவிட்டாள். இவள் மகாலக்ஷ்மி என்றும் தீர்க்க சுமங்கலி என்றும் எண்ணியிருந்த பாட்டிகள் அப்படியே தம்பித்துப்போய் மூக்கின்மீது வைத்த விரலை எடுக்கவே மறந்தார்கள்.

அதுவரையில் வெகு ரகஸியமாயும் ஒருவருக்குமே தெரியாது என்று நினைத்திருந்த மூடமந்திரமும் அன்றுமுதல் எகிறிப்போய்விட்டது. அந்தப் பேட்டை முழுதும் தெரிந்ததோடு மஞ்சுளாவைப் பார்த்தால்...பெரிய பாட்டிமுதல்... "ஏண்டியம்மா நீ மட்டும் இப்படி இருக்கவேண்டும்? நன்றாக லக்ஷணமாய் கல்யாணம் பண்ணிண்டு நித்ய சுமங்கலியாய் இருக்கிறதுதானே!" என்று குறும்பும் குற்றமும் குண்டுணித்தனமும் பேசவாரம்பித்தார்கள்.

ஆனால் அடுத்த வாரமே இதைவிட தூரமானதும் ஒதுக்குப்புறமானதுமான இடத்திற்குக் குடி மாறிவிட்டார்கள். குடி வேண்டுமானால் மாறலாம்? குறும்பும் ஏச்சும் பேச்சும் மாறிவிடமுடியுமா?......

## 24

அன்று சங்கருக்கு உள்ள கோபத்திற்கு அளவே இல்லை. சில தினங்களாகவே சிள்ளு புள்ளு என்று சீறி விழுகிறான். காரணம்? அவனுக்கல்லவா தெரியும். ஆம். ஊம். என்றால் மஞ்சுவின் குழந்தைகளைப்போட்டுச் சாத்திவிடுகிறான். இப்போது மஞ்சு ப்ரஸவித்து மெலிந்திருக்கிறாள். இவளுடைய சோதனைகளைக் கிளறுவதற்கு உத்பத்தியான பிண்டங்கள்போல் இரட்டைக் குழந்தைகள்....இரண்டும் பெட்டைக் குட்டிகள்...பிறந்திருப்பதைக் கண்டதும் சங்கரும் சந்தோஷப்படவில்லை. மஞ்சுளாவும் சந்தோஷப்படவில்லை.

தான் ஏதோ சொர்க்க போகத்தை இரு கைகளாலும் அள்ளிக்கொள்ளப்போவதாக எண்ணி ஓடிவந்த முதல் உணர்ச்சி தேய்ந்துபோய் இப்போது அள்ளவந்த கைகளில்

செந்தணல்தான் இடைப்பதுபோன்ற உணர்ச்சி உண்டாகி விட்டது. ஆனால்...அதை யாரிடம் சொல்லிப் புலம்புவது? தானே கண்ணிருந்தும் கண்களைக் குத்திக்கொண்டு சுபோதி யாகிய பிறகு இனி யாரிடம் முட்டிக்கொண்டால்தான் தீரும்? புதிதாகப் பிறந்துள்ள இரண்டு குழந்தைகளையும் பார்க்கப் பார்க்க அவன் நினைவுகள் சிதறிப்போய் 10 வருஷங்கள் பின் னோக்கிச் சென்று அவனைக் குழப்பிவிட்டன.

தான் முதல் முதல் குழந்தையைப் பெற்றதும் தன் கண வன் அக்குழந்தையைப் பார்த்து உள்ளம் பூரித்ததும், தன் தாதா வீட்டில் தடபுடலாகப் புத்திரோத்ஸவம் கொண்டாடி நெல் விரை தானமும் கல்கண்டு வழங்கலும் செய்ததோடு தினம் தனக்கும் குழந்தைக்கும் த்ருஷ்டி கழித்ததும், மங்கள ஆரத்தி எடுத்ததும் குல உத்தாரக் குலக் கொழுந்து பிறந் தான் என்று பூரித்ததும் ஒன்றன்பின் ஒன்றாக நினைவிற்கு வந்து அடிக்கடி அவனைத் துன்பக்கேணியில்போட்டுவாட்டின.

சங்கர் குழந்தைகளை வந்து பார்த்தான்...ஆனால் அவனு டைய மாசும் மதியீனமும் நிறைந்த இதயத்திலும்,—அவன் மனைவிக்கு முதல் குழந்தை பிறந்ததையும் அப்போது தன் வீட்டில் புத்ரோத்ஸவத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடி அனேக தான தருமங்களைச் செய்துத் தானும் தன் மனைவியும் குழந்தையுடன் கம்பீரமாக மணையில் உட்கார்ந்து புண்யாவா சனம் செய்ததும் நாமகரணம் செய்ததும் வீட்டில் நூற்றுக் கணக்கான பந்துக்கள் கூடியிருந்ததும், தன் மனைவி மிக்க மெலிந்த தேகத்துடன் ஓரைக் கண்ணால் பார்த்துத் தன் பெருமையைக் கண்கள் பேச்சால் அள்ளி வீசியதும், தான் குழந்தையை ஒருவரும் இல்லாத சமயம் வாரிமுத்தமிட்டதை யும்...அதைக் கண்டு மனைவி கலகலவென்று சிரித்ததும்... அடாடா!...அவன் நினைக்கவேண்டாம் என்று எண்ணியிருந் தும் அந்தச் சண்டாள இதயத்திலும் அவனையறியாது நினைவு பெற்றெழுந்தது.

அதோடு விடவில்லையே!......பிள்ளை பிறந்த அன்றே தனக்கு வேலை உயர்ந்து சம்பளம் உயர்ந்த நற்செய்தி வந்ததும் அதற்காகத் தன் தாயார் தனக்கு த்ருஷ்டி கழித்து "சங்கர்! நீ பிறந்தபோது இதே மாதிரிதாண்டா உங்கப்பா வுக்கு வேலை உசந்ததோடு ராவ்பகதூர் பட்டமும் வந்தது" என்று கூறியதும் எப்படியோ நினைவிற்கு வந்தது. அந்த

வேகத்தில் குழந்தைகளைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையும் புயல்போல் எழுந்தது.

ஆனல்...இன்று...ஒன்றல்ல...இரண்டு பெண்குழந்தைகள் உலகமறியாத பச்சிளங் குழவிகள். கருவண்டு போன்ற தமது கண்களை மூடியும் திறந்தும் பார்த்துப் பார்த்து காக்கை நொறுசிக்கொண்டு படுத்திருக்கின்றன. அந்தப் துர்ப்பாக்யப் பிண்டங்களைப் பெற்ற தாயின்உள்ளத்திலும் மகிழ்ச்சியில்லை... ''விதவை பெத்த பெண்கள்...என்று பிற்காலம் உங்களை உலகம் தூற்றுமே...இதற்காகவா நீங்கள் ஜோடியாய்ப் பிறந்தீர்கள்?...அட துரதிருஷ்டப்பிண்டங்களே!'' என்று குமுறிக் கண்ணீர்விடுகிருள்.

தந்தையின் உள்ளத்திலாவது தெம்பும் குதூகலமும் உண்டா! அதுதான் சூனியம்...என்? அந்த பச்சைமண்ணைப் பார்க்கப் பார்க்க அவன் ஆத்திரம் அதிகரித்தது. அக்கினி சாக்ஷியாய் மணந்த மனைவிக்கு மூத்தக்குழந்தை பிறந்த அன்று வேலையும் சம்பளமும் உயர்ந்த அதே ஆபீஸில் அதே வேலையில்இன்று ஒரு மகத்தான குற்றம் இவன்மீது உண்டாகி வேலை போனலும் பாதகமில்லை, மானமேபோய்விடும்போன்று பணத்தகராறு உண்டாகி இவனை ஸஸ்பென்ட் செய்திருக்கும் கண்ராவியை அவனல் பொறுக்கமுடியுமா!

அந்த மனோவேதனையில் தன் குழந்தைகளின் முதுகு எலும்பு முறிந்தும் தோல்கள் உறிந்தும் வருவதை மஞ்சுவாலும் சகிக்க முடியவில்லை. அவளுடைய ஆத்திரம் கரை கடந்தது...''எதற்காக இப்படிக் குழந்தைகளைக் கொலை செய்ய வேண்டும்? உங்களுடைய ஆத்திரத்திற்குக் குழந்தைகள் என்ன செய்யும்........என்று கடுமையாகக் கூறியபடியே குழந்தையை எடுத்து அணைத்துக்கொண்டாள். அது அழுது அழுது மூர்ச்சை போட்டது போலாகிவிட்டது.

சங்கர்:—சீச்சீ! குழந்தையாம் குழந்தை. உன்குழந்தைகள் உனக்கு ஒசத்தியானல் அவைகளைத் தொலைத்துக் கொண்டு போய்விடு...மூதேவிக் குழந்தைகள் ஒன்றிற்கு இரண்டாகப் பிறந்தவேளை என் தலைக்கே தீம்புவரும் போலிருக்கிறது,— என்று ஆபீஸின் விஷயத்தை அப்போதுதான் மஞ்சுவிடம் சொன்னுன்.

இதைக்கேட்ட அவளுக்கு அப்படியே எரிமலையே தலையில் புரண்டதுபோலாயிற்று. பணத்தில் எப்படி இத்தகைய நிலைமை உண்டாகும்...என்று கதிகலங்கிக்கேட்டாள்.

சங்:—எப்படியா! நான் உலகத்தையே மறந்து பல விதத்திலும் கவனமிழந்து உன்னோடு உழன்றதன் பலன் என்னை நன்றாக ஏமாத்தி என் தலையிலேயே கைவைத்திருக்க வேண்டும். என் சம்பளம் வரவும் செலவும்...ஏன்? கடனும் வாங்கித்தின்று உருட்டியாகிவிட்டது.

போதாக்குறைக்குப் பொன்னியம்மன்குறையாய் ப்ரஸவத்திற்காக வேறு பெருத்த செலவாகிவிட்டது. என் தகப்பனார் தான் என்னை அடியோடு துலைத்துவிட்டார். என்னைச் சிறையிலடைத்துப் பார்க்கவும் இனி அவர் தயங்கமாட்டார். தரித்திரத்தாண்டவத்தில் உழலும் கதியில் எப்படி தப்ப முடியப்போகிறது? என் தகப்பனாரின் சொத்து முழுதும் அவருடைய சுயார்ஜிதம்; ஆகையால் அதை யாரும் அசைக்க முடியாது. இந்த சங்கடமான நிலைமையில் எங்கேனும் குளத்தில் கிணத்தில் விழுந்து சாவதைவிட வேறு கதியில்லை'' என்று அடித்துக்கொண்டான். அவனுடைய தோற்றமும் நிலைமையும் கண்ட மஞ்சுவுக்கு பூமி அப்படியே ஒரு சுற்று சுற்றுவது போன்ற அதிர்ச்சி உண்டாகி மயக்கமே போட்டுவிட்டது.

---

## 25

''சண்பகம்! வீணாகக்கதறாதே...முடியாதென்றால் முடியாதுதான். உனக்குப் பிள்ளையே பிறக்கவில்லை என்று எண்ணிக்கொள்ளு என்றுதான் தினமும் சொல்லிவருகிறேனே! அது உனக்கு உறைக்கவில்லையா? அவன்மீது வாரண்டு வரட்டும்...ஊர் சிரிக்கட்டும்...இப்போது சிரித்ததைவிட அது ஒன்றும் கெட்டுப்போய் விடவில்லை. நன்றாகச் சிறையிலடைத்துச் சித்திரவதை செய்யட்டும். நான் பணத்தைக் கட்டி மீட்கமாட்டேன், அவன் சண்டாளன் பதிதன்... பெற்ற அப்பனுக்கு அபராதி. பெற்ற தாயாருக்கு அபராதி. அக்கினி சாக்ஷியாய் மணந்த மனைவிக்கு.........தான்பெற்ற மக்களுக்கு, தன்னைப் படைத்த கடவுளுக்கு...தன்னைப்பெற்ற தாய்நாட்டிற்கு, தன் சமூகத்திற்கு......சத்தியத்திற்கு......

தர்மத்திற்கு......சகலத்திற்கும் அவன் அபராதி! அபராதி... சண்டாளம் நிறைந்த அபராதி...

அவன் உண்மையான மதிப்பும், மானமும் உள்ளவனுக விருந்தால் சத்தியத்திற்கும், கடவுளுக்கும் அஞ்சும் பரிசுத்தனுக விருந்தால்...மதியிழந்து மானமிழந்து கற்பைக் கைவிட்டுக் கசடையாகி பதித்ரோகமும் பதியின் அபராதியும், பெற்ற மக்களுக்கு மகா சத்ருவாய்...பரம அபராதியாய் வந்த விதவைக்கும் நல்ல புத்தி புகட்டி அவளுடைய சறுக்கவிருந்த காலை சறுக்காது காத்துத் தானும் தன்னைக் காத்துக்கொண்டிருக்க மாட்டாஞ?

இத்தகைய பாதகனுக்குப் பரிந்துபேசவா நான் போக வேண்டும்! முடியாது. கட்டோடு......என்னைக் கேட்காமல் நீ உன் பணத்திலிருந்தும் செல்லாக் காசுகூட கொடுக்கக் கூடாது. தெரியுமா! ஆண்டவன்மீது ஆணை.........பெண் புத்தி பலஹீனமானது அதிர்ச்சிக்குத் தாங்காதது. ஆகையால் 'கையைக் கழட்டிக்கொடுத்தேன், இன்ஞென்று கொடுத்தேன்', என்று சொல்லி ஏதாவது செய்தால் நான் சொல்லாமல் ஓடிவிடுவேன். பத்திரம்''...என்று சிம்மம் கர்ஜிப்பதுபோல் கர்ஜிக்கிருர்.

தாயாரோ, மகன் வீட்டைவிட்டு வெளியேறிய பிறகு ஓரே நோயாளிபோலாகிவிட்டாள். படுக்கையுடன் படுக்கையாக மகனைப்பற்றிய ஸ்மரணையிலேயே உயிர் ஊசலாடுகிருள். பார்க்கவேண்டும் என்கிற ஆவலால் எப்படியோ ப்ரயத்தனம் செய்ததெல்லாம் விழலுக்கிறைத்த நீராகிவிட்டது. லக்ஷ்மியின் தலைதிவசத்திற்காவது தெரியாமல் வந்து விட்டுப்போகும்படிச் சொல்லி யனுப்பிப்பார்த்தாள். அதுவும் பலிக்கவில்லை

பிள்ளையைப் பாராது தவிக்கும் தவிப்பு போதாதென்று அவன்மீது ஒரு மலை புரண்டுவிழுவிருக்கிறது என்றதைக் கேட்டு அந்தத் தாயுள்ளம் சகிக்குமா! அனலிடை மெழுகென உருகித் தவிப்பதால் கணவனின் காலைப்பிடித்துக்கொண்டும் கெஞ்சிப்பார்த்தாள். மூர்க்கமும் ஒரே வைராக்யமும் கொண்ட பகனுரிடம் இவைகள் சற்றும் சாயாதுபோகவே கிழவியின் சங்கடம் எல்லைமீறிவிட்டது.

புத்திரவாத்ஸல்யத்திற்காக, இத்தனைநாள் கணவனுக்கு அடங்கி நிழல்போலிருந்து ஆதர்சப்பெண்மணியாய் விளங்கி எடுத்த புகழை ஓழித்துக்கொண்டு பதியை த்வேஷிக்கவும்

மனம் துணியவில்லை. தன் மகனின் செல்வமும் சிறப்பும் குலைந்து அவன் கேவலமான கைதியாகப்போகிருனே! அதைத் தடுக்காமலிருக்க முடியுமா! என்பதை நினைக்க மனது கொதிக்கிறது. என்ன செய்வாள் பாவம்!

தள்ளாத வயதாகையால் மயக்கம் போட்டுப் போட்டுத் தெளிகிறது. அப்போதெல்லாம், "எனக்காக சற்று மனமிரங்கி விட்டுக்கொடுக்கக்கூடாதா! என் கெஞ்சுதலும் என் கதறலும் உங்கள் இதயத்தை உருக்கவில்லையா! இதேவிசனத்தில் என் ப்ராணன் போய்விட்டால் அது மட்டும் உங்களுக்குப் பாதக மில்லையா! என் வயிறு குமுறுகிறதே! என்று மன்ருடுகிருள்.

சக்கு:—அப்பா! அம்மாவுக்காக சற்று தயவுசெய்யக் கூடாதா!...

பகதூர்:—சக்கு! நீ பேசாமலிரும்மா... இத்தனை ஆபத்து வந்திருக்கிறதென்று அவனுக்குத் தெரிந்திருந்தும் அவனுக வந்து உதவியை நாடினுை பாரேன். தன்னைத்தான் காப் பாற்றிக்கொள்ளச் சக்தியிருப்பதனுல்தானே சும்மாயிருக்கி ருன். நீ ஏன் பயப்படுகிருய்? என்னை இது விஷயத்தில் அசைக்கவே முடியாது! என்று ஒரே போடு போட்டார்.

தாயாரின் துடிப்பைக் கண்டு மனந்தாளாத சக்கு "அம்மா! நீ சற்று தைரியமாக இரு. இந்த புகைச்சல் நன் ருகப் பற்றுவதற்குள் இதை நான் எப்படியாவது அணைத்து விடுகிறேன். உன்சொத்தையும் உன் நகையையுந்தானே அப்பா கொடுக்கக் கூடாது என்று சொன்னுர். என் உடம்பிலுள்ள நகைகள் இன்றைய தேதியில் இருபது ஆயிரம் ரூபாயிக்குப் பஞ்சமே இல்லாது போகும். அவனுக்குக் கணக்கில் வந்திருப் பதும் 20 ஆயிரம் ரூபாய்தான். நான் இப்போதே என் கணவ ருக்கு டெலிபோன் செய்து வரவழைத்து அவரிடமே இந்தக் காரியத்தைச் செய்யும்படிக்கு ஏற்பாடு செய்கிறேன். சங்கரை கைதியாக்காமலும் இவ்விஷயத்தை ஊர் அறியாமலும் நான் செய்துவிடுகிறேன்" என்று தைரியங்கூறிப் பின் டெலிபோன் அருகில் ஓடினுன். இந்த உறுதிமொழியை அன்புமொழியைக் கேட்ட தாயின் இதயத்தின் தவிப்பு ஒரு சிறிது அடங்கியது.

மயக்கந்தெளிந்து கண்ணைத்திறந்த மஞ்சுவுக்கு உலகம் ஓரே அந்தகாரமாய் இருள்சூழ்ந்திருந்ததுபோல் தோன்றியது. சங்கர் அடித்த அடியோடு அழுது அழுது தூங்கிய குழந்தை அப்படியே அயர்ந்து தூங்குகிறது. ஆனால் அதன் கேவல் மட்டும் நிற்கவே இல்லை. மாசு மருவற்றக் குழந்தைகள் நான்கும் நித்திரை போய்க்கொண்டிருந்தன.

மெல்ல எழுந்து வீடுமுற்றும் ஒரு சுற்று சுற்றி வந்தாள். சங்கரைக்காணவில்லை. இவள் இதயம் திக்கென்று அடித்துக் கொண்டது. "பணத்திற்காக ஒருவேளை எங்காவது அலை கிறாரோ......இருபதினாயிரம்......ஐயோ! நினைக்கும் போதே பயமாயிருக்கிறதே...இருபதினாயிரம் அவர் எப்படி சமாளித்துக் கொடுக்கப்போகிறார்?.........இத்தனை சங்கடத்திற்கும் காரணம் மகாபாவி நான்தானே...நானே சிறந்த உத்தமியாய் .....பதிவ்ருதையாயிருந்திருந்தால் இப்பாழும் மனத்தைத் தளரவிட்டிருப்பேனா.........நான் செய்தது சாதாரணமான குற்றமா...இல்லை...இல்லை...மன்னிக்க முடியாத குற்றம்... உலகமே மறக்கமுடியாத குற்றம்... அன்று தாதா வயிறெரிந்து "நீ கடவுளுக்கே அபராதி...பதிக்கு அபராதி, மக்களுக்கு அபராதி. சமூகத்திற்கு, தேசத்திற்கு, சத்தியத்திற்கு... அபராதி. அபராதி மட்டுமல்ல......விபசாரி...விபசாரி"... என்று கண்டித்தபோதாவது இந்தப் பாழுங்கட்டையில் உறைத்ததா...கேவலமான காமவெறியில் மனத்தைப் பறிகொடுத்து, மானம், மரியாதை, கற்பு, ஸ்த்ரீ தர்மம், தாயின் கடமை, பத்தினியின் உரிமை...சகலத்தையும் விட்டு வெறுங் கட்டையாய்......துடைப்பக் கட்டையாய் குலத்ரோகியாய் இன்று புலம்பி ஏதாவது லாபம் உண்டா! ஒன்றுக்கு நான்கு ஆத்மாக்களாக என் விதி பெருக்கி விட்டது.

இப்பாதகியின் கண்வலையில்.........மயக்கவார்த்தையில் மோகனச்சிரிப்பில் தன் கண்ணியம் பூராவும் பறிகொடுத்தது போதாமல் இந்த குற்றமும் ஒன்று அவருக்கு வர வேண்டுமா! அவர் பெற்றோர்களுக்கு இருக்கும் கோபத்தில் இனி நான் இருக்கும் வரையில் செல்லாக்காசுகூட கொடுக்க மாட்டார்கள் என்பது தெரிந்தவிஷயம்......இந்த ஆபத்தில்

என்னசெய்வேன்!'' என்று தத்தளித்தவாறு இங்குமங்கும் உலாவினுள்.

பயங்கரமான இரவு வந்து சூழ்ந்துகொண்டது. மணியோ, முறைதவருத கர்மஞானியைப்போல் உழைத்துக் கொண்டு போகிறது. நடுநிசியாயிற்று. சங்கர் வரவில்லை. மஞ்சுவுக்குப் பலவிதமான சந்தேகங்கள் உண்டாகிவிட்டன. அவன் சொல்லியபடி எங்காவது தற்கொலை செய்து கொண்டிருப்பானே என்கிற திகில் அவளை பலமாகப் பிடித்து வாட்டுகிறது.

அழுது தூங்கிய ராஜு அலறியவாறு எழுந்தான்... அம்மா...என்று கத்தினுன். "ஏண்டா! கண்ணு! இதோ வந்தேன்''...என்று ஓடிவந்தாள். "ஏம்மா பதிலே பேச மாட்டேன் என்கிருய்...அந்த மாமா இருக்கிருரா?''—என்று நடுங்கியவாறு கேட்டான்.

மஞ்:—இல்லெடா ராஜா——நான்தான் பதில் சொல் கிறேன்—அவரில்லே—ஏண்டா கண்ணு?—என்ருள். பையன் ஓவென்று வீறிட்டழுவாரம்பித்தான். என்ன! என்ன! என்று கேட்டு எத்தனை சமாதானம் செய்தும் 'ஏம்மா, பதிலே பேசல்லே''...என்று மறுபடியும் மறுபடியும் கேட்பதைக் கண்ட மஞ்சுவின் குடல் கொதித்தது..."என்ன...உனக்கு நான் சொல்வது காதுகேட்கவில்லையா!'' என்ருள்.

"என்னும்மா...ஏன் ஒரே நிசப்தம்...நீ வாயை அசக் கிறே...ஆனுல் சத்தமே கேட்கல்லேயே...இந்த காது பக்கம் ரொம்ப நோறது...காதே ஏதோமாதிரி இருக்கு...காது மேலேயும் கன்னத்துமேலேயும் படார்படார் என்று அந்த மாமா அடிச்சுட்டாரம்மா...இனிமே இந்த மாமாகிட்ட நாம் ஏன் இருக்கணும்...நீ இவரை விட்டுட்டு இன்னொரு மாமாவை கல்யாணம் பண்ணிக்கியேன்''...என்று அவன் சொல்வது ஈயத்தை நன்ருகக் காய்ச்சி அவள் இதயத்தில் ஊற்றுவதுபோல் சுறீலென்றது...

"இன்னொருவனைக் கல்யாணம் செய்துகொள்வதா... ஒருவனை செய்துகொண்டு இத்தனை வாரிக் கட்டிக்கொண்டது போதாமல் இந்த கல்யாணத்தில் கொடுத்த பலிகள் போதாமல் உன் காதுகளையும் கொடுத்தாயிற்று. இன்னும் கல்யாணமா?''...என்று கதறித் துடிக்கிருள். பையன் காது கேட்கவில்லையே என்று அழுகிருன். இரண்டு சிசுக்களுந்

வர்ரா வர்ரா என்று கத்துகின்றன. கேவலும் பொருமலும் புடை சூழ இன்னொன்று தூங்குகிறது.

இவைகளைப் பார்க்கும் சந்தோஷம் ஒன்றே போதாதா? அவள் மதியைக் கெடுத்து வாழ்க்கைப் பாதையைப் புரட்டிவிட்ட மோகத் திரை இப்போது முற்றிலும் திடீரென்று விலகிவிட்டது. தன்னைத் தானே எவ்வளவு தூரம் நொந்து கொள்ள முடியுமோ அவ்வளவு நொந்துகொண்டுத் தவிக்கிருள். கெட்டுவிட்ட பாலும் கொட்டிவிட்ட நீரும் திரும்ப முன்போலாக முடியுமா! மணி ஒன்று இரண்டு என்று 4 அடித்தது. அப்போதும் சங்கரைக் காணுததால் கட்டாயம் தற்கொலை செய்துகொண்டிருக்கவேண்டும். அல்லது...கைதியாகி இருக்கவேண்டும். இவ்விரண்டையும் விட்டு வேறு காரணமில்லை... அடாடா! வாழ்க்கையின் அத்யாயம் இதோடு முடிந்துவிட்டதா! இன்னமும் பாக்கி இருக்கிறதா! என்று நினைக்கும்போது இதயத்தைக் கிழித்துக்கொண்டு வருவது போல் ஒரு பெருமூச்சு புஸ் என்று நல்ல பாம்பு சீறுவது போல் வந்தது.

பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பதும், விபத்து வந்த காலையில் பகவானை இடைவிடாது தோத்திரம்செய்வதும் கண் கெட்டதுபோல் காரியம் கெட்டு குட்டுப்பட்டுத் தேறிய பிறகு பழய கதைகளை எண்ணிப் புலம்புவதும் உலகத்தில் சகஜமான தல்லவா! மனத்தில் ஒரு சிறிது மாற்றம் உண்டாகியபிறகு ஆதியில் தான் இருந்ததும் தன் தாதாவின் உபதேசங்களும டாக்டர் தம்பதிகளின் நீதி உரைகளும் அந்தம்மாள் தனக்கு க்ராமத்திற்கு எழுதிய கடிதத்தைத் தான் கேவலமாக வெறுத்துத் தூர எறிந்ததும் ஒன்றன்பின் ஒன்ருக நினைவுக்கு வந்து சித்திரவதை செய்கின்றன.

“இத்தகைய பயங்கரமும் விபரீதமும் கோரமலிருக்கும் பொருட்டுத்தான் விதவைகளுக்குத் தனித்த முறைகளைப் பெரியோர் ஏற்படுத்தியிருந்தார்கள் போலும். அக்கட்டுத் தளைகளை முறியடித்து மனம்போன போக்கில் நாடகமாடிய எவருக்கும் இந்த கதிதான் நிச்சயம் என்று குட்டுப்பட்ட பிறகல்லவா தெரிகிறது. இப்போது என்ன செய்வது?” என்று குழம்பித் தவிக்கும்போது வீதிக் கதவை மெல்ல யாரோ தட்டும் ஓசை கேட்டது.

மெல்ல எழுந்து சென்று கதவைத்திறந்தாள். சங்கரன் உடம்பு தெரியாமல் குடித்துவிட்டுத் தள்ளாடத் தடுமாட வாயில் புகையும் சிகரேட்டுடன் பயங்கரமாக உள்ளே வந்து தடாரென்று சோபாவில் சாய்ந்தான். அவனுடைய அலங்கோலம் ஒருபுறமிருக்க, அவன் உயிருடன் வந்து சேர்ந்தது பற்றிப் பரம சந்தோஷமே அடைந்து அவனைக் கூப்பிட்டுப் பார்த்தாள். போதையின் வெறியில் பதிலே இல்லை.

பொழுது புலரும் ஆரவாரத்தைப் புள்ளினங்கள் பறை சாற்ற வாரம்பித்தன. மஞ்சுளாவின் வெறிபிடித்த உள்ளத்தில் உத்ஸாகத்திற்கும் சாந்திக்கும் இனி இடமேது? தன் நிலைமைக்கு மீறிய அநீதமான ஆசைக்கு அலைந்து துடித்த உள்ளம் அந்த வேகத்தில் சகலத்தையும் மறக்கச்செய்து வரண்டுபோன உள்ளத்தில் இன்று வெறும் சூனியமும், நிராசையின் எதிரொலியும் தானே கெட்டழிந்த கொடுமைக்குத் தானே ப்ராயச்சித்தம் செய்துகொள்ளச் செய்யும் பயங்கரமும், நீ மகா பாவி...நீ ஆண்டவனின் அபராதி அபராதி' என்று ஏக காலத்தில் ஆயிரங் குரல்கள் கிளம்பி இதயத்தில் கோஷித்து ஈட்டி கொண்டு குத்தும் வேதனையும் ஒன்றுகூடி அவளைத் திணறச் செய்கின்றன.

யோசித்து யோசித்துப் பார்த்தாள். பொழுது விடியும் சமயமாகிவிட்டதால் சந்தடி உண்டாகியது. உள்ளே சென்றாள். ஒருநீண்ட கடிதத்தை கிருகிரு என்று எழுதினாள். அதை உறையிலிட்டுக் குழந்தைகளின் பக்கத்தில் வைத்தாள். நான்கு குழந்தைகளையும் ஒருதரம் அணைத்து முத்தமிட்டாள். ஓசை செய்யாமல் சங்கரின் காலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள். "ஆசையே! உன்னால் அடைந்த பலன் போதுமா! காமவெறியே! உன்னாலடைந்த சுகம் போதுமா!" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். கண்ணீர் ப்ரவாகத்தை அவளால் அடக்கவே முடியவில்லை. அன்று தாதா திட்டியபோதே மனத்தைக் கட்டிப்பிடித்திருந்தால் இந்த கதி நேர்ந்திருக்குமா! அந்தோ! உள்ளே பாம்பு இருப்பதையறிந்தும் கொலைசெய்வதற்கொப்பாகத் துணிந்து தாதாவை உள்ளே போகவிட்டு அவர் உயிரைப் பலிகொண்ட பாதகிக்கு இதுவா போதும்? இந்த அனுபவமா போதும்? போதாது...போதவே போதாது. செக்கில்வைத்து ஆட்ட வேண்டும். சுண்ணாம்புக் காளவாயில் போட்டுப் பொசுக்கி,

கண்டதுண்டமாக வெட்டி காக்கைக்கும் குருவிக்கும் கழுகுக்கும் போடவேண்டும்... அந்த ஜந்துக்கள்கூட இந்த சண்டாளியின் மாமிசத்தை ஏற்றுக்கொள்ளா... ஆம்—ஏற்றுக்கொள்ளா

என்று தனக்குள் எண்ணிக் குமுறினாள். தனது சகல நகைகளையும் கழற்றி வைத்தாள். மனத்தை முறித்துக் கொண்டு வாசல்கதவை ஓசை செய்யாமல் திறந்து சாத்தினாள். இன்னும் வெளிச்சமாகவில்லை எனினும்பஸ்ஸுகள் அதிகாலையில் செல்வது அவளுக்குத் தெரியுமாகையால் பஸ் ஸ்டாண்டிற்குச் சென்று பகதூர் வீட்டு வழியாய்ப்போகும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தாள். பஸ்ஸும் கிளம்பியது.

10 நிமிஷத்தில், இறங்கவேண்டிய இடத்தில் இறங்கினாள். தன் வாழ்வும் சங்கரின் கண்ணியமும் நாசமாவதற்கு அடிவாரம் கோலுவதுபோல் மூன்று மாதங்கள் இராப்பகல் உழைத்த வீடாகையால் எல்லா இடமும் நன்றாகத் தெரியும். தான் யாரென்பது தெரியாதிருக்க முக்காடிட்டுக்கொண்டு வீதியிலிருக்கும் வாச்மெனிடம் ஒரு துண்டு கடிதத்தைக் கொடுத்து "இதை உடனே பகதூரிடம் கொடுத்துவிடு—தாமதிக்காதே" என்று சொல்லிவிட்டு அவ்வீட்டைப்பார்த்து ஒரு தலை வணக்கம் செய்தபின் அந்த இருளிலேயே அவள் மாயமாய் மறைந்தாள்.

## 27

பகதூரிடம் கொடுக்கப்பட்ட கடிதத்தை அவர் பிரித்துப் பார்த்தார். அவர் கண்களையே அவரால் நம்பமுடியவில்லை. "உண்மையாகவிருக்குமா!" என்று வியப்புற்றவாறு சக்குவைக் கூப்பிட்டு, "இதோ பாரு. இதைக் காவல்காரன் கொடுத்தான். நீ படித்துப்பாரு. இது உண்மையாக இருக்குமென்று எனக்குத் தோன்றவே இல்லை"—என்றார். ஆவலுடன் சக்கு கடிதத்தைப் படிக்கவாரம்பித்தாள்.

"ப்ரபுவே! உமது குடும்பத்தைப் பிடித்து ஆட்டி வந்த கொள்ளிவாய்ப் பிசாசு விட்டு விலகிவிட்டது. இனி இந்த ஜென்மாவில் உமது குடும்பத்தின் பக்கம் நாடாது. இத்தனை சின்னபின்னமாகச் சிதறிய உமது குடும்பம் இனியாவது நீடூழி நன்றாக வாழட்டும். இந்த மகத்தான அபராதத்தைச் செய்துவிட்ட அபராதியை மன்னித்து

விடுங்கள். உங்கள் மகன் ஆபத்தான நிலைமையிலிருக்கிறார். உடனே போய் அழைத்து வரவும்.

அபராதி''

என்றதைப் படித்ததும் சக்குவும் ஒரு துள்ளு துள்ளினாள் ''அப்பா! இது கட்டாயம் அந்த மகாபாவியின் கையெழுத்து தான். சந்தேகமே இல்லை...—உடனே காரை எடுக்கச் சொல்லுங்கள். அம்மாவிடம் நான் போய் இதைக் காட்டி விட்டு வருகிறேன்'' என்று கடிதத்துடன் ஓட்டமாக ஓடினாள்.

ஆனால், பகதூருக்குமட்டும் ''இது உண்மையான செய்தியல்ல. இது இப்போதுள்ள ஆபீஸ் சம்மந்தமான நெருக்கடியைத் தீர்த்துக்கொள்வதற்காகவும் தன்னிடம் நேரில் வருவதற்கு அவனுக்கு முகம் இல்லாததினால் அந்த ராக்ஷஸி செய்துள்ள தந்திரம்'' என்றுதான் தோன்றியதால் அவர் போவதற்கு மறுத்துவிட்டார்.

மகளும் மனைவியும் கெஞ்சியும்கூட அவர் ஓரே பிடிவாதமாய் ''நான் வரமுடியாது வேண்டுமாயின் நீ போய்பார்த்து விட்டு வா!'' என்று பெண்ணுக்குமட்டும் உத்திரவு கொடுத்தார். உடனே சக்கு தன் கணவனை அழைத்துக்கொண்டு காரில் சென்றாள். எங்கும் இருள் நீங்கி உதயமாகும் ப்ரகாசத்தை அள்ளி வீசியவாறு ''பயப்படாதே அந்தகாரம் விலகியது. சங்கடமும் துலைந்து சுக உதயம் ஆய்விட்டேன்''என்று ஆதித்தன் கூறுவதுபோல் உதயமானான்.

சக்குவின் இதயத்திலும், தான் இதேபோல் ஒரு தினம் காலையில் அந்தப் படுபாவியை அழைத்துவந்துத் துன்பத்தை விலைக்கு வாங்குவதுபோல் வாங்கியாயிற்று. எந்த சாபக் கேடோ! அந்தப் பீடை க்ரகப்ரவேசம் செய்த நேரம் வீட்டில் மூதேவி ப்ரவேசமே உண்டாகியது. இனியாவது விடியும் காலம் வருமா? ஆனந்தமாகப் பொழுது புலர்ந்து இருள் அகன்றதுபோல் எங்கள் குடும்பத்தின் இருளும் அகலுமா?... என்று தனக்குள் எண்ணியவாறே அவ்வீட்டையடைந்தாள்.

தெருக்கதவு சாத்தப்பட்டிருந்தது. ஏதனாலோ சக்குவுக்கு அவளையறியாத நடுக்கமும் ஒருவிதமான அச்சமும் பாதித்தன. இதற்குள் அவள் கணவன் இறங்கிக் கதவைத் தட்டினான்.

உள்ளிருந்து இரண்டு குழந்தைகள் கதறும் சத்தம் கேட்டதால் ஒரு வேளை வேறு வீட்டிற்குவந்துவிட்டோமோ என்று சந்தேகித்தவாறு துண்டு கடிதத்தில் குறித்திருந்த இலக்கத்தை மீண்டும் கவனித்தான். அது சரியாயிருந்ததால் கதவை பலமாகத் தட்டும் முறையில் அழுத்தும்போது திறந்துகொண்டது கண்டு வியப்புடன் உள்ளே இருவரும் அச் சத்துடனேயே சென்றார்கள்.

இதயம் டக் டக் என்று அடித்துக் கொள்கிறது. மூன் பக்கத்துஹாலில் இவர்கள் போய் பார்க்கும்போது அப்போது குடி வெறியின் மயக்கத்தில் கோரமாய்ப் படுத்திருக்கும் சங் கரைக் கண்டதும் இருவரும் தீயை மிதித்தவர்கள் போல் துள்ளினார்கள். அவனைச்சுற்றி நான்கு குழந்தைகள்—அதிலும் ஒரு மாதங்கூட நிரம்பப் பெறாத இரு பச்சை சிசுக்கள் கத்திக் கத்தித் தொண்டை வரண்டுபோய்க் கனைப்பதும் கத்துவது மாய்க் குத்துயிர்போல் காணப்பட்டதையும் கண்டு, சங்கரின் உயிரும் இருக்கிறதோ, இல்லையோ, என்கிற சந்தேகமே உண்டாகியதால் சக்குவின் கணவன் அவன் மார்பிலும் மூக்கி லும் கையை வைத்துப் பார்த்தான்

மூச்சிருப்பதை யறிந்து "சங்கர்! சங்கர்!" என்று கூப் பிட்டான். பதிலில்லை. புரட்டினான். உணர்ச்சியில்லை. இரு வருக்கும் சகிக்கவியலாத சங்கடம் செய்து வாட்டுகிறது. ப்ரமை பிடித்தவர்கள்போல் நின்றுவிட்டார்கள்.

## 28

பம்! பம்! என்ற ஹாரன் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். டாக்டர் சேகரும் சாந்தாதேவியும் அலையக் குலைய ஓடிவருவதைப் பார்த்து சக்குவுக்கும் அவள் கணவனுக் கும் ஒன்றுமே தோன்றாது குழப்பமாகிவிட்டது. டாக்டருக் கும் தங்களுக்கும் மனஸ்தாபமிருப்பதால் மத்தியில் சற்று பழக்கம் நின்றிருந்ததால் முதலில் சற்று அதிர்ச்சியும் அச்ச மும் உண்டாயின; எனினும் சக்கு நல்ல கெட்டிக்காரி; மகா புத்திசாலியாகையால் .."டாக்டர்! பழய விஷயங்களை மறந்து மன்னிக்கவேண்டும். நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?... சங்கர் தன் நினைவே இல்லாது படுத்துக்கிடக்கிறான்...எங்க ளுக்கு விஷயமே ஒன்றும் விளங்கவில்லை. இருள் பிரிவதற்கு

முன் யாரோ ஒரு சீட்டுக் கொடுத்தார்களென்று காவற்காரன் கொடுத்தான், ஓடோடி இப்போதுதான் வருகிறோம். உங்களுக்கு எப்படித் தெரியும்?...என்றாள்.

டாக்டர் மகா பாரபுத்தியுடைய மேதாவியாகையால், அவர் சில அல்பர்களைப்போல் பழய சம்பவத்தை மனதில் வைத்துக்கொண்டு அசட்டுத்தனமாகப் பேசும் மனிதரில்லையாகையால் "அதைப்பற்றி என்னம்மா! உலகம் பலவிதம்... மனித சுபாவமும் அதற்கேற்பத்தானே இருக்கும்? இப்போது அச்சங்கதிகளைப் பற்றிப் பேச சமயமில்லை...உங்களுக்கு சீட்டு வந்ததா!...எனக்கும் அதிகாலையிலேயே இதோ! இந்த கடிதம் கிடைத்தது. மஞ்சுளாவே எழுதி அவளே நேரில் கொண்டு கொடுத்திருப்பதாகவே கடிதத்தால் தெரிகிறது. இதைப் படித்து மனதுகலங்கிப்போய் ஓடிவருகிறோம். இதோ! இதை நீங்களே படித்துப் பாருங்கள்" என்று கடிதத்தை சக்குவிடம் கொடுத்தார்.

சக்கு:—டாக்டர்! முதலில் இவனுக்கு அபாயம் ஒன்றுமில்லையா என்று பாருங்கள்! என் தாயார் இதே ஏக்கமாக கண்ணும் கண்ணீருமாகப் படுக்கையாகப் படுத்திருப்பது நீங்களறிந்திருக்கலாம். என் தாயாரின் வயிற்றில் பாலைவார்ப்பானா என்று முதலில் பாருங்கள். பிறகு கடிதத்தைப் படிக்கலாம்...இந்த குழந்தைகளென்ன...அவள் எங்கே காணவில்லை ...எல்லாம் ஏதோ விசித்ரமாகவிருக்கிறதே" என்று வருந்தினாள்.

டாக்டர் தாழ்ந்த குரலில்..."உம்...அவளை இனி இவ்வுலகில் காணமுடியாது. விரலுக்குத் தக்க வீக்கம் என்பார்கள். அதுபோல் தனக்கு எட்டாத ஒரு ஆசையை, நினைப்பை, எதிர்பார்த்து தனது சகலத்தையும் துறந்து மனக் கட்டுப்பாட்டை மீறி...ஒரு அல்ப ஆசையை அடக்க மனமின்றி கற்பைப் பறிகொடுத்தவர்களின கதி இதுதான்...என்றார். அவர் குரலில் பச்சாத்தாபத்தின் வேகம் எதிரொலித்தது.

சங்கரைப் பார்த்தார்..."சக்கு! ப்ராணபயமில்லை; அளவுக்குமீறி குடித்திருப்பதால் தெளிவதற்கு வெகு நேரமாகும். இனி நாம் இங்கிருக்கவேண்டிய அவசியமில்லை. இந்த இரட்டை சிசுக்களும் சங்கரின் புதிய வெளியீடுகள். மஞ்சுளாவின் வாழ்க்கையையே முறியடிப்பதற்காக அவள் இதயத்தில் ஆசைக்கனலை முன் கூட்டி ஜ்வாலையாக எரியச்செய்துப் பின்

அந்த ஜ்வாலையின் ப்ரசாதமாக உண்டாகிய உத்பாதபிண்டங்கள். இந்தப் பொறி அவள் தலையில் எழுதியிருந்ததனால்தான் புத்தியும் காளகோடிவிஷத்தை அமிருதமென்று நம்பும் தடுமாற்றத்தை அடைந்தது...சரி சக்கு! உன் தம்பியை நீ வீட்டிற்கழைத்துச் சென்று உங்கள் தாயாரிடம் காட்டுங்கள். இந்த நிற்கதிப் பிண்டங்களை நாங்கள் கொண்டுபோகிறோம். கடிதத்தைப் படித்தால் உனக்கே புலப்படும்" என்றார். சக்குவும் சங்கருக்கு ப்ராணபயம் இல்லை என்றதைக்கேட்டு சந்தோஷத்துடன் அவனை உற்றுநோக்கினள்.

அவன் காலடியில் ஒரு கடிதம் கிடப்பதைக் கண்டு, "டாக்டர்! இதோ ஒரு கடிதம்"...என்று அதை எடுத்தாள். கவரின்மேல்விலாசமேஇல்லாதிருந்ததால் கடிதத்தைத்தானே உடைத்து உரக்கப் படிக்கத்தொடங்கினள். எல்லோரும் ஏககாலத்தில் கேட்டார்கள்.

---

## 29

"உப்பு சப்பற்ற பண்டத்தைக் குப்பையில் எறிவதுபோல் ஒப்புயர்வற்ற உன்னத கற்பை... பாவம், பாதகம்...என்பதையறிந்தும், கண்மூடித்தனமாக எறிந்த த்ரோகிக்கு, இவ்வுலகில் மன்னிப்பு உண்டா!...இல்லை! இல்லை...பதியின் வியோகத்துடன் சதியும் உடன் கட்டை ஏறிக் கற்பைக்காத்த மகா மகா உத்தமிகளின் இனமாகிய பெண் ஜென்மமெடுத்தும் தன்னிலையறியாது, தன்னடக்கம் சிதறிப்போய் பதித்ரோகத்தைச்செய்த சண்டாளிகளுக்கு க்ஷமையுண்டா! இல்லை, இல்லை. நோயாளிகளுக்கு மருந்தை ஊட்டி கொடிய நோயையும் சொஸ்தப்படுத்துவது போன்று புத்தி கெட்டு மோகவெறிபிடித்த நோயால் வருந்திய சமயம் தனது கடமை, தனது உரிமை...தனக்குப் பகவான் கொடுத்துள்ள தாய்மை என்கிற முழுப்பொறுப்பு, பெண்தன்மையின் பெருமை, முதலிய பல அவுடதங்களை ஊட்டுவதுபோல் பெரியவர்கள் பலவிதமாகக் கண்டித்தும், தண்டித்தும், நீதியின் நினைவை உறுத்தியும் கூறியதைக் கேளாது தூக்கு மரத்தையே ஆனந்தமாக ஆடுவதற்கான ஊஞ்சல் பலகை

என்று எண்ணி தானாக மாட்டிக்கொள்வதுபோல் தனது சகல கடமைகளையும் மறந்து பலவிதத்திலும் சண்டாளத்தனத்தை இன்பமாகச்செய்த காதகிக்கு பச்சாத்தாபம் காட்ட இட முண்டா! இல்லை! இல்லை...குற்றம் ஒருவரிடம் மட்டுந்தானா... இல்லை... அவராவது உத்தமராயிருந்தால் கள்ளக் கண் கொண்டு பார்க்கும் இக்கள்ளியை பேயறைவதுபோல் அறைந்து கூடுமானவரையில் அவ்விபத்திலிருந்து காப்பாற்றி யிருக்கலாம்.

சண்டாள உள்ளத்தில் தோன்றிய கொடிய கனலை வீசி விடும் விசிறிபோன்று அவருடைய மந்தகாஸம் அமைந்து கனலை ஜ்வாலையாக்கியது. கெடுமதிகொண்டு அவர் திருமுக த்தை நான் பார்க்கும்போது செருப்பாலடிக்காமல், அவரு டைய கண்வலையை வீசி என்னைக் கட்டுண்டுநிறைச்செய்தார்! புண்நிறைந்த புன்முறுவலை நான் காட்டுவதற்குள் அவர் அமுத ப்ரவாகத்தை ஊட்டுவதுபோல் பல இன்பமொழிகளால் உள் ளறிவை மயக்கி அதபாதாளத்தில் வீழ்த்தினர்- நிடசித்தமும் தெய்வபக்தியும் அற்ற இருவரும் கண்ணிருந்தும் அந்தக மானோம்.

எட்டாத கிராட்சைப்பழம் புளிப்பு என்று விலகிய நரி யின் புத்தியாவது எங்களுக்கிருந்ததா! எட்டாத ஒரு விஷயத் தில் ஆசையும் எட்டியுள்ள கடமையில் பற்றற்றத்தனமும் ஒன்றுசேர்ந்ததானது பஞ்சுப்பொதியில் நெருப்புவைத்தகதை போலாகிவிட்டது...உலகில் உள்ள பாவிய விதவைகளே!... அதிலும்தாயாகிய இந்தக்கட்டையைப்போன்ற விதவைகளே! உங்களுடைய வாழ்க்கையின் சுகம் பூராவும் உங்கள் செல்வங் களாகிய மக்களின் தரிசனமும் அவர்களுக்குழைத்து இன்புறு வதுந்தான் என்று உறுதியாய்...ஆணித்திறமான வலுவுடன் இருங்கள். எட்டாத ஒன்றில்...அதிலும் எட்டத்தகா...கன விலும் நினைக்கக்கூடாத ஒன்றில்...மனத்தை இழந்து இப்பா வியைப்போல் மானங்கெட்டுப் பாழாகிவிடாதீர்கள்.மனத்தை யடக்க வலிமை இல்லையா! மானத்தை இழக்காமல் துணிந்து அப்போதே ப்ராணனை பலிகொடுத்து விடுங்கள். அம்மாதிரி செய்வதில் உங்களுடைய மேலான கற்பைக் காத்த பெருமை யாவது உலகத்தில் நிலைத்து நிற்கும்.

மனத்தைத் தளரவிட்ட எவருக்கும் எப்படியும் சாவு சாவுதான்- அந்த பயங்கரத்திளின்றும் மீளமுடியாது.

மானம் சிதறிய பின்னர் நிச்சயமாகத் தற்கொலைதான் காத்திருக்கிறது. அம்மாதிரி ஊர்சிரித்து நாடுநகைத்து கற்பிழந்து காரியுமிழப்பட்டு இப்பாழும் ப்ராணனை விடுவதைவிட முதலிலேயே ஆனந்தமாய் உயிரை விட்டுவிடுங்கள். குழந்தைகள் பெற்ற பிறகு மறுமணம் என்கிற கடலில் விழுவதைப்போன்ற முட்டாள்தனம்...மடத்தனம்.....ஆபத்தை விலைகொடுத்து வாங்குவதற்கு ஒப்பானதேயன்றி வேறு உபமானமே கூற இடமில்லை.

மயக்க வார்த்தையை நம்பினேன்......மாயமோகத்தை சொர்க்க போகமென்று ஏமாந்தேன். அநித்ய டாம்பீகத்தை ஆத்மார்ப்பணமான சிங்காரமாய் எண்ணி மோசம்போனேன். வெறிபிடித்தவனின் வார்த்தை வெறிபிடித்தவளாகிய எனக்கு இனிப்பாகவே இருந்தது. கிடைத்தற்கரிய சகலத்தையும் பறிகொடுத்துப் பாபக்குழிக்குப் பங்குதாரியாகிய பிறகு தான் இந்த மறுமண சுகத்தின் சிகரத்தின்மேன்மையை அறிந்தேன்

உன்குழந்தை, என் குழந்தை, நம்குழந்தை...அப்பப்பா! வேண்டும். நன்றாக வேண்டும். முதலில் கொந்தளித்த கடலின் குமுறல் அடங்கவேண்டியதுதானே... இதன் பலனாக ஒரு மகனின் காதுகள் பலியாயின. அவனை செவிடன் என்கிற பதவியில் ஏற்றிவைத்தேன். அடுத்த பெண்...இன்னும் எழுந்திருக்கவில்லை. ஆனால் நிச்சயம் அது நொண்டி என்பதை அறிந்தேன். போதாக்குறைக்கு இரண்டு பெட்டைக் கட்டைகளை வேறு சம்பாதித்துக் கொண்டேன். மோகவெறி தெளிந்த பிறகு பழய நினைவுகள் வருவதும் மனிதன் மாறுவதும் இயற்கை...அவருடைய நிலைமை உயர்ந்துவிடலாம்...ஆம்... அவர் ஆண் சிங்கம்...அவர் உயர்வதற்கு சமூகம் சட்டம் சகலமும் இடங் கொடுத்து ஆதரிக்கும். அவர் மனம் முற்றிலும் மாறிக்கொண்டு வந்ததை அறிந்தேன். அவருடைய தாயாரின் நிலைமையைப் பற்றியும் குழந்தைகளைப் பற்றியும் தினே தினே அவருக்குக்கூறவரும் மனிதர்களின் எல்லை கணக்கற்றதாயிற்று

தாயின் பாசத்தை....கடமையை உதறித்தள்ளி நான்சண்டாளியானதுபோல் அவர் ஆகவில்லை. தன் தாயாரையும் தகப்பனாரையும்விரோதித்துக்கொண்டதுமகாகுற்றம்...மகா அபராதம்...வெகுகொடுமை...என்று சதா சொல்லிவந்தார். ஆயிற்று...அந்த கப்பல், அந்த பக்கம் அடிக்கும் காற்றில் சாயப்போகிறது என்பதை அறிந்த பிறகே நிர்க்கதியான

என் நிலைமையின் பயங்கரத்தை உணர்ந்தேன். பாழும் கோபம், பாழும் காமவெறி...என்னை இப்படியாக்கிவிட்டது. "நீ இனி உன்தொழிலைப் பார்த்துக்கொள், நான்என் தாயாரிடம் போகவேண்டும். என்னுடைய திரளான ஜனங்களை எல்லாம்விட்டு...திரண்ட செல்வத்தை எல்லாம் இழந்து... கம்மனாட்டியின் கணவன்...விதவையின் புருஷன் என்று என் காதுகேட்க ஏசிப்பேசும் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு நானுமொரு மனிதனாக வளையவர இனிமனம்பொறுக்கவில்லை. நீ ஏன் இன்னும் பழயபடி தொழில் செய்த இடங்களுக்குப் போய்பார்க்கவில்லை...' என்றுநேரிலேயேகேட்கவாரம்பித்தார்.

வாஸ்தவம். என்னுடைய அழிவுக்கு நானே பாதிகாரணமாயிருப்பினும், முற்றிற்கும் காரணம் அவராகவிருந்தும்,— அழுக்குப் படிந்த வைரத்தையும் த்ராவகத்தால் சுத்தமாக்கி விடுவதுபோல், அவரை சமூகமும் சட்டமும் ஏற்கும்...ஏதோ சிறுபிள்ளைத்தனம், சிலகாலம் கெட்டலைந்தான்; இப்போது அவன் மகா பரிசுத்தமாய் யோக்யமாய் இருக்கிறான் என்று உலகம் ததாஸ்து சொல்லி பக்தியில் பீடத்தில் ஏற்றி உட்கார வைக்கும்! மற்றொரு அழகிய பரிசுத்த கன்னிகையை மணந்து உலகத்தோடு ஒத்துவாழ முடியும். தடை ஏதுமில்லை

ஆனால்...இந்தக் கட்டையின் அழிந்த மதிப்பு வருமா! அன்று நெருப்பாயிருந்த மஞ்சுளா, இன்று காற்றக் குப்பையாயிருக்கிறாள் என்பதை உலகமா மறந்துவிடும்? இனி பழயபடி யாராவது சேர்ப்பார்களா! அப்படி தயா தாட்சிண்யத்திற்குத் தான் யாரேனும் சேர்த்தாலும் இனிநான் வெளியேவர முகம் உண்டா! என்னை ஒரு பொருளாக்கி உயர்ந்த பதவியில் கொண்டுவந்த புண்யாத்மாக்களின் முகத்தில் விழிக்க லாயக்குண்டா! உன்னை ஆயுள்பரியந்தம் விடமாட்டேன்' என்று வாக்குக் கொடுத்து என்னைக் கெடுத்த மனிதன் உத்தம நிலைமையில் வாழும்போது நான் உலகில் இருந்து அவர் கண்ணில் படமுடியுமா! ஒரு நொண்டி, ஒரு செவிடு இரண்டையும் வைத்துக்கொண்டு இனியடையப்போகும் சுகம் வேறு பாக்கி என்ன இருக்கிறது? எல்லாம் முடிந்தது. என் புத்தி அழிந்ததால் பாதியும், அந்த மனிதனின் மதுமொழியால் பாதியுமாக ஒருவாறு என் வாழ்நாள் முடிந்தது. குற்றம் யார்மீது?.... என் மீது தான்...என்மீதுதான்...நான் செய்தசகலவிதமான த்ரோகத்திற்கும் பலனை அடைந்துவிட்டேன். அத்தகைய

சண்டாள சரீரத்தை காக்கை கழுகுகள் கூடத்தின்னுது வெறு க்கும். இனி யாரும் இச்சடலத்தைத் தேடவேண்டாம். இந்தப் பாவியைப்போல் அலேந்து கெட்டுப்போகவும் வேண்டாம். ஆண்டவனே! விதவை என்கிறபட்டத்தை நீ கொடுக்கும்போதே மன உறுதியை...ஆசையற்ற மறத்த நிலைமையைக் கொடுத்துக் காப்பாற்று. அதைமட்டும் மறப்பதாயின் உலகத்தையே அழித்துவிடு...

என்று எழுதியிருந்ததைப் படிக்கக்கேட்டு எல்லோரும் தம்பித்து நின்ருர்கள். டாக்டர் கொடுத்த கடிதத்தைப் படிக்க வாரம்பித்தாள்.

# 30

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது பழமொழி. ஆனுல் நான் அதை கனவிலும் அறியும் பாக்யம் செய்யவில்லை. இந்த கொடும்பாவி இப்படி அனியாய பீடத்தில் ஆட்சிபுரியப் போகிருள் என்பதை அறிந்திருந்தால் அன்னைபிதாவாகத் தாங்கள்கூட உதவிபுரிந்திருக்க மாட்டீர்கள். பசுத்தோலை போர்த்த புலியின் ஸ்வரூபத்தைக் கண்டபிறகு என்னை விஷ ஜந்துவாக எண்ணி விலக்குவது இயல்பேயாகும். பாம்புக்குப் பால்வார்த்த கதைபோலவே என் கதியும் ஆயிற்று. என் அன்னையாகிய சாந்தாதேவியின் கடிதத்தை அலட்சியமாக வீசி எறிந்த இப்பாவியின் சடலத்தையே இப்போது அலட்சியமாய் கடலிலோ, காரின்கிழோ ரயிலின் அடியிலோ, லாரியின் முன்போ வீசி எறியும் காலம் நெருங்கிவிட்டது. எந்த தேனெழுகும் வார்த்தைகளை நம்பி நான் மதியிழந்தேனே, அந்த வார்த்தைகள் இப்போது கொடிய பாணங்களாகிவிட்டன. எந்த குருட்டு நம்பிக்கையின் மீது நான் கட்டடம் கட்டினேனே அக்கட்டடத்தின் அஸ்திவாரம் ஆடிவிட்டது. அது கட்டடமல்ல; நீர்க்குமிழி என்பதை அறிந்துகொண்டேன். அவர் புத்தி மாறிவிட்டது. தாயினிடம் செல்லவும் அன்னையின் இனிய முகங்காணவும், அன்னையின் அமுதமொழியைப் பருகவும், அன்னையின் கரத்தால் அன்புமயமான உணவருந்தவும் அவர் மனம் துடிதுடிக்கிறது. தாயின் பாசம் அவரை வாட்டுவதால் மோகம் மாண்டுவிட்டது. விடவும் முடியாது இருக்கவும் முடியாது பறக்கிருர்.

போதாக்குறைக்கு இரண்டு பெட்டைக்குட்டிகள் ஒன்றாகப் பிறந்த துரதிருஷ்டம் அவருக்கு ஆபீஸிலும் மகத்தான சோதனையாக முடிந்தது...இந்த சோதனை அவருக்கு மட்டுமல்ல இந்தப் பாவிக்குந்தான் முற்றிலும் சோதனை.மகனின் ஆபத்தைக்காக்க தாய் தந்தையர் கட்டாயம் மகனிடம் ஒன்று கூடுவார்கள். அவரும் சமயம் பார்த்துக்கொண்டிருப்பதால் இனி இந்தப் பாவி உயிர் வாழ்வதற்குக்கூட அருகதையில்லை. ஏன் வளவளவென்று வளர்த்தவேண்டும்? என்னுடன் ப்ரியமாக இருந்தபோதே அவர் பெரிய குழந்தைகளைச்சித்திரவதைசெய்து ஒன்றை மொண்டியாயும் ஒன்றை செவிடாயும் முத்திரையிட்டுவிட்டார். இனியும் அவரிடம் இருப்பது என்பது பாழுங்கிணற்றிலிருப்பதுபோலத்தானாகும்.

ஏற்கெனவே என் பையனுக்கு புத்தியறிந்து விட்டதால் என்னுடைய கேவலம் நன்றாகத் தெரியவாரம்பித்துவிட்டது. அதோடு பள்ளிக்கூடத்திலும் மற்ற இடங்களிலும் என்னைப் பற்றி இழிவாகப்பேசுவதை அவன் உணர்ந்து கொள்ளும் சக்திபெற்று வருகிறான். இனியும் நான் உயிருடன் இருந்து, 'நம் தாய் விபசாரி...மகா அபராதி' என்று நன்றாக அவர்கள் உணர்ந்து அவர்களும் கல்லாலடிக்கும் வரையில் நான் இருக்க ப்ரியப்படவில்லை. இதோடு இச்சம்பவத்தை அவன் மறக்கக் கூடும். மற்ற சிசுக்களுக்கு இந்த ரகஸியம் தெரியாமலேயே போகலாம். இத்தனை பயங்கரங்களை முன்பு அறியாது, விஷத்தைக்குடித்த பிறகு சாவுக்குப் பயப்படுவதுபோல் இனி பேசி லாபமில்லை.

புண்ணியாத்மாக்களே! அவர் தாயாரிடமும் குழந்தைகளிடமும் சுகமாகவிருப்பதற்கு முட்டுக்கட்டையாய் இனி நான் இருக்க கனவிலும் ப்ரியப்படவில்லை. இனியாவது அவர் கடமையில் கண்ணாயிருக்கட்டும் புனித மூர்த்திகளின் முகத்தில் விழிக்கவும் கூசுகிறது. அந்த நான்கு துர்ப்பாக்யப் பிண்டங்களையும் அனாதை நிலயத்தில் தயவுசெய்து சேர்த்துவிடுங்கள். உங்களுக்கு மகத்தான அபராதத்தைச் செய்த பாவியின் வேண்டுகோள் இதுதான். தூரவிருந்து தரிசித்துவிட்டு விடைபெற்றுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

அபராதி

ஒவ்வொருவர் கண்களிலும் கைக்குட்டைகள் ஒற்றி எடுக்கப்பட்டன. சில நிமிஷங்கள் நிசப்தம் குடிகொண்டது. பிறகு டாக்டர் நான்கு குழந்தைகளையும் தன் வீட்டிற்குக் கொண்டு போனார். சங்கரை அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்.

---

## 31

"முடியாது...முடியவே முடியாது...நான் கட்டாயம் என் தாயாரைப்பார்த்து அவள் காலில் விழத்தான் போகிறேன்...மூளை கெட்டு நான் செய்த குற்றத்திற்காக எங்கப்பாவின் கால்களைப் பிடித்துக்கொண்டு என் பேராபத்தைத் தீர்த்துக்கொள்ளப்போகிறேன்......போ ... போ...பீடையே! உன் தொழிலை நீ இனி பார்த்துக்கொள்...என்...இந்த நீலி அழுகை...ஆம்...சொன்னேன்......காப்பாற்றுவதாக சொன்னேன்...என் மனம் சரியாயில்லை...இன்னொரு 'புட்டி கொடு... உம்...போடடோ...

என்று சங்கர் தாறுமாறாக வாய்பிதற்றி உளறவாரம்பித்தான். அப்போதும் அவன் தகப்பனார் தூரவேதான் இருந்தாரேயன்றி அருகில் வரவில்லை. தாயார் அவன் பக்கத்திலேயே உட்கார்ந்து தடவியவாறு அவனுடைய சகல குற்றங்களையும் மறந்து தாயுள்ளத்தின் சிகரத்தில் பச்சாத்தாபமும் பாசமும் நிறைந்து பக்ஷமான குணத்துடன் புதிய ஸ்வரூபத்தையே அடைந்து..."சங்கர்...என்னுருயிர் சங்கர்...எங்கே ...கண் திறந்து பாரு...உன் தாயாரின் மடியில்தானே நீ படுத்திருக்கிறாய்......படுக்கையோடு கிடந்த எனக்கு உன் சந்திர முகத்தைப் பார்த்ததும் ஆனையின் பலமல்லவா வந்து விட்டது...எங்கே...இதோ பாரு...அம்மான்னு கூப்பிடு" என்று கூறியவாறு ஐஸ் ஜலத்தை முகத்தில் சில்லென்று தெளித்து வாயிலும் வார்த்து வந்தாள்.

அன்று மாலைதான் சங்கர் பூர்ண தெளிவுபெற்றுக் கண் விழித்தான். ஆனால் நினைவு முற்றும் தன் விசனத்தை மாற்றிக்கொள்வதற்காக மிதமிஞ்சிக் குடித்துவிட்டதும் தான் எங்கு விழுந்தோம் என்கிற கலவரத்தில் இருந்தது... "பாழாய்ப்போன புத்திபிசகால்...உன்னையும் கெடுத்தேன்... நானும் பாழானேன்...அம்மாவை...என்னுருயிர் தாயாரை"

...என்று பிதற்றியவாறு தாளமாட்டாது ஒரு புரட்டலுடன் வாந்தி எடுத்தான்.

அந்த களைப்பு தீர்ந்து சற்று நேரமாகியதும், நன்றாகக் கண்ணைத் திறந்தான்...“மஞ்சு....மஞ்சு...நீ இனி உன் தொழிலைப் பார்த்துக்கொள்ளு...உனக்கு வேண்டுமானால் ஜீவனாம்சம் கொடுக்கிறேன்...என் தாயார்பாதத்தில் நான்போய் விழுந்து என் குற்றத்திற்குமன்னிப்புவேண்டி என்னைக் கைது செய்யாமல் காப்பாற்றிக்கொள்கிறேன்...ஏன்......எல்லாம் இருட்டாயிருக்கிறது. விளக்கு ஏற்றேன்...

மீண்டும் கண்ணை மூடி மவுனம்...பின்னும் சிறிதுநேரம் கழித்ததும் மறுபடியும் கண்ணைத் திறந்து எழுந்து உட்கார்ந்தான். அவன் தாயார் ஸ்ரீமகாலட்சுமியைப்போல் எதிரே உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் சில வினாடிகள் பொறி கலங்கினான்...ஹா!...அம்மா!...என்று ஒரு கூச்சல். சிறு குழந்தையைப்போல் அப்படியே அவளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு தாயின் அன்பில் ஐக்யமாகிவிட்டான்.

பின்னும் சில வினாடிகள் கழிந்து...“அம்மா! இது உண்மையான தோற்றமா...மஞ்சு...நான்...இப்போது எங் இருக்கிறேன்...எனக்கு ஒன்றும் புரியவில்லையே! அப்பா எங்கே...நீங்கள் எப்படி வந்தீர்கள்!”...என்றான், பிறகு நன்றாக விவரம் தெரிந்து சமாளித்துக்கொண்டு “நம்ம வீட்டிலா இருக்கிறேன்...அம்பீ...பாலு”...என்று பிதற்றினான்.

“என்னப்பா! இத்தனை நாள் கழிச்சு வந்திருக்கே! பெனத்தறியே! பாட்டி சதா காலமும் அழுது அழுது நோயாளியாய்ப் போய்விட்டா......அங்கச்சி பாப்பாவும் இப்போ அம்மா... அப்பான்னு பேசாது. நானும் இரண்டாவது க்ளாஸ் படிக்கிறேன்...நீதான் அந்தநர்ஸ் மாமியோடேயே ஓடிப் போயிட்டியே...என்று தனக்குத்தெரிந்தவரையில் தடதடவென்று சொல்லிவிட்டுத் தன் பாட்டியைப் பார்த்து “பாட்டீ! இனிமே அப்பா இங்கேயே இருப்பாரா...மறுபடியும் அவாத்துக்கே போயிடுவாரா! கேட்டுக்கோ! அங்கேயே போயிடுவார்னு நீ பேசாதே பாட்டீ! நீ உட்டுடு!”...என்று பாட்டியிடம் தனக்குள்ள சலுகையைக் காட்டினான்.

சங்கருக்கு முகத்தில் அசடு தட்டுகிறது. அவன் வாய் திறக்காமலேயே ‘நான் குற்றவாளி! நான் அபராதி! பெற்றவர்களுக்கும், மனைவிக்கும், பெற்ற குழந்தைகளுக்கும்...ஏன்.

சத்யஸ்வரூபமான கடவுளுக்கும்கூடத்தான் பரம அபராதி அபராதி" என்று முறையிடுவதுபோல் அவன் பார்வையும் பரிதாபமும் எடுத்துக் காட்டின.

குழந்தைகளை வாரியணைத்து முத்தமிட்டான். "அம்மா! இந்த மாத்ரு த்ரோகியாகிய அபராதியை மன்னித்துவிடு" ...என்று கூறியவாறு, தகப்பனாரின் முன்பு தானே ஓடி அவர் காலில் விழுந்தான். பேசுவதற்கு வாயடைத்துவிட்டது. பித்தன்போல் நமஸ்கரித்துவிட்டு குழந்தையைப்போல் அழுதான். ஆனால் ஆழ்ந்த அறிவும் அனுபவ ஞானமும் நிறைந்துள்ள அவர் எவ்விதமான பதிலோ, ஆறுதலோ ஒன்றுமே சொல்லவில்லை. "உம். இவன் வெறும் அபராதி மட்டுமா! கொலைப்பாதகனுகக்கூடவன்ரு ஆய்விட்டான்!" என்று இதயத்திற்குள் சொல்லிக்கொண்டார். இரு கடிதங்களினாலும் மஞ்சுளாவின் முடிவு தெரிந்ததால் அவர் அவ்வாறு எண்ணியதில் வியப்பு ஒன்றுமில்லையல்லவா! உடனே எதையோ எண்ணியவராய்..."சக்கு! அந்த துரதிருஷ்டப் பிள்ளைகளாகிய இரு குழந்தைகளும் எங்கே"...என்றார். "அவைகளை டாக்டர் தம்பதிகள் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அனாதை நிலயத்தில் கொண்டுவிடப் போகிறார்களாம்...இங்கு கொண்டு வந்தால் நீங்கள் என்ன சொல்வீர்களோ! என்று அஞ்சி நானும் பேசாமல் வந்துவிட்டேன்" என்றாள்.

உடனே 5 ஆயிரம் ரூபாயிக்கு ஒரு செக்கு எழுதி அதோடு ஒரு கடிதமும் வைத்து அதை டாக்டருக்கு அனுப்பினார். அதன் பிறகே அவர் இதயத்தை அழுத்திவந்த பாரம் ஒரு சிறிது குறைந்ததாகத் தோன்றியது.

---

## 32

கணகணவென்று டெலிபோன் மணியடித்ததும் சாந்தாதேவி ஓடி வந்து ரிஸீவ் செய்தாள். "ஹல்லோ...என்ன ..டாக்டரா...ஆம்...நான்தான் சாந்தா. என்ன சமாச்சாரம் என்ன! என்ன!...மிலிடரி லாரியில் அகப்பட்டு இறந்தாளா ..உங்கள் ஆஸ்பத்திரியிலா கொண்டு போட்டிருக்கிறார்கள்! ஐயோ! உங்கள் கையினாலா போஸ்டுமார்டம்செய்யவேண்டும் அட பாவமே...அந்த அபாக்யவதியின் கதி இப்படியா முடிந்

தது!...குழந்தைகளுக்கு ஏன் அந்த கோரத்தைக் காட்டி மனத்தில் ஒரு பீதியை உண்டாக்க வேண்டும். தாயாரைக் காணவில்லை என்கிற ஒரே உணர்ச்சியிருப்பதுதான் சரி என்று எனக்குத் தோன்றுகிறது...ஆகட்டும்...சங்கருக்கு சொல்லியனுப்ப வேண்டுமா...ஏன்...மகாபாவி அவள் தூய உள்ளத்தைக் கெடுத்து அவளையும் மன்னிக்க முடியாத அபராதியாக்கித் தானும் கொலைப்பாதகனாகிவிட்டபின் அவனுக்கு இந்த தற்கொலையை நாம் ஏன் சொல்லியனுப்பி அவளுடைய ரகஸியத்தைப் பகிரங்கமாக்கவேண்டும்...நீங்கள் உத்யோக முறைப்படி செய்துவிட்டு வந்து விடுங்கள்...ஆமாம்...அது தான் உசிதம்...ரிஸீவரை பொத்தென்று வைத்தாள்.

உம்...முடிந்து விட்டது அப்பாழும் பெண்ணின் சரிதை! அடடா! உலகம் இவ்வளவுதானா? நெருப்பை ஈ மொய்த்துப் பாழடித்தும் விட்டது. தளரா உறுதியுடனிருந்த அவள் உள்ளமும் தளரும் விதியமைந்தது. அவ்வஞ்சகனின் காமவலையும் கூட வீசிப் பிடித்து உருக்குலைத்தாகிவிட்டது. தன் கற்பையும் பறிகொடுத்து இரு குழந்தைகளில் ஒன்றின் காதும், ஒன்றின் காலும் பறிகொடுத்து லாரியில் அறைபட்டுச் செத்த பலன்தான் அவளுடைய குற்றத்திற்குப் பரிகாரம்...என்று உண்மையில் அனுதாபத்துடன் கண்ணீர் உதிர்த்தாள்.

நாட்கள் உருண்டோடி ஒரு மாதமாகிவிட்டது. அனாதை நிலயத்தில் வளர்ந்துவரும் பெரியகுழந்தைகள் அம்மா-என்று வருவாள் என்று சில தினங்கள் கேட்டு அழுதன. அனாதை நிலயத்தின் போஷணையிலும் டாக்டர் தம்பதிகளின் ஆதரவிலும் சிறுகச்சிறுக மறந்துவிட்டார்கள்.

பகதூர் வீட்டில் தடபுடலாக மேளம் வாசிக்கின்றது; ஏராளமான ஜனங்கள் கூடினார்கள். இரண்டாம் (மூன்றும்!) கல்யாணமென்று சொன்னாலொழிய தெரியாது: மிகவும் இளமையான முகம். சின்ன வயது. ஏதோ விதிவசத்தால் மூத்த மனைவி குழந்தைகளை விட்டுச் சாகவும் அவ்வித ஆட்டங்கள் ஆடவும் செய்துவிட்டது பாவம்...இப்போதும் ஜோடி வெகுநன்றாகப் பொருந்தியிருக்கிறது. சொந்த தமக்கையின் மகளையே இஷ்டத்துடன் மணக்கிறானாம் என்று பொதுஜனங்கள் பேசிக்கொண்டார்கள்.

கல்யாணத்திற்கு டாக்டர் தம்பதிகளையும் அழைத்திருந்தனர். அவர்களும் அங்கு கும்பலோடு உட்கார்ந்திருந்தபோதி

லும் அவர்களை யறியாது கண்களில்நீர் அரும்பியதை வெயர்வை துடைப்பதுபோல் துடைத்துக் கொண்டார்கள். மணையில் மணக்கோலத்துடன் வீற்றிருக்கும் சங்கரனின் முகத்தில் அவனை யறியாது ஏதோ ஒருகவலையின்ரேகை படர்ந்திருந்தது

அவனுடைய தகப்பனர் வருபவர்களையெல்லாம் உபசரித்து வரவேற்றுப் பேசுகிறாரேயன்றி திடீர் என்று அவர் முகத்தில் காணும் மாறுதல்களும் ஒருவிதமான பயங்கரத் தோற்றமும் அவராலேயே கட்டுப்படுத்த முடியவில்லை. அந்தரங்கமான... ஆழத்தில்...என்ன மாய உலகம்! அவன் இன்று நிரபராதி... மகாபரிசுத்தவான்...என்கிற போர்வையில் மறைந்து கொண்டு வெகு நல்லவனாக உலகத்திற்குக் காணப்படும் இவனே...அந்த உலகளந்த பெருமானின் முன்பு...ஆம் ஆம்...சந்தேகமில்லாமல் மகத்தான அபராதி.........தீராதகுற்றத்தைச் செய்த சண்டாளன்......கொலைபாதகன்.........ஒரு குடியைக்கெடுத்த கிராதகன்...என்றுதானே கல்லின்மேல் எழுத்துப்போல்பதிந்திருக்கும். இந்த பணத்தால்...இந்த பகட்டால்...இந்த திரை மறைவால் அவனிடம் மறைக்க முடியுமா! இந்த உத்தம புத்தி அப்போதிருந்திருக்குமாயின், வலியவந்தால்கூட தன் கால் செருப்பாலடித்து விலக்கி புத்தி புகட்டியிருக்கமாட்டானா? பகவானே! அவன் நிரபராதியல்ல...மகத்தான அபராதி...... கொடும் பாவம் புரிந்த அபராதி...அகிலாண்ட கோடி ப்ரம்மாண்ட நாயகனாகிய நீ மனது வைத்தால் ஏதோ ஒருவாறு உனது ஒப்புயர்வற்ற க்ஷமாகுணத்தினால் ஒரு திவலை ஆபத்தையாவது போக்கி ரக்ஷிக்கலாமல்லவா!....உன் ரக்ஷகத்தனத்தினால் அந்த அபராதியை மன்னித்து அருள் புரி...என்று இதயபூர்வமாக வேண்டுகிறார்.

சக்குவுக்கு பழய விஷயம் எல்லாம் மறந்துவிட்டது. பெற்ற தாயாருக்கும் எல்லாம் கனவுபோல் தோன்றி மறந்தே போய்விட்டது. இப்போது காணும் சந்தோஷ உணர்ச்சியே அவள் இதயத்தில் பதிந்து நித்யகல்யாணவைபோகசுகத்தைக் கொடுத்தது. அவளுடைய நிரம்பிய இதயம் தம்பதிகளை வாழ்த்தி சர்வமங்களமும் கொடுத்து ரக்ஷிக்கும்படி ஆசிர்வதித்து மகிழ்ந்தது.

மங்களம்.

மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

-திருக்குறள்

# ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய 108 நாவல்கள்

வைதேகி
பத்மசுந்தரன்
சண்பகவிஜயம்
ராதாமணி
கௌரீமுகுந்தன்
வசந்தகிருஷ்ணன்
கோபாலரத்னம்
மாதவமணி
சாருலோசனா
சுகந்த புஷ்பம்
வீரவஸந்தா
சாமநாதன்
ருக்மிணீகாந்தன்
ஸாரமதி
கன்னசேகரன்
பரிமளகேசவன்
மூன்று வைரங்கள்
உத்தமசீலன்
* கதம்பமாலை
* ஸரஸராஜன்
காதலின் கனி
சோதனையின் கொடுமை
படாடோபத்தின் பரிபவம்
தியாகக்கொடி
விஜயஸஞ்சீவி
பக்ஷமாலிகா
புத்தியே புதையல்
மங்கள பாரதி
பட்டமோ பட்டம்
சுகுணபூஷணம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
அம்ருததாரா
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்

ப்ரேமப்ரபா
அன்பின் சிகரம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
வானக்குயில்
உளுத்த இதயம்
மகிழ்ச்சி உதயம்
ஜீவியச் சுழல்
மாலதி
வத்ஸகுமார்
கஸ்தூரி திலகம்
கானல் நீர்
படகோட்டி
ஆத்மசக்தி
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்
கருணாலயம்
புகழ்மாலை
தயாநிதி
சுடர் விளக்கு
கலாநிலயம்
ஞானதீபம்
வாத்ஸல்யம்
க்ருபாமந்தம்
மதுபகீதம்
பிரார்த்தனை
இதய ஒலி
மலர்ந்த இதழ்
அமுதமொழி
பிரதிகலனா
ஆசைப்ரவாகம்
வாழ்க்கைத்தோட்டம்
அபராதி
வெளுத்தவானம்
ப்ரதிபலன்
பஞ்சத்துப்பதுமை
பெண் தர்மம்
உண்மைச்சுதந்திரம்

தெய்வீக ஒளி
சிலாசாஸனம்
புதுமைக்கோயில்
பொன்த்தாமரை
தபால் விநோதம்
ஓவியப்பரிசு
இனியமுரசு
ஆண்டவனின் அருள்
இசைப்புயல்
அமரத்யாகி
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
ஜீவநாடி
வீராங்கனை
கானகலா
தூயஉள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப் பரிசு
ரோஜா மலர்
இந்திரமோஹனா
பாதாஞ்ஜலி
அமைதியின் அஸ்திவாரம்
நம்பிக்கை பாலம்
சாந்தியின்சிகரம்
கடமையின் எல்லை
குலதனம்
தைரியலட்ச்மி
சுதந்தரப்பறவை
நிர்மல நீரோடை

இந்த 108 நாவல்களில் பெரும்பாலும் தற்போது கைவசமில்லாததால், தேவையான புத்தகங்கள் கிடைக்குமா என்றும், தற்கால விலையைப்பற்றி எழுதித் தெரிந்துகொண்டு பிறகு பணமனுப்பவும்.

# ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய 108 நாவல்கள்

| | | |
|---|---|---|
| வைதேகி | ப்ரேமப்ரபா | தெய்வீக ஒளி |
| பத்மசுந்தரன் | அன்பின் சிகரம் | சிலாசாஸனம் |
| சண்பகவிஜயம் | சாந்தகுமாரி | புதுமைக்கோயில் |
| ராதாமணி | மாயப்ரபஞ்சம் | மனத்தாமரை |
| கௌரீமுகுந்தன் | சந்திரமண்டலம் | தபால் விநோதம் |
| நவநீதகிருஷ்ணன் | வானக்குயில் | ஓவியப்பரிசு |
| கோபாலரத்னம் | உளுத்த இதயம் | இனியமுரசு |
| மாதவமணி | மகிழ்ச்சி உதயம் | ஆண்டவனின் |
| சாருலோசனா | ஜீவியச் சுழல் | அருள் |
| சுகந்த புஷ்பம் | மாலதி | இசைப்புயல் |
| வீரவஸந்தா | வத்ஸகுமார் | அமரத்யாகி |
| சாமநாதன் | கஸ்தூரி திலகம் | காலக்கண்ணாடி |
| ருக்மிணிகாந்தன் | கானல் நீர் | ஜெயபேரிகை |
| ஸாரமதி | புடகோட்டி | ஜீவநாடி |
| களிணசேகரன | ஆத்மசக்தி | வீராங்கனை |
| பரிமளகேசவன் | உணர்ச்சி வெள்ளம் | கானகலா |
| மூன்று வைரங்கள் | சந்தோஷ மலர் | தூயஉள்ளம் |
| உத்தமசீலன் | கருணாலயம் | ஸௌபாக்யவதி |
| * கதம்பமாலை | புகழ்மாலை | ப்ரேமாச்ரமம் |
| * ஸரஸராஜன் | தயாநிதி | நியாயமழை |
| காதலின் கனி | சுடர் விளக்கு | அருணோதயம் |
| சோதனையின் | கலாநிலயம் | மனச்சாட்சி |
| கொடுமை | ஞானதீபம் | ப்ரபஞ்சலீலை |
| படாடோபத்தின் | வாத்ஸல்யம் | வெற்றிப் பரிசு |
| பரிபவம் | க்ருபாமந்திர் | ரோஜா மலர் |
| தியாகக்கொடி | மதுரகீதம் | இந்திரமோஹனா |
| ஜெயஸஞ்சீவி | பிரார்த்தனை | பாதாஞ்ஜலி |
| பஷமாலிகா | இதய ஒலி | அமைதியின் |
| புத்தியே புதையல் | மலர்ந்த இதழ் | ஆஸ்திவாரம் |
| மங்கள பாரதி | அமுதமொழி | நம்பிக்கை பாலம் |
| பட்டமோ பட்டம் | பிரதிக்ஞை | சாந்தியின்சிகரம் |
| சுகுணபூஷணம | ஆசைப்ரவாகம் | கடமையின் |
| பிச்சைக்காரக் | வாழ்க்கைதோட்டம் | எல்லை |
| குடும்பம் | அபராதி | குலதனம் |
| ஆனந்தஸாகர் | வெளுத்தவானம் | தைரியலக்ஷ்மி |
| அம்ருததாரா | ப்ரதிபலன் | சுதந்திரப்பறவை |
| இன்பஜோதி | பவித்திரப்பதுமை | நிர்மல நீரோடை |
| ராஜமோஹன் | பெண் தர்மம் | |
| அநாதைப்பெண் | உண்மைசித்திரம் | |

* 108 நாவல்களில் பெரும்பாலும் தற்போது கைவசமில்லாததால், தேவையான புத்தகங்கள் கிடைக்குமா என்றும், தற்கால விலையைப்பற்றி எழுதித் தெரிந்துகொண்டு பிறகு பணம் அனுப்பவும்.